BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர் ORU PAPER

Paper - 02 Issue - 30 02 Friday September 2005 விற்பனைக்கல்ல

ஒசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

futture homes

Mortgage Specialist

* Residential mortgages
* Remortgages
* Commercial Mortgages
* Secured Loans
* Life insurance
* Building Insurance
* Public Liability Insurance

Tel: 0845 126 0622

Fax: 0208 830 4111

E-mail: info@futturehomes.co.uk

Future Homes is regulated & authorised by the Financial Services Authority

---

EasyFly
Travels & Tours Ltd

The lowest fares to Worldwide destinations on major airlines

India and Far East Specials

Sri Lankan Airlines £360 + Taxes
valid 20th August to 30 November
(No Stopover in Colombo)

Seat sale to India on Jet Airways
£310 + Taxes

Fly to Toronto From
Gatwick or Manchester
just £250 PP (return Inc. Taxes)

Ask for more details and for reservation please

Call: 0208 459 55 11

Fares for Colombo Return (LHR-CMB-LHR)

Sri Lankan Airways	£410 + Taxes (01 Aug 05 - 18 Sep 05)
Sri Lankan Airways	£450 + Taxes (20 Aug 05 - 30 Nov 05)
(with a Free stop over to Madras/Bangkok/Singapore/Hongkong/Malaysia)	
Etihad Airways	£360 + Taxes (Valid till 20th Aug-30th Nov)
Qatar Airways	£360 + Taxes (valid till 18th Sep)
Qatar Airways	£390 + Taxes (valid 20th Aug till 30th Nov)
Emirates	£560 + Taxes (Valid till 09th December)

Unbeatable Flight only offers

New York - Direct Flight from just £199
Toronto - from 205+Taxes
Amsterdam: from only £69 - from Heathrow
and many more fantastic deals from Easyfly
Call us on 0208 459 5511

SriLankan Airlines

Emirates

الإتحاد ETIHAD AIRWAYS

QATAR AIRWAYS القطرية

Seat Sale on QATAR AIRWAYS travel till September (London - Colombo)

£360 + Taxes



17A Walm Lane Tel: 020 8459 5511
Londo Fax: 020 8830 4111
Email: info@easyflytravel

You can count on us

for • Canned & Bottled Beers • Wines & Champagne • Spirits • Soft Drinks • Confectionery • Groceries • Tobacco

Dhamecha GROUP

The Cash & Carry that Cares

Barking
Croydon
Enfield
Watford
Wembley

W: www.dhamecha.com E: info@dhamecha.com

STRICTLY TRADE ONLY

ஐக்கிய இராச்சியத்தில் சட்டரீதியான ஆவணங்கள் இல்லாதவரா?
நீங்கள் அடைக்கலம் தேடிவந்து தற்போது நாடுதிரும்பும் எண்ணம் உள்ளவரா?
உங்கள் விசா முடிந்தபின்பும் தங்கியுள்ளவரா?
களவாகவோ மறைவாகவோ உள்ளே கடத்தப்பட்டவரா?

IOM • OIM

இதில் ஏதாவது ஒன்று
உங்களுக்கு
ஏற்றதாக அமையுமானால்
IOM உடன்
தொடர்புகொள்ளுங்கள்

எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும்

தாமகவே நாடு திரும்பியவர்கள் IOM உதவியுடன்

தம் சொந்த முயற்சியில் வாழ்கின்றனர்

IOM சம்பந்தமாக மேலதிக தகவல் தேவைப்படின் லண்டன் IOM 0800 783 2332 தொலைபேசிமூலம் பெற்றுக்கொள்ளலாம். எங்கள் அலுவலகத்திற்கு (21 westminster palace garden, artillery row.london SW1P 1RR) திங்கள் முதல் வெள்ளிவரை காலை10.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரையில் முன்னியமனம் பெறாமலே வந்தும் போகலாம்.

IOM London
Free Phone: 0800 783 2332
Tel: 0207 233 0001
www.iomlondon.org

Safe Haven Yorkshire
Sheffield: 00114 256 1033

NERS
North-East: 0191 510 8685
www.refugee.org.uk

Options
Glasgow: 0141 557 2355
www.ymcaglasgow.org

Choices:
Freephone: 0800 917 2719
London: 0207 654 7700
Manchester: 0161 233 1200
Leeds: 0113 244 534
Leicester: 0116 261 4846
www.refugee-action.org.uk

மக்கள் அலைமோதிய ஆவணி இரத பவனி

கடந்த ஐந்து வருடங்களாக ஓகஸ்ட் வைப்பக விடுமுறை தினத்தில் நடைபெறும் முற்றிங்முத்துமாரி அம்மன் இரத பவனி இவ்வாண்டும் வெகுசிறப்பாக நடைபெற்றது. திங்களன்று காலை ஐந்து மணிக்கு ஆலயத்தில் அம்பாளுக்கு அபிசேகம் நடைபெற்றது. சிறப்பு பூசை ஆராதனைகளை தொடர்ந்து அம்பாள் விக்கிரகம் தேரேற்றப்பட்டு முற்றிங் பிரதான வீதி, மிச்சம் வீதி வழியாக காவடியாட்டத்துடன் லண்டன் வீதியிலுள்ள Gorringe Park மைதானத்தை காலை 10 மணியளவில் வந்தடைந்தது. மாலை 5மணிவரை இரதம் அங்கு தரித்திருக்க, அம்பாளுக்கு தொடராக அர்ச்சனைகள் நடைபெற்ற வண்ண மிருந்தது. மைதானத்தில் பரதநாட்டியம் உட்பட கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. லண்டனின் பல பாகங்களிலிருந்து வந்து பெருந்திரளான மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.



வெற்றி நமதே!

வன்னி தயாராகிறது!
தெரியுமண்ணா எனக்கு
ஆனால் நீயுமா?
வீடும் வேலையும் என்று
இருப்பவன் நீ
மனிசி பிள்ளைகள் என்று
உழைப்பவன் நீ
எப்படி அண்ணா இது
உன்னால் கூடிற்று?
எண்ண மேனி சிலிர்க்கிதண்ணா
மெல்லக் கண்ணீர்
துளிர்க்கிதண்ணா – நான்
என்ன செய்கிறேன்
கேட்கிதண்ணா – வந்து
போகவும் முடியாது – நின்று
பார்க்கவும் கூடாது
அன்பின்
என் அண்ணா!
உனக்கு முன் நான் துச்சமடா –
இருப்பினும்
தமிழ்த் தாயின் எச்சமடா!
மறந்து விடாதே!
தம்பி இருக்கிறேன்! தம்பிகள்
இருக்கிறோம்!
நண்பர் உறவுகள் என்று லட்சமாய்
இருக்கிறோம்
பக்கபலமாய் நாம் என்றும்
உழைப்போம்!

வாழ்கிறது தமிழ்!
வெல்கிறோம் தமிழீழம்!



வடமராட்சி ஆழியவளையில் 29.08.05 அன்று துணைப்படைப் பயிற்சியினை மக்கள் நிறைவு செய்து வெளியேறி நாள்

FASTCASH
WE NOW SEND MONEY TO THE FOLLOWING COUNTRIES
FOR ONLY £10
INDIA, CANADA, USA
AUSTRALIA, EUROPE
+ 120 COUNTRIES
RING FOR DETAILS
020 8886 4488
YOU DON'T HAVE TO COME TO US
PAY AT BARCLAYS
FOR INSTANT FASTCASH TRANSFER TO SRI LANKA
A/C NAME : C.E.C LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47

FAST MONEY TRANSFERS TO SRI LANKA
YOUR TRANSFER IS MUCH SAFER WITH FASTCASH, THAN ANY NEWSAGENT OR A GROCERY STORE
இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி
அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய
கூடியதான வசதிகள்.
Transfer fees from only £5*
FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS
*FOR MORE INFORMATION CALL
IMMEDIATE COLLECTION
CREDIT TO ANY BANK ACCOUNT
UNBEATABLE EXCHANGE RATES
ONLINE TRACKING & RECEIPT
NO CHARGES IN SRI LANKA
CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.
020 8886 4488
FASTCASH WEBSITE FOR RATES:
WWW.CECLTD.BIZ
No. 125 - 127, Bramley Road, Oakwood, London N14 4UT , E - Mail : info@cecltd.biz Fax : 020 8886 4499
HSBC
Bank of Ceylon
PEOPLE'S BANK
SEYLAN

உராய்வு கவிதைத் தொகுதி வெளியீடு

இளம் கவிஞர் சஞ்சீவ்காந்தின் கவிதை களடங்கிய 'உராய்வு' கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கடந்த சனியன்று ஈலிங் சிறி கனகதுர்க்கை அம்மன்கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. மாலை 3.30 மணிக்கு முத்திரைகள், நாணயங்கள், கேலிச்சித்திரங்கள் ஆகியவற்றின் கண்காட்சியுடன் விழா ஆரம்பமானது.

நூல் வெளியீட்டு வைபவத்தை திருமதி. சங்கரலிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அகவணக்கத்தை தொடர்ந்து, செல்வி அபிராமி இராஜமனோகரன். தமிழ் வாழ்த்துப் பாடினார். நாடக ஆசான் திரு. தாசீசியஸ் விழாவை தலைமையேற்று நடாத்தினார். தாசீசியஸ் அவர்கள் ஐ.பி.சி தமிழ் வானொலியில் ஆரம்பித்து வைத்த கவிதைக் களமே புலத்தில் சஞ்சீவ்காந் போன்ற இளம் கவிஞர்களை உருவாக்க உதவியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வாழ்த்துரையை திரு. பாலகுமாரக் குருக்களும் வெளியீட்டுரையை திரு. இராச மனோகரனும் நிகழ்த்தினர். திரு. பற்றிமாகரன், அப்பால் தமிழ் இணையத்தின் திரு. கி.பி.அரவிந்தன் ஆகியோர் ஆய்வுரை வழங்கினர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

TSSA நடாத்திய கோடை விளையாட்டு விழா

தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (TSSA) நடாத்திய கோடை விளையாட்டு விழா Southall Warren Farm, Windmill Lane விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கள் நடைபெற்றது. காலைமுதல் மாலைவரை நடைபெற்ற இவ்விழாவில் துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் (Volley ball) ஆகிய போட்டிகளுடன். ஈழத்தமிழர் பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டு (தாச்சிப் போட்டியும்) இடம் பெற்றன.

வெற்றியீட்டிய அணிகளின் விபரம்:

1. துடுப்பெடுத்தாட்டம் (வயது வரையற்ற அணி): வல்வை கம்பர் மலை மகா வித்தியாலயம். இரண்டாவது இடத்தில் பெரிய பாளையம் மகா வித்தியாலயம்.

2. துடுப்பெடுத்தாட்டம் (40 வயதுக்கு மேற்பட்டோர்): யாழ் பரியோவான் கல்லூரி, இரண்டாவது இடத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி

3. துடுப்பெடுத்தாட்டம் (16 வயதுக்கு உட்பட்டோர்): தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி,

இரண்டாவது இடத்தில் மட்டு சிவானந்த வித்தியாலயம்

4. துடுப்பெடுத்தாட்டம் (14 வயதுக்கு உட்பட்டோர்): உரும்பிராய் இந்துக்கல்லூரி

இரண்டாவது இடத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி

5. வலைப்பந்தாட்டம் (வயது வரையற்ற அணி): யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இரண்டாவது இடத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரி

6. வலைப்பந்தாட்டம் (16 வயதுக்கு உட்பட்டோர்): பிறென்ற் தமிழ்ச்சங்கம், இரண்டாவது இடத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரி

7. வலைப்பந்தாட்டம் (14 வயதுக்கு உட்பட்டோர்): கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை, இரண்டாவது இடத்தில் பிறென்ற் தமிழ்ச் சங்கம்.

8. உதைபந்தாட்டம் (10 வயதுக்கு உட்பட்டோர்): தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இரண்டாவது இடத்தில் யூனியன் கல்லூரி

9. கரப்பந்தாட்டம்: காண்டீபன் அணி, இரண்டாவது இடத்தில் இளங்கதிர் அணி

10. கிளித்தட்டு: குமாரநகர் எழுச்சியணி, இரண்டாவது இடத்தில் கைதடி ஐக்கிய விளையாட்டுக்கழகம்

பதினான்கு வருடங்களாக நடைபெறும் இப்போட்டிகளில் இம்முறை ஐம்பதுக்கு மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

செய்தித் துணுக்குகள்

தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் விதத்தில், 'ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தைகள்' என்று ஒரு பட்டியலை பிரித்தானிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சாள்ஸ் கிளார்க் வெளியிட்டுள்ளார். இப்பட்டியலில் கூறப்பட்ட நடத்தைகளை மேற்கொள்ளும் வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்படவோ அல்லது பிரித்தானிய நாட்டினுள் நுளையவோ அனுமதி மறுக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனிதஉரிமை இயக்கங்கள் இப்பட்டியலில் கூறப்பட்ட நடத்தைகளும், தீவிரவாதிகள் யார் என்பதும் ஒரு கட்டுக்கோப்புக்குள் அடங்காத விளக்கமற்ற சொற்தொடர்களாக உள்ளன என கண்டனம் தெரிவித்துள்ளன.

■ ■ ■

கொன்சவேற்றிவ் அரசாங்கத்தின் முன்னாள் நிதி அமைச்சர் திரு. கென்னத் கிளார்க் நடைபெற இருக்கும் கொன்சவேற்றிவ் கட்சியின் தலைமைப் பதவிக்குத் தானும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். இது இவருடைய மூன்றாவது முயற்சியாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாணயமான யூறோவுடன் பிரித்தானியாவின் நாணயமான பவுண்ஸ் இணையவேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தமையே இவருடைய முந்தைய தோல்விகளுக்குக் காரணமாக அமைந்தது என இவரது ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

■ ■ ■

லண்டனில் வருடாவருடம் நடைபெறும் நொட்டிங்கில் களியாட்டம் இவ்வருடம் வழமைபோல் ஆகஸ்ட் மாத வங்கிவிடுமுறையான 29ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 5லட்சம் மக்கள் கலந்து கொண்டிருக்கலாமென கணிக்கப்பட்டுள்ளது. இது எதிர்பார்த்ததை விட குறைவான எண்ணிக்கையென நம்பப்படுகிறது. இதற்கு யூலை மாதத்தில் லண்டனில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளே காரணமாக இருக்கலாம் என இதை ஒழுங்கு செய்த குழுவினர் கூறியுள்ளனர். இது 41வது முறையாக நடைபெற்ற களியாட்டமாகும்.

■ ■ ■

இங்கிலாந்து கிறிக்கெற் அணிக்கும் அவுஸ்திரேலியா அணிக்கும் வருடாவருடம் நடைபெறும் டெஸ்ட் கிறிக்கெட் போட்டியில் இவ்வருடம் இங்கிலாந்து முன்னணி இடத்தில் உள்ளது. 5 மாட்ச்களைக் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து 2 போட்டிகளிலும் அவுஸ்திரேலியா 1 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்று முடிவடைந்தது. இதனால் 5வதும் கடைசிப்போட்டியும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். லண்டன் ஓவல் மைதானத்தில் இம்மாதம் 8ம் திகதி தொடங்க இருக்கும் இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெறாத பட்சத்தில் 'ஆசெஸ்' (Ashes) என சொல்லப்படும் வெற்றிக் கிண்ணத்தை இங்கிலாந்து பெற்றுக்கொள்ளும். இது 1986-87 ஆம் ஆண்டுகளின் பின் இங்கிலாந்து அணி பெற்றுக்கொள்ளும் முதலாவது 'ஆசெஸ்' வெற்றியாக அமையும்.

■ ■ ■

கற்றீனா (Katrina) எனப்படும் புயல் அமெரிக்காவின் கரையோர மாகாணங்களான லூசியான, மிசிசிப்பி ஆகியவற்றை துவம்சம் செய்துள்ளது. 25 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் நாசத்தை உண்டாக்கியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. பொருட் சேதத்தை விட உயிர் சேதம் நூற்றிற்கு மேற்பட்டிருக்கலாம் எனவும், இதுவரை சரியான கணிப்பை எடுக்கமுடியாமலும் இருப்பதாகவும் நகர அவசர சேவை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இப் புயல் அமெரிக்காவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் இடங்களை பாதித்திருப்பதால் எண்ணெய் உற்பத்தியில் தேக்கம் உண்டாகியுள்ளது. அதனால் உலக எண்ணெய் விலை மேலும் அதிகமாகலாம் என்றும் இது உலக பொருளாதாரத்தில் தாக்கத்தை உண்டாக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

A twist to the 'NEWS'

I was delighted to hear that the Tamil Eelam security forces shot dead a Sri Lankan terrorist leader who was evading arrest for the past ten years. Despite living in a highly fortified hideout, guarded by a number of his fellow terrorists, the marksmen scored a bulls-eye shattering his heart and sending his supporters heart broken too.

This terrorist who was a Tamil Christian masqueraded as a Sinhala Buddhist, played for the gallery and achieved cheap popularity. Not only he aided and abetted other Sri Lankan terrorist leaders in committing attrocities on the people of Tamil Eelam, but also carried out false propaganda to cover up and legitimise these acts of terror.

It was classic case of divine marvel, because this ASURAN who went for THEERTHAM (swim) ended up parading the streets in a THER (hearse). Since he had always been a spoiler, elimination of this terrorist will certainly augur well for peace. May he enjoy the bliss of NIBBANA together with other Sri Lankan terrorists who were despatched there earlier.

- R.G.S.

ASTRO PALMIST

கனகதுர்க்கா மாதா ஜோதிட நிலையம்

குரு	செவ்	சுக்கி	புதன்
சனி	கிரக நிலை		சந்த்
சனி			சூரியன்
குரு	செவ்	சுக்கி	புதன்

சுவாமி வெங்கடாசலம் சாஸ்திரி இலண்டனுக்கு வருகை தந்துள்ளார். ஜாதகம், கைரேகை பார்த்து நடந்தது, நடக்கப் போவதை துல்லியமாகக் கணித்துச் சொல்லப்படும். இவர் பல உலக நாடுகள் விஜயம் செய்துள்ளார். பிறப்பு முதல் ஆயுள் வரையிலான நற்பலன்களை விபரமாகக் கூறுவார். முகராசி சாஸ்திரத்தில் பிரயல்யம் வாய்ந்தவர். குடும்பம், விபாபாரம், கல்வி, காதல், விசா, திருமண விடயங்கள் குறுந்தைச் செல்வங்கள் கிடைக்கும் காலம் பற்றிய விபரங்கள் தெளிவாகவும், விரிவாகவும் விளக்குவார். உங்கள் அனைத்தும் பிரச்சனைகளுக்கும் சுலபமாகத் தீர்வு காணலாம். நவக்கிரகங்களுக்கான சாந்தி கூறுவார். ராசி அத்ஸ்டக் கற்கள் பற்றிய விபரங்களை அறிவோடு அவரிடமே பெற்றுக்கொள்ளலாம்.

C/O CORNERS
274 Mitcham Road, Tooting SW 17 9NT
(Near Yall House)
Monday to Wednesday

← VISITING PLACES →
Mob: 07958 655 018
Opening Hours: 9 am-8 pm

SAKONIS
BEST FRUIT & VEG
204-208 Upper Tooting Road, Tooting SW17 7EW
(Near Sri Muthumari Amman Temple)
Thursday to Sunday

புலவு

தமிழர் தெருவில் நிக்க

ஒரு விடயத்திற்காக மட்டும் இதனை எழுதுகிறேன். அது என்னவெனில், கடந்த திங்கள் நடைபெற்ற விளையாட்டு விழாவில் ஒரு புதுப்பழக்கத்தினை காணக்கூடியதாக இருந்தது. அது என்னவெனில் விளையாட்டுக்களில் கலந்துகொள்ள வந்த சில குழுக்கள் தங்களுடன் சிங்கள விளையாட்டு வீரர்களையும் சேர்த்து போட்டிகளில் பங்குபற்றினார்கள்.

இது இடையில் சில பிரச்சனைகளை ஏற்படுத்த விளையாட்டு விழாவின் இறுதிப்போட்டி நடத்தப்படவில்லை. காரணம் இறுதிச்சுற்றுக்கு வந்தகுழுவில் சிங்களவர் இருந்தமை. அது குறித்து எல்லாம் நான் கவலைப்படவில்லை. தமிழர் விளையாட்டு விழா என்று சொல்லிவிட்டு சிங்களவர்களையும் அதற்குள் சேர்த்துக் கொண்டு வந்து ஆடிய அந்த செம்மறிகளை நினைத்துத் தான் கவலைப்படுகிறேன். அதுகள் எந்த லோகத்தில் இருந்து இங்கு வந்ததுகள் என்று தெரியவில்லை. இது இப்படியே போனால் தமிழர் தெருவில் நிக்க அடுத்த வருடம் சிங்களவர்கள் தான் தமிழர் விளையாட்டு விழாவை நடத்துவார்கள்.

பரணிதரன்
Walthamstow

ஒருபேப்பர்

கொண்டுவந்தார் ஒரு பேப்பர்

நாட்டைக் குழப்புதற்கென்றே புறப்பட்ட கூட்டம்

செய்திகள் ஒன்றுமே இல்லை - வெறும்

சோதாரம் போகின்ற தமிழையே கேட்டம்

என்னத்தைச் செய்து விட்டீர்கள் - இது

இல்லையென்றால் என்ன இழப்போமோ தேட்டம்

சொல்வதை நான் இன்று சொன்னேன்

இனிச்செய்வதும் சொல்வதும் அவரவர் நாட்டம்.

காக்கை வன்னியன்
Croydon

நன்றி எல்லாளன்!

ஆவணி 19ம் திகதி வெளிவந்த இதழில், எல்லாளன் எழுதிய கருத்து, என் போன்றவர்களின் மனதிலும் எழுந்த துண்டு அக்கருத்தை எழுத்துருவில் கொண்டு வந்தமைக்கு எல்லாளனுக்கு எமது நன்றி. இக்கருத்து சிலவேளை எமது பாரம்பரிய பண்பாட்டுக்கு ஒத்து வராது போகலாம். ஆனால், உண்மையில் எமது இனம் தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்வது கண்கூடு. சிந்திக்க வைக்கும் கருத்துக் களுக்கு ஒரு பேப்பர்க்கு நன்றி அன்புடன்...

உமா மகாலிங்கம்
wimbledon

மெகா பொய்

மகாபாரதம் ஒரு மெகா பொய்!!! அருமையாக எழுதி இருந்தீர்கள். இப்படியாகத்தான் எங்களை கடந்த காலங்களில் பலர் ஏமாற்றி விட்டார்கள். தொடர்ந்தும் ஏமாற்றி வருகிறார்கள். முடிந்தால் இராமாயணம் பற்றியும் அதன் உண்மைத்தன்மைகள் பற்றியும் எழுதுங்கள்

பரதன்
Eastham

கமரா கருணா

கருணா எழுதும் கமரா மிகவும் பிரியோசனமான கட்டுரையாக இருக்கிறது. ஆனால் அடுத்த இதழோடு ஏன் முடிக்கிறீர்கள். தொடர்ந்து அவரை அனுமதிப்பதால் உங்களுக்கு என்ன குறைந்து விடப்போகிறது. தயவு செய்து அவருடைய ஆக்கங்கள் எதாகிலும் பிரசுரிக்கவும். நன்றி

கிங்ஸ்லி
Croydon

Dear Oru Paper,

I am a young reader of your paper. The short story published in the last issue showed me clearly the ground situation prevailing in Tamil Eelam. Such stories give me a better picture of the life of those people more than all the news items and information available on web sites. I congratulate you for publishing that story and request you to publish more stories written by people living in Tamil Eelam.

Pratheep
New Malden

எலக்சன்

பாலச்சந்திரன் அவர்களின் எங்கள் காலத்து எலக்சன் கட்டுரை சிறப்பாக இருந்தது. பழைய நினைவுகள் சிலவற்றினை எனக்கும் நினைவுபடுத்தி இருந்தார். நன்றி சகோதரன்.

சுப்ரமணியம்
Ilford

மிருகங்கள்கூட

சைவ நிகழச்சியில் மாமிச உணவு பரிமாறலாமா? 19-08-05 ஒரு பேப்பரில் மேற் குறிப்பிட்ட தலையங்கத்தை வாசித்தேன். இது லண்டனில் சர்வ சாதாரணமாக நடக்கும் சம்பவம் உங்களுக்கு இப்போதான் இது தெரியவந்துள்ளது. ஊர்களுக்கு உபதேசம் உனக்கு இல்லை என்ற பழமொழிதான் நினைவுக்கு வந்தது. சுத்த சைவமாக உள்ள குடும்பமே வீட்டில் மாமிச உணவு சமைப்பது வழக்கமாக போய் விட்டது. காரணம் கேட்டால் நண்பர்கள் உறவினர்கள் இன்று விருந்துக்கு வருவார்கள் அதனால் தான் அசைவ உணவு சமைப்பது என்று வருபவர்கள் அத்தனை பேரும் இந்து மதம் சார்ந்தவர்கள். அவர்கள் வெள்ளிக்கிழமை மட்டும்தான் சைவ உணவு உண்பார்கள் மற்றவை நாட்கள் எல்லாம் அசைவ உணவு.

சத்திய சாயிபாபா பக்தர்கள் கூட இறைச்சி கடையில் இருப்பார்கள் ஏன் என்று காரணம் கேட்டால் இன்று உறவினர்கள் சாப்பாட்டுக்கு வருவார்கள் அதனால்தான் இறைச்சி வாங்கினேன் என்று கூறுவார்கள். இப்படி 80% லண்டனில் நடக்கின்றது. இது புதினம் இல்லை. வெளிநாடு வந்ததும் தங்களையே மறந்து விடுவார்கள் 5 அறிவு படைத்த மிருகங்கள் கூட சைவ உணவுதான் உண்கிறது. இது சைவ மக்களுக்கு பாடமாக அமையட்டும்.

ஆனந்தஜோதி
Eastham

வில்லுங்கோ

ஒருவிசயத்தை வடிவா விளங்கிக் கொள்ளுங்கோ பிள்ளையள். என்னவும் ஒசியாக் கிடைச்சா அதுக்கு மரியாதை இல்லை! அதுபோலத்தான் உங்கட பேப்பரும் ஒசியாக்குடுத்தா நாளைக்கு மதிக்கமாட்டாங்கள் அதாலை ஒரு பவுனுக்கெண்டாலும் வில்லுங்கோவன். நான் வாங்குவன். சனமும் வாங்கும். உங்கட நன்மைக்குத்தான் சொல் லுறன் இதுக்குப் பிறகு எல்லாம் உங்கட இஸ்டம்

சங்கரப்பிள்ளை
Wimbledon

இன்டைக்குத்தான்

வணக்கம் ஒரு பேப்பர் ஆசிரியர் அவர்களுக்கு தங்கள் ஒரு பேப்பர் (என்ன பெயர் இது) முதன்முறை யாகப் பார்க்கும் அல்லது வாசிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். நல்ல பேப்பர். நகைச்சுவைப் பேர்வழிகள். விசயகாரர்கள். எல்லோரும் ஒரே கூரைக்குள்ளேயே வைத்திருக்கிறீர்கள். உங்கள் பத்திரிகை ஆரம்பித்து ஒரு வருடம் முடிந்த நிலையில்தான் என் கைக்கு எட்டி இருக்கிறது. Better late than never.

பத்மநாதன்
Mordon

போட்டாலும் போட்டீங்க

போனமுறை பேப்பரைப் பாத்தவுடன புல்லரிச்சுப் போட்டுது. முகப்புப் படத்தைத் தான் சொல்லுறன். அந்த மாதிரி இருந்திச்சுப் படம் அந்தச் சகோதரி லண்டனோ? நல்ல வடிவா இருந்தா எண்டு சொல்லுங்கோ! அது போதும் தொடர்ந்தும் இப்படியான படங்களைப் போடுங்கோ.

ரொபின்தன்
La Chapelle

சேர்பிற்றன் அக்காவும் விட்டகலாத அதிகார ஆசையும்

'சேர்பிற்றன் அக்கா'வை உங்களுக்கு தெரிந்திருக்கும். நீங்கள் இலங்கைத் தீவில் பிறந்து வளர்ந்தவரென்றால்.. அதுவும் முப்பது வயதைத் தாண்டியவர் என்றால் அவரை தெரிந்திருக்கும் சந்தர்ப்பம் அதிகம். சிலவேளை விரலை கீறி அக்காவுக்கு பொட்டு வைத்த அனுபவமும் உங்களுக்கு இருக்கலாம். அப்போ தெல்லாம் அக்காவை வட்டுக்கோட்டை அக்கா என தமிழ் கொங்கிரஸ்காரர்கள் செல்லமாக (உண்மையில் நக்கலாக) அழைப்பார்கள். அக்கா வட்டுக்கோட்டையை விட்டுப் புறப்பட்டு பலவருடமாகி விட்டதனாலும், இப்போ தென் மேற்கு லண்டனில் சேர்பிற்றன் பகுதியில் ஒதுங்கி விட்டதாலும், தொடர்ந்து வட்டுக்கோட்டை அக்காவென விளிக்க முடியாதுள்ளது,

அக்கா அந்நாளில் மகளிர் அணித் தலைவியாக இருந்தார். அக்காவின் கணவர் 'தளபதி'. எந்தப் பிராந்தியத்தின் தளபதி அல்லது எந்தப் படையணியை வழிநடாத்தியவர் என குறுக்குக் கேள்வி கேட்காமல் தொடர்ந்து படியுங்கள். எனக்கு இந்த கேள்விகளுக்கான பதில் தெரியாது என்பது உண்மைதான். ஆனால் தளபதியார் (அந்த காலத்து ஆள்தானே) நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில் வாளைத் தொட்டு சத்தியம் செய்தது மட்டும் தெரியும். அக்காவின் இரண்டு புதல்வர்களும் இளைய தளபதிகளாக (நடிகர் விஜய் மாதிரியில்லை) கருதப்பட்டார்கள். ஒருவர் துரையப்பாவை தானே போட்டுத் தள்ளியதாக அளந்து திரிந்தார். பின்னர் லண்டனுக்கு வந்த அசைலமடித்தார். மற்றவர் தமிழீழ தேசிய இராணுவம் என்ற பெயரில் இயக்கம் தொடங்கி விட்டு சரிவராமல் போக அந்தக் காசோடு லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

என்ன இருந்தாலும் அப்போது கணிசமான அதிகாரம் அக்காவின் குடும்பத்தின் கையிலிருந்தது. ஒரு பெரிய தொண்டர் படையும் விரலை கீறிக்கொண்டு நின்றது. காலம் மாறிவிட்டது. 'தளபதி' காலமாகிவிட்டார். அக்கா குடும்பமாக இங்கு வந்து சேர்ந்தாலும், பழைய அதிகாரமில்லாமல் நித்திரையின்றித் தவிக்கிறார். அக்கா குடும்பத்தின் பிடியிலிருந்து தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெரும்பகுதியும் வெளியேறிவிட்டது. மிச்சமிருப்பது ஆனந்த சங்கரியும், ஆவரங்கால் சின்னத்துரையும். அதிலும் சங்கரி, அக்கா குடும்பத்தை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

அக்கா குடும்பத்தின் புதிய கூட்டு சுவீடனில் ஒதுங்கி 'ஏசியன் ரிபியூன்' இணையத்தளம் நடாத்துகிற கே.ரி. இராசசிங்கம். ஒரு காலத்தில் துரையப்பாவின் அடிவருடியாயிருந்தவர்தான் இந்த ஏஜன்சிக்கார இராசசிங்கம். அவர் இன்னமும் மாறவில்லை ஆனால் அதிகாரம் இழந்ததால் அக்காவின் குடும்பம் மாறிவிட்டது. இவர்களுக்கு ஞானகுரு, இந்து பத்திரிகையின் இராம் அய்யங்கார். அவர் வழியே றோகாரர்கள்தான் அக்காவின் புதிய உறவுகள்.

அதிகாரம் பதவி எல்லாமே கைவிட்டுப் போனாலும் கிடைத்த வரை அனுபவிப்பதே அக்கா குடும்பத்தின் பழக்கமாகிவிட்டது. லண்டனில் தமிழ் முதியோர் நிலையமென்றுக்கு அக்கா போய்வருகிறார் அங்கும் அவர் தனது அதிகாரத்தை காட்டத் தவறுவதில்லை. அங்கு பணிபுரியும் ஊழியர்களை உண்டு இல்லை என பிளிந்தெடுத்துவருகிறார். தங்களது பணத்தில்தான் அவர்களுக்கு சம்பளம் கிடைக்கிறது என்பது அக்காவின் அதட்டல் கலந்த வாதம். அந்நிறுவனத்துக்கு அரசு வழங்கும் நிதி தங்களை வைத்து பராமரிப்பதால்தான் கிடைக்கிறது என்பதுதான் அந்த வாதத்தின் அடிப்படை. தானும் பிரித்தானிய அரச உதவிப் பணத்தில்தான் வாழ்கிறேன் என்பதும், இந்த பணத்தில்தான் நாடுநாடாக சென்று தளபதியாரின் திவசம் நடாத்த முடிகிறது என்பதும் அவருக்கு புரியாமல் இருக்காது.

'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் தவறேது' என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகளை 'சேர்பிற்றன் அக்கா' அன்றைக்கும் இன்றைக்கும் தவறாகவே புரிந்து வைத்துள்ளார்.

- உதயகுரியன்

Student visa from Sri Lanka

Education Advisor for University of East London

7 Years Experience

Expert advice and guidance will be given to obtain the visa

53 Students have obtained the visa since January 2005

Overseas Educational Consultant for
Rhazes Institute of Management Sciences

Call P.K. Suhanthan on 07905038050

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, SEPTEMBER 02, 2005, ISSUE 30

அபாயத்தின் மத்தியில் ஊடகத்துறை

கதிர்காமரின் கொலையை சாக்காக வைத்து இலங்தை தீவில் மீண்டும் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பின் ஆட்சியாளர்களை பொறுத்தவரை, அவசரகால நிலை அளவற்ற அதிகாரத்தை வழங்குவதனால் நாட்டை இக்கொடிய சட்டங்கள் கொண்டு ஆள்வதையே விரும்புகிறார்கள். ஆனால் இச்சட்டங்களால் தமிழ் மக்கள் அதிலும் குறிப்பாக சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்பவர்கள் நாளாந்தம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள்.

இப்போது இந்த ஒடுக்குமுறையாளர்களின் கவனம் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது திரும்பியுள்ளது. கடந்த வாரம் கொழும்பில் சுடரொளி பத்திரிகையின் பணிமனைகள் குண்டு தாக்குதல்களுக்கு உள்ளாகியதில் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். சுடரொளியில் பணியாற்றும் பத்திரிகையாளர் யுதுர்சன் ஜே.வி.பி யினராலும், பொலிசாராலும் தாக்கப்பட்டுள்ளார். பிறிதொரு சம்பவத்தில் அதே நிறுவனத்தை சேர்ந்த மேலும் இரு பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். வீரகேசரி நாளிதழின் செய்தியாளர் சுப்பிரமணியம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். வரும் நாட்களில் இப்பட்டியல் நீண்டு செல்லக்கூடும்.

சிங்கள பேரினவாதிகளின் பரப்புரைகளுக்கு தமிழ் ஊடகங்கள் பெரும் இடைஞ்சலாகப் படுவதால் ஊடகவியலாளர்கள் மீது இவ்விதம் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பிலிருந்து கொண்டு அரச படைகளின் உதவியுடன் மாதா மாதம் அறிக்கைகளை வெளிவிடும் இராசன் கூல்போன்றோருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் போன்ற மக்கள் மத்தியில் அபிமானம் பெற்ற பத்திரிகைகள் பிரச்சனையாகத் தெரிகிறது. சிறிலங்கா அரசுக்கும் அதே நிலைமைதான். விளைவு, இந்த ஊடகங்களுக்கு புலி முத்திரை குத்தப்பட்டு அவற்றின் மீதான தாக்குதல்கள் நியாயப்படுத்தப்படுகிறது. இவர்களை பின்பற்றி Associated Press போன்ற சர்வதேச செய்தி நிறுவனங்களும் சுடரொளி மீதான தாக்குதல்களுக்கு காரணம் கற்பிக்க முனைவது மகா அக்கிரமம்.

ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அனைத்துலக நிறுவனங்களோ ஒப்புக்கு அறிக்கைகளை விடுவதோடு நின்றுவிடுகின்றன. அவை சிறிலங்கா அரச இயந்திரத்தின் இவ்வுரிமை மீறல்களை வெளிக் கொணர்வதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் அபாயத்தை அனைத்துலக சமூகத்தின் முன் இனங்காட்டி அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரவேண்டிய பொறுப்பு புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு உள்ளது.

ஒரு பேப்பர்

வாசகப் பெருமக்களுக்கு வணக்கம்!

நலம்! நலம் அறிய அவா!

யாவரும் நலமுடன் இருக்க இறைவனை வேண்டுகிறோம்.

சிலபேர் இப்பதான் **ஒரு பேப்பர்** ரைப் பற்றித் தெரியுது எண்டு சொல்லினம்.

ஒரு வருசத்துக்குப் பிறகுதான் இப்பிடிச் சொல்லினம் எண்டு ஒரு பக்கத்தில கவலை இருந்தாலும், சொல்லினம் என்று நினைக்கிற போது உற்சாகச் சந்தோசம் இருக்கத்தான் செய்யுது. அதுக்கு எங்கட வாசகர்களுக்கு நன்றியை தெரிவிச்சுக் கொள்ளிறம்.

ஆனால் இருந்தாலும் இது ஓவர்!

பின்ன, முகப்புப் படத்தில ஒரு பிள்ளையப் போட்டனாங்க எண்ட உடன எல்லாரும் விழுந்தடிச்சு விசாரிக்கிறியள்.

அவ இங்கத்தயை ஆள் இல்லை!

அவ ஒரு பெரிய மொடல்! தேவையில்லாம உங்கட நித்திரையைக் குழப்பாதேங்கோ! அவ்வளவுதான் நாங்க சொல்லலாம்.

திருப்பித் திருப்பி எங்களிட்ட உங்களில சில ஆக்கள் பேப்பரைக் காசாக்குங்கோ எண்டு சொல்லிறியள்.

நாங்களும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறம்.

பேப்பர் சனத்திட்டப் போய்ச் சேரவேணும் அதுதான் எங்களுக்கு வேணும் சனத்திட்ட இருந்து காசில்ல!

அதைவிட **ஒரு பேப்பர்** க்கு காசு

எண்டு போட்டு உங்களுக்கும் எங்களுக்கும் இடையில ஒரு மதிலைக் கட்ட எங்களுக்கு விருப்பம் இல்லை.

பின்ன என்ன, நீ காசத் தா, நான் பேப்பர் தாரன் எண்ட மாதிரி எல்லோ போயிடும்

அடுத்த முறை சந்திப்பம்!

- **ஒரு பேப்பர்** காரன்கள்.

'Emergency' back again: Tamil Homeland trepidates

English version of the Lead Story in "Viduthalaippulligal", LTTE's official organ –July-August 2005

The state of 'Emergency' brought into effect now, is a subtle and horrendous strategy authorising the 'Sinhala' State forces to suppress the Tamil freedom struggle. During the last two decades and many times before, this piece of legislation has been ruthlessly made use of with meticulous precision by Colombo in enforcing 'wild governance' in the occupied areas of the Tamil homeland. Taking away peace from the Tamil people, this 'piece' from the Sri Lankan 'book', has caused the deaths of several thousands of their brethren and did provide immunity to the occupying forces to illegally arrest, detain, torture and make many of them just numeric in the list of 'disappeared'.

The government of Chandrika Bandaranaike Kumaratunga has brought the whole island under a state of emergency at a time when there is an environment of relative peace. A State of emergency and a Cease Fire Agreement (CFA) are two situations that cannot prevail concurrently. Proclamation of emergency therefore, has placed the CFA in grave risk.

> *A State of emergency and a Cease Fire Agreement (CFA) are two situations that cannot prevail concurrently*

The holistic intent of the CFA is to 'remove' the cloud of war in the Tamil homeland and bring about an environment that could be called peaceful. It is such a situation that would create an environment conducive for political negotiations. And, the peace process gets a fillip only in such an atmosphere, a matter that was comprehended and mutually agreed upon by the parties to the CFA.

But, the government of CBK, consequent to the assassination of Lakshman Kadirgamar, proclaimed a state of emergency and by extension, has created a war panic. Kadirgamar was killed in the capital city of Colombo, that too, in a High Security Zone. To apprehend assassin/s in such circumstances, is to bring about a sudden halt to all traffic in the city, may be after declaring a curfew and carry out a search operation. That is the most realistic exercise.

Reality being that, one smells a political intent behind the declaration of emergency this time round and therefore rejects the simplistic explanation that it is to apprehend the culprits. It is very clear that there is a political agenda 'necessitating' the declaration of emergency. CFA, it is apparent, is the target of the 'guns' of emergency. Similar to the fate of P-TOMS that has been sent into a state of paralysis in the Sri Lankan judicial exercise, the emergency has pushed the CFA into grave risk and the service of the Sri Lanka Monitoring Mission (SLMM) meaningless.

Hot on the heels of the declaration of emergency, a disabled, right arm amputee LTTE member has been 'arrested', but in actuality abducted, by the occupying military in Jaffna and taken to Colombo. The state of emergency precludes LTTE from discussing the matter with the military. Nor can the SLMM intervene in the matter. The state of emergency, as is usual in this island, provides to the forces, ample arbitrary powers to arrest, detain unlawfully, torture and kill. Tamil people are being arrested indiscriminately and at random all over the island. Large number of Tamils have been arrested and detained in Colombo. Fifteen women including two instructors, engaged in a vocational training project under the auspices of UNDP in Mannar, have been arrested by the forces without adducing any reasons. All in all, a tense and panicky situation is in the making in all parts of the Tamil homeland. Human rights activists here are powerless to be effective.

> *It is this attitude that pushes the Tamil people into abject frustration*

This time again, as history has witnessed several times in the past, all the Sinhala parties have extended their support to the government to 'pass' the bill, extended support only because it is aimed at suppressing the Tamil freedom struggle. This is a peculiar political phenomenon Tamil people are being asked to face again. It is this attitude that pushes the Tamil people into abject frustration, in that, whatever move, whoever initiate to bring peace, consolidates Sinhala parties to join hands in successfully nullifying it.

Talk about direct talks between the Government and the LTTE on strengthening the CFA, is on the air these days. If the state of emergency is to continue for long, something that is not unusual in Sri Lanka, one foresees a tragic situation in which even direct talks may not be of any use. It is therefore the yearning of all peace loving people that emergency should be lifted, and lifted immediately.

26 August 2005

கருத்து

கொஞ்சம் யோசிங்க . . .

எல்லாளன்
(ஒரு பேப்பர்)

சென்றமுறை எழுதியது பலருக்கு விளங்க வில்லை அல்லது நான் சொல்ல வந்ததை ஒழுங்காகச் சொல்லவில்லை. ஒருவர் நான் வாசித்தேன் ஒன்றும் விளங்கவில்லை என்று சொன்னார். ஆகவே சொல்ல வந்ததை சுருக்கி சொல்ல முயற்சிக்கிறேன். நாங்கள் ஒவ்வொரு வரும் எங்களுக்கான வாழ்க்கையினை முழுமை யாக வாழவேண்டும் அவ்வளவுதான். இதை நான் போட்டுக் குழப்பி விட்டேனோ தெரியவில்லை. சரி கடந்ததை அவ்விடத்தில் விட்டுவிட்டு நாங்கள் தொடருவோம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் பிள்ளை களுக்கும் பெற்றோருக்கும் நடுவே உள்ள இடைவெளி கொஞ்சம் பெரிதாக இருப்ப தாகவே தெரிகிறது (அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந் தாலும்). அதற்குக் காரணமாக பலவற்றைச் சொல்லலாம். மேற்கத்திய நாடுகளில் வாழுவது முக்கியமான காரணம் என்று படுகிறது. ஏன் புலம்பெயர்ந்த நாட்டுப் பிள்ளைகள் பற்றித் தொடங்குகிறார் என்று எண்ணம் வரலாம்.

அண்மையில் சில பிள்ளைகளுடன் ஓரே நேரத்தில் பேசும் வாய்ப்பு கிடைத்தது அவர்களிடம் பேசியதில் இருந்து பெற்றுக் கொண்டதை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

ஒருவர் சொன்னார், எங்கள் பெற்றோர் எங்கள் உணர்வுகளை மதிப்பதில்லை என்று சொல்லுவதை விட அதில் அவர்கள் அக்கறைப் படுவ்தில்லை என்று சொல்லவேண்டும். ஏனெனில் நாங்கள் வளர்ந்து வருகிறபோது எங்களுக்கு விருப்பமான ஆர்வமான துறை ஒன்றிற்குள் நுழைய முற்படும்போது அவர்கள் தமக்கென்று ஏற்கனவே ஒரு துறையினை வைத்துக்கொண்டு அதனைத் தொடர் என்றால் எப்படி நியாயமாகும் என்று. இப்படி அவர்கள் அடிக்கிக் கொண்டு போனார்கள். ஆக அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று மட்டும் தெரிந்தது.

பொதுவாக பெற்றோர் 'தாங்கள்' பிள்ளைகளாக இருந்த காலங்களை நினைவில் வைத்துக் கொள்வதில்லை. தாங்கள் எப்படியான சிக்கல்களுக்கு எல்லாம் முகம் கொடுத்தோம் என்று அக்கறைப் படுவதில்லை. தொடர்ந்து தாங்கள் இருக்கும் நிலையினை மட்டும் சௌகரியமானதாக வைத்திருக்க எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். எல்லோரும் அல்ல (மேற்சொன்ன பிள்ளைகளின் பெற்றோர்கள்).

அவர்கள் பிள்ளைகளை றப்பர் பந்து போலவும் பலவேளைகளில் நினைக்கிறார்களாம் குற்றச் சாட்டு வந்தது. இதை செய் இதை செய்யாதே இப்படி ஏராளம்... அவர்களும் மனிதர்கள் என்று நாம் உணர வேண்டும். என்ன சின்ன மனிதர்கள். நாம் சிறுவயதில் எப்படி நடத்தப்படவேண்டும் என்று எண்ணினோமோ அப்படி அவர்களை நடத்தினால் என்ன? அன்றாட வாழ்க்கையில் அவர்கள் பெரியவர்களாகிய எங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று நாம் எப்படி எதிர்பார்க் கிறோமோ அப்படி அவர்களும் தங்களுக்கு மரியாதை கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள். கொடுப்பதில் என்ன தவறு?

இந்த இடத்தில் சின்னக்கதை ஒன்றினை சொல்லிவிட்டுப்போகிறேன். நான் சிறுவனாக இருக்கும்போது எனது ஒன்றுவிட்ட அண்ணன் அழகான சேட் போட்டு வந்தால் உடனே கேட்டு வாங்கி விடுவேன் (சிலவேளை மட்டும் பணம் கொடுப்பேன்) நான் கேட்டு அவன் தராமல் இருந்ததில்லை. கேட்கும் போதெல்லாம் அவன் ஏன் தருகிறான் என்று நான் எண்ணியதில்லை. ஒரு நாள் யாரோ கேட்டார்கள் 'நீ என்ன அவன் கேட்டால் ஒரே குடுக்கிறாய்' என்று. அதற்கு அவன் தானும் இப்படி தன் மைத்துனரிடம் கேட்பானாம் அவர் கொடுப்பதில்லையாம். அது மாதிரி இவன் ஏன் கஸ்டப்படவேணும் என்றான். புல்லரித்துவிட்டது எனக்கு.

ஒருவேளை இறைவன் பெற்றோர்களை ஒரு தடவை "சில வாரங்களுக்கு" சிறுவர்களாக்கி விட்டு மறுபடி பெற்றோராக்கினால் இவர்கள் சிறுவர்களின் பிரச்சனையை இலகுவில் உணர்ந்து விடுவார்கள் என்று நினைக்கிறேன்.

ஏனெனில் பெற்றோர்கள் எப்பொழுதும் ஒரு முதிர்ச்சியான நிலையில் இருந்து கொண்டே முடிவுகளை எடுக்கிறார்கள். பிஞ்சுகளின் உள்ளத்தின் உணர்வுகள் இவர்களுக்குத் தெரிவதில்லையாம்... (சொல்லுதுகள்)

ஏதாவது வாக்குக் கொடுப்பார்கள் (அரசியல் வாதிகள் போல) பின் அதில் உண்மையான அக்கறை இன்மை அல்லது கவனக்குறைவு போன்ற காரணத்தால் மறந்து விடுவார்கள். பிள்ளைகள் ஏமாற்றம் அடைந்து தங்கள் பெற்றோர் மேல் நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறார்கள். இப்படியான நிலை இறுதியில் பெற்றோருக்கும் பிள்ளைகட்கும் இடையில் விரிசல் நிலை அல்லது ஒரு தடைக்கல் விழுகிறது.

எப்போதும் பிள்ளைகளுக்கு உதாரண புருசர்கள் பெற்றோர்தான் அதிலும் அதிகமாக அப்பாதான் என்பார்கள். ஆகவே நீங்கள் எப்படி நடந்து கொள்ளுகிறீர்களோ அது பிள்ளைகளுடனோ அல்லது வெளியாருடனோ யாரோடு ஆகிலும் அதைப்பார்த்துப் பிள்ளைகள் பின் பற்றுகிறார்கள். ஆகவே கவனமாக இருங்கள். கீழ்க்காணும் வசனம் எங்கோ ஒரு இடத்தில் வாசித்த ஞாபகம் இருக்கிறது.

Listen my parents and you shall
Hear the voice of your child,
That sweet little dear.
Mom, Dad, you're an example of
What I'm to be.
For I act out the actions I see

- Reggie

புரிந்துணர்வெனும்
புத்தொளி நெஞ்சிலே
போற்றிப் பிள்ளைகள்
பொன்னெதிர் காலத்தை
இன்று முதல் நாம்!
எண்ணியே
நடப்போம்!

செய்திகளைத் திரித்தவரது கடைசிக் கணங்களே திரிக்கப்பட்டுவிட்டன!

கதிர்காமர் என்ற தமிழ்ப் பெயர் கொண்ட மனிதர் அதை வைத்து நடத்திய சித்துகள் ஆயிரம். கண்ட காகிதத்திலும் அவர் பெயரைப் பொறித்துக் கண்ணீர் சிந்தும் சிங்கள தேசமே அவரது எசமான விசுவாசத்தின் அளவுகோல். நவாலியிலிருந்து மந்துவில் வரை மனிதமே இல்லாது தமிழர் உடல்கள் தெருவில் வீழ்ந்தன. கதிர்காமரின் வாய்வீச்சு வீழ்ந்தவரைப் பயங்கரவாதிகளாக்கிக் காட்டியது. தட்டிக் கேட்ட உலகத்துக்குக் குட்டுப் போட்டுப் பதில் சொன்னார் கதிர்காமர். ஐ.நா சபையினரை அவர் வீட்டுக் கொல்லையில் நுளம்படிக்கச் சொன்ன துணிவு யாருக்கு வரும்? இலங்கையில் நடப்பதைக் கதிர்காமரின் கண்களின் வழியாகவே உலகம் கண்டது. அந்தக் கண்களின் நிறக்குருடு அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மாபாதகங்களை மறைக்கும் தடுப்பாக நின்றார் கதிர்காமர். போர்நிறுத்தம் என்ற வாகனத்தில் போராளிகள் ஊருலாப் புறப்பட்டபோது உலகம் உண்மையைத் தரிசித்தது. கதிர்காமரோ கடுப்பாகிப் போனார். ஜப்பானின் தூதுவர் அக்காசி தமிழர் தலைமையைச் சந்தித்தபின் கதிர்காமரைச் சந்தித்தார். வாங்கிக் கட்டிய கதிர்காமர் மனம் வெதும்பிச் சொன்னது பத்திரிகையிலும் வந்தது.

இவ்வளவு காலமும் நான் உருவாக்கிய உருவகத்தை இரண்டு மணிநேரத்தில் அவர்கள் (போராளிகள்) புரட்டிப்போட்டுவிட்டனர். அக்காசி யின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை.

கதிர்காமர் ஏன் சமாதானத்தை எதிர்த்தார் என்பதன் விளக்கம் அவரது வாய்ச்சொல்லில் தெரிகிறது. தான் பொய்யிலே வளர்த்த கருத்துலகம் சமாதானத்தின் பெயரால் கலைந்து போவதை அவர் கனவிலும் விரும்பவில்லை.

வெள்ளம் தலைக்குமேல் போனபோது அபய மளித்தது அண்டை தேசம். அடைக்கலம் தேடிய கதிர்காமர் அதன் பேச்சிற்கு ஆடத் தொடங்கினார். சந்தானயத் தம்பிமாரும் தாளம் போட்டனர். உடுக்கடிப்பதற்கும் சிலர் ஒழுங்கமைக்கப்பட்டனர். மீண்டும் பேயாட்டம் கிழக்கில் தொடங்கியது.

தென்பகுதிக் கடற்கரைகளில் கசக்கிப் போடப் படும் சிறுவர்களைக் காப்பாற்றக் கருதாத கதிர்காமர் போராளிச் சிறுவர்களைக் குறித்துக் கதையளக்கத் தொடங்கினார். ஆடுகள் நனைவ தாக ஓநாய் இட்ட ஓலம் உலகத்தை எட்டியது.

ஆபிரிக்கச் சிறுவர்கள் பட்டினியால் மடிவதையும் அமெரிக்கச் சிறுவர்கள் போதையால் அழிவதையும் தடுக்க வக்கில்லாத ஒட்டுண்ணிக்கள் ஓடோடி வந்தார்கள்.

வெற்றிப் பெருமிதமடைந்த கதிர்காமரின் அட்டகாசமோ எல்லை கடந்தது. பற்றிப் பிடித்த சமாதானத் துரும்பை எட்ட வீசும்படி அரசைத் தூண்டியது.

எல்லாம் அறிந்திருந்த கதிர்காமருக்கு நியூட்டனின் மூன்றாவது விதி தெரியாது போனது வியப்புத்தான். நியூட்டனையே பிடித்துவிட்டதாகப் புலனாய்வுத்துறை நீட்டி நிமிர்ந்து உறங்கியதும் புதினமில்லைத்தான்.- விதி தன்பாட்டில் இயங்கியது.

வினை நடந்தவுடன் விசையைக் கண்டுபிடித்து விட்டதாகக் கத்திய இலங்கையின் காவல்துறை இன்றுவரை ஆதாரம் தேடி அலைகிறது. அதுவல்ல விதியின் வினோதம்,

தமிழர்களது சிதைந்த உடல்களைப் பயங்கர வாத உடல்களாகக் காட்டிய கதிர்காமர் தனது கடைசி நிமிடமும் அவ்வாறே காட்டப்படுமெனக் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே சவமாகிக் கிடந்த கதிர்காமரின் உடலை வைத்து ஒரு நாடகம் நடந்தது. பாவம்! இக்பால் அத்தாசிற் குக் கூட அவர்கள் இதைச் சொல்லவில்லை.

அதிகார அம்மணியும், அமைச்சர்களும் வெளியே காத்திருக்க அனைவரும் சேர்ந்தொரு நாடகமாடினர். அதைத் தான் உண்மையென உலகும் நம்பியது.

வலது நுரையீரலைத் துளைத்துச் சென்ற தோட்டா கதிர்காமரின் மேலேறு பெருநாடியைக் (Ascending aorta) கிழித்துச் சென்றது. வெளியேறிய இரத்தம் குளமாகத் தேங்கி நெஞ்சறைக் குழியை (Thoracic cavity) நிறைத்தது. கதிர்காமர் கணநேரத்தில் நேரத்தில் இறந்துபோனார்.

சிங்கள இராணுவத்தின் தமிழின அழிப்பைப் பயங்கரவாத ஒழிப்பாகக் காட்டிய செப்படி வித்தைக்காரருக்குச் சத்திர சிகிச்சை செய்வதாக வெளியே சொல்லிக் கொண்டு வைத்தியர்கள் உள்ளே நடத்தினர் கண்கட்டு வித்தை.

ஆறுதலாக நெஞ்சறைக் குழியை வெட்டித் திறந்து (Thoracotomy), அதற்குள் பெருகிக் கிடந்த இரண்டு லீற்றர் இரத்தத்தை வெளியே அகற்றினர். மீண்டும் தையலிட்டுவிட்டு அய்யய்யோ சகலதும் செய்தோம். ஆனால் அய்யாவைக் காப்பாற்ற முடியவில்லை என அறிவித்தல் கொடுத்தனர்.

றொயிட்டரிலிருந்து ராவய வரை கண்ணீருடன் தலைப்பிட்டனர். வைத்தியர்கள் ஒரு மணிநேரம் அவரச சத்திரசிகிச்சை செய்தும் அய்யா கதிர்காமர் போய்ச்சேர்ந்தார் என ஒப்பாரி வைத்தனர்.

இப்படியாகச் செய்திகளைத் திரித்தவரது கடைசிக் கணங்களே திரிக்கப்பட்டு உலகிற்குப் போய்ச்சேர்ந்ததை என்னவென்பது!

- திருமகள் (ரஷ்யா)

ஒரு பேப்பர்
ORU PAPER

The Spin and Swing of RAW Orchestra

By: Sachi Sri Kantha
for Orupaper from Japan

It doesn't take even ten seconds for Tamil music fans, to identify the characteristic voices of star performers like M.S.Subbulakshmi, Madurai Mani Iyer, Chidambaram Jayaraman and Sirkali Govindarajan. The tonal markers of sweetness, swing and lilt of each such musician's voice are too distinct, unless one is tone deaf. Similarly, for the past 15-20 years, it doesn't take even a minute for Eelam watchers, to check out when the infamous Research and Analysis Wing of India [RAW] Orchestra sings. The RAW Orchestra sings loudly in the media, when something beyond their belief surprises them. But the tasteless tones of RAW Orchestra, if one bothers to listen, are insult to average Tamil's intelligence. According to a RAW watch site – FAS Intelligence Resource Program [www.fas.org], RAW has a "total of an estimated eight to ten thousand agents and a budget that experts place at Rs.1,500 crore, alternately estimated at $145 million" [entry, updated on July 26, 2002]. One wonders what slice of this $145 million annual budget is directed to Sri Lankan territory. $25 million is a not so inaccurate, reasonable guess, which in turn, works out to more than $2 million per month.

The two recent events which had 'surprised'the RAW's Poo Bahs are, (1) Foreign Minister Lakshman Kadirgamar's assassination on August 12th, (2) the news item that the Government of Sri Lanka and LTTE will hold talks on the 2002 Cease Fire Agreeement. Now, **within a span of two days[August 20-22], we notice, three singers providing a chorus line for the RAW-inspired performance. The message of their song is nothing but "Bring on Karuna to the Center".**

D.B.S.Jeyaraj, the token Tamil pontificator for the *Sunday Leader*, screams in high decibel that Karuna "should be recognized as a separate entity by Colombo and Kilinochchi. Karuna and his followers should be brought in to a separate tripartite ceasefire facilitated by Oslo. Thereafter Karuna should be brought into the mainstream as a politico - military force and encouraged on the path of democratic politics." Jeyaraj is best known for hyperbole and this is another of his thought balloons, filled with RAW air.

The human rights activist Rohini Hensman supportingly coos, "The new CFA must recognise that *de facto*, there are three parties to the conflict: the Government, the Prabakaran faction and the Karuna faction; indeed, most of the fighting during the ceasefire has been between the two latter parties. Thus a cessation of fighting necessitates a three-cornered ceasefire." Hensman's as well as Jeyaraj's logic is flawed. In the Eastern front, only two parties hold territory; the Government of Sri Lanka and LTTE. Karuna's faction doesn't hold territory, after Karuna's 'flight for life' in April 2004.

The Indian journalist, P.K.Balachanddran pertinently ponders that 'the Karuna issue' will be the focal point in the forthcoming Government of Sri Lanka – LTTE discussions.

The bottom line of this chorus team is nothing but a plea for gaining legitimacy to Karuna, who left them high and dry last year. And this is RAW's urgent campaign. For the first time in nearly two decades, the RAW's Poo-Bah's find themselves in a pickle. They are now devoid of a strong 'transmission line' to the Cabinet happenings in Colombo. From mid 1980s to 1994, UNP's Gamini Dissanayake served as the prime informant for them. Gamini Dissanayake, even represented RAW's interests in delivering 'an arresting funeral oration' of TULF leader Amirthalingam and his junior colleague V.Yogeswaran, in July 1989. Following Gamini's demise, Lakshman Kadirgamar stepped into Dissanayake's shoes and performed splendidly. Now, after Kadirgamar's demise, RAW's 'transmission line' has snapped abruptly. Gamini Dissanayake had gravitas within UNP. For nearly ten years [and especially until estranged brother Anura Bandaranaike joined her in late 2000] Kadirgamar had gravitas, in President Chandrika Kumaratunga's eyes. Thus RAW's field agents didn't have to sweat much in Colombo in receiving their field notes.

Now, the RAW's Poo Bahs are left with only Minister Douglas Devananda, the militant impostor-turned "democrat", to pry on President Chandrika. But, Devananda hardly belong to President Chandrika's inner circle. In the eyes of President Chandrika, he doesn't exude gravitas neither as a legal henchman nor as a miltant. Thus, the spin and swing of RAW's Orchestra is in full blast now to endear Karuna [in the role of true militant-turned "democrat"] to President Chandrika.

I present below, relevant excerpts from the original texts of three chorus singers for the RAW Orchestra.

(1) P.K.Balachanddran [*Hindustan Times*, New Delhi, Aug.20, 2005]

"...For the LTTE, it is a matter of life and death in the eastern districts where its hold is still shaky and where the ethno-political situation is in any case not very favourable to it. Karuna, may not be visible to the naked eye, but he, along with other Tamil groups, which the LTTE says are nothing but Tamil paramilitaries attached to the army, are posing a serious threat to its unarmed political cadres.

Though LTTE often downgrades Karuna as being an insignificant factor, his name comes up too often as a threat. The LTTE knows that it is only Karuna's men, having been in the LTTE themselves not so long ago, who can carry out the kind of operations that are carrying out.

The Karuna issue will be a major challenge for the government. Going after Karuna or even suspending any support for him may not be an easy option for it. Assuming that the government or a section of the Armed Forces does support Karuna, it may not be politically easy to take a decision to drop him like a hot potato. This is because Karuna is a hero in the Sinhala south, the government's main political constituency. Karuna is seen by this constituency as the best weapon to fight Prabhakaran and the LTTE and weaken the two before re-starting peace talks.

Indulging in military action to curb Karuna may itself be a violation of the CFA. Secondly, as Peace Secretariat chief Jayantha Dhanapala put it, going after Karuna may lead to inadvertent clashes with the mainstream LTTE..."

(2) D.B.S.Jeyaraj [*Sunday Leader*, Colombo, Aug.21, 2005]

"The only way out for the LTTE is for the Tigers to swallow their arrogance and accept the reality of Karuna. He should be recognized as a separate entity by Colombo and Kilinochchi. Karuna and his followers should be brought in to a separate tripartite ceasefire facilitated by Oslo. Thereafter Karuna should be brought into the mainstream as a politico - military force and encouraged on the path of democratic politics.The tactic of using Karuna as the 'running dogs of war' must cease.

Given the experience of all other disarmed Tamil groups at tiger hands after the ceasefire it would be naive to expect Karuna to lay down arms. Karuna can lay down arms only when Pirapakaran lays down arms. But a non - confrontational mode of co - existence could be realised in the interim. For this the LTTE must accept reality and mend fences with Karuna. If the Tigers are unwilling as they are most likely to be the Eastern fratricide will continue.Whether the LTTE or Karuna gains the upper hand does not matter because the ultimate sufferer will be the 'Kilakkuth Thamilar' in particular and the 'Thamilinam' in general."

(3) Rohini Hensman [*The Hindu*, Chennai, Aug.22, 2005]

"The new CFA must recognise that *de facto*, there are three parties to the conflict: the Government, the Prabakaran faction and the Karuna faction; indeed, most of the fighting during the ceasefire has been between the two latter parties. Thus a cessation of fighting necessitates a three-cornered ceasefire. However, even if the Prabakaran faction refuses to sign the agreement but the Government signs it with the Karuna faction, it will reduce the threat of war and human rights violations quite significantly, and is therefore a goal worth pursuing."

காளிகாம்பா ஜோதிடம்

குரு	செவ்	சுக்கி	புதன்
சனி	கிரக நிலை		சந்தி
சனி			சூரியன்
குரு	செவ்	சுக்கி	புதன்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள கே. எம். சாஸ்திரி அவர்கள் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

உங்கள் திருமண யோகம், வியாபாரம், கல்வி ஆரோக்கியம், குடும்பப் பிரச்சனை ஆகியவை பற்றி விபரமாக அறிந்து கொள்ள இன்றே அவரை நாடுங்கள். இன்னமும் சில தினங்களே இங்கு தங்கியிருப்பார். நவக்கிரகங்களால் ஏற்படும் தொல்லைகளுக்குப் பரிகாரம் காணப்படும். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

Samras 2000 Video shop
(near Tooting Broadway Station)
(oppositive to Mercedes Benz showroom)
174, Tooting High Street, Tooting, London.SW17 0RX
திங்கள்முதல் சனிவரை: காலை 10. 30 முதல் இரவு 9. 00 வரை

Mob: 079 4992 3133
(தயவுசெய்து அனுமதி பெற்று வரவும்)

Welcome Centre
209 High Street North, Eastham, London E6 1JG
(Opposite Eastham Tube Station)
Sunday & Monday Only
திங்கள்முதல் சனிவரை: காலை 10. 30 முதல் இரவு 9. 30 வரை

Unanswered questions about Sri Lankan foreign minister's assassination

By W.A. Sunil and K. Ratnayake
26 August 2005 (WSWS.org)

It is now two weeks since Sri Lankan foreign minister Lakshman Kadirgamar was shot dead by a sniper at his private residence in Colombo late in the evening of August 12.

As far as the Sri Lankan media and political parties are concerned, there is no doubt that the Liberation Tigers of Tamil Eelam (LTTE) carried out the murder.

Sinhala chauvinist parties, including the Janatha Vimukthi Peramuna (JVP) and Jathika Hela Urumaya (JHU), seized on the assassination, denounced the current ceasefire with the LTTE and began agitating for demands that are tantamount to a return to war. As part of their campaign, they have denounced anyone who has failed to name the LTTE as the killers.

The Colombo press has been full of "analysis" and stories, many of them simply cooked up, about Kadirgamar's murder and the police investigation. All of them begin by assuming that the LTTE, which has publicly denied any responsibility, was to blame. No alternatives have even been canvassed.

It is possible that the LTTE did order the assassination. It has gained very little from the ceasefire. Peace talks have been stalled since 2003 and efforts to establish a joint tsunami aid mechanism with Colombo have been delayed repeatedly. In the Eastern Province, its officials, offices and fighters are being attacked regularly by a breakaway faction that receives covert support from the Sri Lankan military.

However, the chief beneficiaries of Kadirgamar's assassination have been the JVP, the JHU and sections of the security forces that have adamantly opposed the aid agreement, the ceasefire and the entire "peace process". It is certainly possible that elements from these reactionary layers could have hatched a conspiracy to murder Kadirgamar and pin it on the LTTE so as to poison any renewal of peace talks.

Virtually no one in Colombo has even raised the possibility. Before falling into line with the clamour against the LTTE, President Chandrika Kumaratunga blamed the killing on "political foes opposed to the peaceful transformation of conflict". The comment is particularly significant as the president is well aware of the entrenched opposition inside the military as well as the hostility of the JVP, which quit the ruling coalition in June over her decision to sign an aid agreement with the LTTE.

Just as significant are the reasons for Kumaratunga's about-face. In last weekend's *Sunday Times*, the newspaper's political editor, who has many high-level political connections, revealed that Kumaratunga had come under sharp behind-the-scenes criticism from the JVP for failing to blame the LTTE. "[H]ow can I blame the LTTE? I am the president and I must have some evidence before I say such a thing," an exasperated Kumaratunga told a ministerial colleague. Yet that evening [August 14] she appeared on national television and declared that the LTTE was responsible—without offering a shred of evidence.

In fact, the investigation is being carried out with anything but "an open mind". No effort is being made to investigate the possible involvement of the military, the police or various Sinhala communal organisations. Virtually all of those who are being rounded up for interrogation are Tamils in an effort to find a connection to the LTTE. Yet, despite two weeks of inquiries, the police still have "no clue" as to the killers.

Lack of evidence

Based on what has been made public, there are many unanswered questions about the Kadirgamar assassination. Moreover, much of what has been leaked to the media is either dubious or has been later shown to be misleading or false.

● Kadirgamar was shot at about 10.45 p.m., after a swim in a pool at his home at Bullers Lane in a well-to-do area of central Colombo. Captain Manatunga, head of his security detail, has testified to a magisterial inquiry that there were five security personnel around the pool and at the home. He said he heard the shots, returned fire and then with the other guards took the minister to the National Hospital.

Why was no effort made to catch the killers? Even if Manatunga and the guards were preoccupied with saving Kadirgamar's life, why did other security forces take no action? In such circumstances, the police and military rapidly establish roadblocks to check vehicles. Yet after the murder of one of the country's most senior ministers, no roadblock was set up for at least two hours. "He [the assassin] had ample time to escape," a senior police officer told the *Sunday Island*.

● Police revealed that the shots came from a bathroom in the upper floor of a neighbouring house just 35 metres from the pool.

Why was no effort made to ensure that neighbouring houses were secure? Sri Lanka, which has been embroiled in civil war for two decades, has a long history of political assassination. Specially trained personnel from the Ministerial Security Division (MSD) guard all ministers. The checking of possible vantage points for gunmen is an elementary precaution that is routinely performed around VIP residences or when VIPs are travelling in vehicles. Why were these measures not taken for Kadirgamar who, next to the president and prime minister, had the highest security priority?

● The owner of the neighbouring house, Lakshman Thalayasingham, told a magisterial inquiry on August 15 that the police arrived at his house somewhere between 1 a.m. and 2 a.m. on August 13—that is, at least two hours after Kadirgamar's murder. The obvious question is: why did it take so long after the murder to check the house from which the shots were fired?

● Last weekend the *Sunday Times* revealed that Kadirgamar had received a warning from a Western intelligence agency via the country's Directorate of Military Intelligence of a plan to kill him. "The brief one paragraph warning said a plot to assassinate him was to be executed in August 2005," the article stated. Yet no urgent efforts were made to beef up his security detail, despite longstanding requests.

The *Sunday Times* attempted to explain the lapse in security by reporting the comments of a Tamil "businessman with very close links to the LTTE", whom Kadirgamar spoke with on occasions. The businessman had assured the minister that the LTTE would not target him until he left office. Moreover, why were those responsible for Kadirgamar's security duped? Who exactly did the "Western intelligence agency" say planned to kill the minister and why was no action taken to bolster his guard?

● The police initially claimed that the assassin had used a sniper's rifle. However, the government analysts department confirmed to the WSWS that that was not the case. from an The spent cartridges produced in court by police did not indicate the use of such a weapon. An article in the state-owned Sunday Observer last weekend added "most surprisingly" that Kadirgamar had been killed by "a sub-machine gun that had been stolen either from the armed services or purchased arms dealer". In other words, Kadirgamar was not killed with a specialist rifle but with an automatic weapon of the type used by the Sri Lankan armed forces and that is readily available throughout the country.

● A *Daily Mirror* report on August 18 contained another piece of misinformation. It claimed that police had found two cyanide capsules near his Thalayasingham's residence. While making the obvious point that cyanide capsules are an LTTE trademark, the article did not explain why the killers, if they were LTTE, would leave the capsules behind. Surely if they feared capture by police, they would take the capsules with them.

In the immediate aftermath of the assassination, military spokesman Daya Ratnayake declared that the killing had "all the hallmarks" of the LTTE. In fact, the opposite is the case. Suicide bombers, not snipers, have been the "hallmark" of LTTE assassinations. Unlike suicide bombings, which require a high degree of commitment, there is no shortage of soldiers, army deserters, paramilitary members and gangsters in Sri Lanka with the necessary skills to fire a rifle to kill a minister—either for political or financial motives.

The unanswered questions all point in one direction. If those in charge of Kadirgamar's security were not bungling amateurs then the minister could well have been the victim of a high-level plot involving the military or police. After two decades of war, there is literally nothing that the sections of security and intelligence apparatus would not do to further their aims. If that is the case, it would also explain the lack of any progress in the police inquiries—the state apparatus is engaged in investigating itself.

Whoever carried it out, the murder has been immediately seized upon to crack down on democratic rights. Virtually all the major established parties have set aside their tactical differences to approve a state of emergency giving the police and military extraordinary powers of arrest and detention. The president has the right to impose media censorship and to ban protests and rallies. These measures will not be used to track down Kadirgamar's killers. Above all they will be used against working people—Tamil, Sinhala and Muslim alike.

MARKANDAN & CO SOLICITORS
Thamil House, 720 Romford Road, London, E12 6BT
Tel : 0208 514 8188 , 078 30 28 56 34
Fax : 0208 514 8303
Web www.markandan-solicitors.com
e-mail : mm@Markandan-solicitors.com

- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் No Win – No Fee அடிப்படையில்.
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கு ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்.

We also Specialise in ...

- ஓப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சனைகள்
- உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கேளிக்கை களியாட்ட அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

01-02-2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும். ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை. வீடு தேடி வந்து ஆலோசனைகள் வழங்கவும் தயாராக உள்ளோம். வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்கு படுத்தி தரபடும்.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா - செல்வி

விளம்பரம்
கௌரி - ஜெனி - சியாமா

அச்சு
அபிஷா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
45'B' CRUSOE ROAD
MITCHAM CR4 3L J
SURREY

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

Orupaper is a Tamil Newspaper Published fortnightly from London by Jasmine Studio Ltd. The views expressed are those of the contributors and do not necessarily reflect the views '*Oru Paper*' or its publishers. Information (including advertisements) presented in this publication is compiled from the sources believed to be accurate. However the publisher assumes no responsiblity for errors or omissions.

சற்று மாறுதலுக்காக

வேரோடும் வேரடி மண்ணோடும் விழுந்து விட்டு வாழ்வோடும் வீசி எறியப்பட கதை.

சேயோன்
(ஒரு பேப்பர்)

ஆயிற்று!.. எட்டு வருடங்கள்! எப்படி ஓடின என்று தெரியவில்லை. பேத்த பேத்த விழித்தவனாக, இலண்டன் விக்டோரியா 'கோச்' தரிப்பிடத்தில் நான் இறங்கி இன்றோடு (31.8.05) எட்டு வருடங்கள்.

நான் என்கின்ற சுயத்தை (Ego) தவிர, என் கல்வி, பதவி, ஆளுமை, வேர், விழுது, யாவற்றையும் நான் ஏறிய விமானத்தின் யன்னல் வழியே சுழற்றி தூர எறிந்து விட்டு, சக்கையாய் வந்து ஒரு நாட்டில் விழுந்தேன். வேரை, வேரடிமண்ணை, விழுது விட்ட வாழ்வை வீசி எறிந்து விட்டே வந்தேன். அந்த நாட்டிலிருந்து அத்தனை இடர்பட்டு, வருடக்கணக்காய் காலங்களைக் கழித்துவிட்டு எட்டுநாடுகளைக் கடந்து, இங்கு வந்தேன். திரவியம் தேட நான் வந்தேனல்லன். போய்விடும் உயிர் என்றஞ்சி போக்கிடம் தேடி ஓடி வந்தேன். இரவிக் கிருளில் கண் சிமிட்டிய ஒரு நட்சத்திரம் 'வா,வா' என்று அழைத்தில்லை. ஐரோப்பாவின் அனேக நாட்டு அரசுகளும் என்னை 'போ போ' என்று தான் துரத்தின. ஆயினும் எப்படியோ அடித்து பிடித்து வந்து விட்டேன்.

வரும் வழியில் எத்தனையோ இடர்கள் இருந்தாலும் இறுதி இடர் இவ்வாறாக இருந்தது: நீண்டசிவப்புநிறபடங்களால்போர்த்தப்பட்டட்ரக் வண்டியில், நாற்பத்தாறு பேர், சாமான்களோடு சாமான்களாக அடைக்கப்பட்டோம். அதில் பதினெட்டு பேர், பெண்கள் ஒரு நாட்காலை எட்டு மணிக்கு அவ்வாறு அடைக்கப்பட்ட போது கையில் ஒரு அப்பிள் பழமும், ஒரு வாழைப்பழமும் ஒரு சிறு போத்தல் தண்ணீரும் தந்தார்கள். தந்தவர் எவரும் எம் மொழி பேசுவர் அல்லர்.

ட்ரக் ஓடுகிறது, ஓடுகிறது. குலுக்கலில் மாத்திரம் அதன் வேகம் தெரிகிறது. வாழைப்பழம் தின்று முடிகிறது. அப்பிள் பழம் தின்று முடிகிறது. சிறு போத்தல் நீரும் அருந்தி முடித்தாயிற்று. ட்ரக் நிற்கிற பாடாக இல்லை. ஆண்கள் குலுங்கி குலுங்கி நடந்து போய், பெரிய பெட்டிகள் மூடிய ஒரு மூலையில் நின்று, அந்த சின்ன போத்தலுக்குள் மூத்திரம் பெய்கிறார்கள். பெண்கள் அப்படியும் அல்ல.நின்ற படி அல்லது ஒரு பெட்டியின் மீது இருந்தபடி, முழங்காலில் முகத்தை வைத்திருக்கிறார்கள் அல்லது கைகளில் முகத்தை தாங்குகிறார்கள்.

அப்படியாக ஆயிற்று ஒரு பத்து மணித்தியாலம் 'இனி ஒரு மூச்சுச் சத்தமும் வெளியே கேட்க வேண்டாம்.' என்றொரு குரல் உள்ளே வந்தது. அத்தனை அமளியும் அடங்கிப் போயிற்று. ட்ரக் அவ்வாறு ஓடிய சிறிது நேரத்தில் ஓர் இடத்தில் நின்றது. அது நாலைந்து மணித்தியாலம் என நெடுநேரம் ஆயிற்று. பிறகு தடக்கு முடக்கு சத்தம் கேட்டது. ட்ரக் மெதுவாக ஊர்ந்து எதுவோ ஒன்றில் ஏறியது. 'கப்பலிலை ஏத்துறாங்கள்' என்று பக்கத்தில் நின்ற வாக்கு கண் ஆள் முணு முணுத்தார். அது சரி தான் என்று அசைந்து போவதில் தெரிந்தது. அப்படிப்போக ஒரு இரண்டு மணித்தியாலம் ஆயிற்று. அப்படியே ஊர்ந்து ஊர்ந்து இறங்கிய ட்ரக் பிறகு எதற்காகவும் ஓரிடமும் நிற்பதாக இல்லை. அதன்பிறகு ஓட்டமும் ஐந்தாவது மணித்தியாலமாக, நாங்கள் காலைப்புறம் ஏழு மணியளவில், ஒரு கராஜ்ஜில் இறக்கப்பட்டோம். தொடருந்து நிலையத்தில் செல்லும் வழியைச் சொல்லி விட்டு, கராஜ்ஜை விட்டு ஐவர் ஐவராக விரைவில் வெளியேறு மாறு பணிக்கப்பட்டோம். தொடருந்து நிலையத்திற்கு இலண்டனுக்கு செல்ல இருவத்தொரு பவுண்ட் ஆகும் என்றார் கள். அந்த காசு என்னிடம் இல்லை. குறைந்த விலையில் 'கோச்'சில் செல்லலாம் என்றார்கள். அது ஞாயிற்றுக் கிழமை அதிகாலை ஆதலால், வழி சொல்லித்தர வீதியில் ஒருவரில்லை. குருட்டாடம் போக்கில் நடந்தால் 'கோச்' நிலையம் வந்தது. அங்கு இலண்டனுக்கு என்று கோச்சை காணவில்லை. ஆனால் ஐந்தாறு 'கோச்'கள் நிற்கின்றன. விக்டோரியா என்ற பெயர் மாட்டி இருந்த கோச்சில் ஏறி சாரதியிடம் இலண்டனுக்கு 'கோச்' இல்லையா? என்று கேட்க, 'இதுதான' என்று தான்கு பவுண்ட் வாங்கி சீட்டு தந்தார். நான்கு மணித்தியாலம் ஓடி முடித்தார். வெளிநாடு என்று மனதில் எழுந்த பிரமைக்கு இலண்டன் ஆச்சரியத்தை தந்தது. இரட்டை தட்டு பேருந்து. இது 60களிலே யாழ்ப்பாணத்தில் பார்த்தது. 'ஏவோர்ட்டி' கார் போல ரக்சி. பளீர் வெள்ளைத் தோல்களும் கன்னம் கரிய கறுப்புத் தோல்களையும் தவிர வேறுபாடு எதையும் காணவில்லை. அட, தபால் பெட்டி கூட நம் ஊரில் உள்ளது போல சிவப்பு வண்ணத்தில் இருந்தது.

அந்த ஞாயிற்றுக் கிழமை சாலையில் காணும் எல்லோர் கையிலும் செய்தி பத்திரிகை இருந்தது தான் ஆச்சரியம். வீதிகளிலேயே கதிரை விரித்து இருந்தோர் கோப்பியை அல்லது பியரை உறுஞ்சிய படி செய்திப் பத்திரிகையை உன்னிப்பாக வாசித்தனர். அது தந்த ஆச்சரியத்தில், நானும் எட்டி தலைப்பு செய்தியை வாசித்தேன். 'டயானா மரணம்' என்று கொட்டை எழுத்து இருந்தது. எனக்கு ஆச்சரியம் அதிகரித்தது. சார்ள்ஸ் டயானா திருமணத்திற்கு இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் ஊடகர் பலர் வந்து, செய்திகள் சேகரித்து அங்கு பத்திரிகைகளை நிரப்பினர். இப்போது டயானாவே பெரும் செய்தியாகி பத்திரிகையை நிரப்பிக் கொண்டு இருக்கிறார்.

அதிகார வர்க்கம் வைத்தது தான் சட்டம். அது செய்வது தான் நீதி. நேர்மை, நியாயம், உண்மை, இவற்றையும் இலண்டனுக்கு வந்த அன்றிலிருந்தே உணரத் தொடங்கினேன்.

பண்பாடு

கந்தையா சண்முகம்
(ஒரு பேப்பருக்காக)

எண்ணங்கள் நெறிகள் ஆக்கப் படுபொருள்கள் முதலியவை பண்பாட்டின் உருப்படிகளாகக் கருதப்படுகின்றன. அன்பு, துணிவு, நேர்மை போன்றவை நம்மில் இயல்பாகவும், நட்பு, நன்றி, கட்டுப்பாடு போன்றவை நாம் தேடிக் கொண்டதாகவும் உள்ளன. பண்படுவதென்றால் செம்மை படுத்துவது தூய்மைப் படுத்துவது திருத்துவது எனப்பொருள் தரும். மனிதனை ஒரு பண்பாட்டு பிராணி என்று சமூகவியலாளர்கள் கூறுவார்கள்.

பண்பு மனதை அழகுபடுத்துகிறது. மனிதனை அழகு படுத்துகிறது. ஒவ்வொரு மனிதனுக் குள்ளும் போற்றத் தக்க அம்சமாகவும் உள்ளது. அவன் இரத்தத்தில் ஊறிய அந்த அன்பும் துணிவும் நேர்மையும் போன்றவைகள் நம்மில் இயல்பாக உள்ளவை.

அறிவாளிக்கு மூளைப்பலம் போல பண்பாள ருக்கு இதயபலம் உண்டு. அறிவாளர்கள் பாராட்டப்படுகிறார்கள் சாமர்த்தியம் இருந்தால் போதுமா? சாந்தமும் இருக்க வேண்டும். ஆற்றல் இருந்தால் போதுமா? அன்பும் இருக்க வேண்டும். எல்லாரும் மனிதர்கள் எல்லாரும் வாழ்கிறார்கள். ஆனால் சிறப்பு சிலரிடம் மட்டுமே சேர்ந்து கொள்ளுகிறது. நீங்கள் மிகப்பெரிய செல்வந்தர் ஆகவோ, புத்திசாலியாகவோ இருக்கவேண்டு மென்பதில்லை. ஆனால் நேர்மையாளராக இருக்க வேண்டியது அவசியம். பண்பாடு என்பது மிருகங்களில் இருந்து வித்தியாசப் படுத்தும் பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் கலைகள் அறிவு முதலான மனித தோட்டங்களை உள்ளடக்கியதாகும்.

காலங்கள் மாறும் கோலங்கள் மாறும் பண்பாளர்கள் தங்களுக்கு என்று ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்திக்கொண்டு இருப்பார்கள். அவருடைய செயலிலும் மனநிலையிலும் எண்ணத்திலும் உணர்ச்சிபிலும் ஒரு கட்டுப்பாடு எப்போதுமே இருக்கும். நல்ல மனிதர்களிடத்து மற்றவர்களை தங்கள் பக்கம் ஈர்த்து கொள்ளும் ஓர் அபூர்வ சக்தி பிரகாசித்துக் கொண்டு இருக்கும். சிலர் வாழும் காலத்திலேயே மதிக்கப் படுவார்கள் சிலர் மரணத்துக்குப் பின்னர் போற்ற ப்படுவார்கள.

மனிதன் இறந்தால் அவனுடைய வடிவம் மறைந்து விடுகிறது. அவன் செய்த செயல்களிலும், அவன் கொண்ட கொள்கைகளிலும் ஏழை மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து ஆற்றிய அருங்கொடைகளும் சிந்தனைகளும் தான் நிலைத்து நிற்கின்றன. இந்த உயர்ந்த மனிதர்கள் இந்த உலகத்திற்கு கலங்கரை விளக்காய் திகழ்வார்கள். மிகச்சிறந்த சிந்தனையாளர்களும், மிகச் சிறந்த உழைப்பாளிகளும் தான் உலக வரலாற்றை உண்மையில் உருவாக்கியவர்கள்.

உருவாக்கியதென்றால் கூடிய பயன் தரக்கூடிய கட்டி எழுப்பியவர்கள். அவர்களே உலக வாழ்வுக்கு ஆதாரமாய் அமைவர் என்றும் பிறர் நலம் பேணி வாழ்வர் என்றும் கருதப்பட்டது.

தமக்கென வாளா பிறர்க்குரியாளர்கள் இருப்ப தனாலே தான் இவ்வுலகமே உய்ந்திருக்கிற தென்று சங்கப்புலவனான இளம் பெரு வழுதியும், பண்புடையோர் இருப்பதனாலேதான் இவ்வுலகம் உய்ந்திருக்கிறதென்று திருவள்ளுவரும் கூறியிருக்கிறார்கள்.

தனியனித பண்பில் இருந்தே ஒரு நாடு வலிமையை தொழில் வளத்தை நாகரிகத்தை பெறுகிறது. உண்மையும் நேர்மையும் உதார குணமும் ஆண்மைக்குரியது. இவற்றுடன் ஒரு குறிக்கோளையும் இணைத்து கொள்ளும் போது தான் தனி நபரின் ஆற்றல் கவர்ச்சி உடையதாகிறது.

இன்று கடவுள் நம்பிக்கை அற்றவராய் நாத்திகம் பேசிக்கொண்டு இருப்போரும், தம்மை இழந்து உணர்ச்சிவயப்பட்டு சஞ்சலத்திற்கு ஆட்பட்டோரும் நான் என்ற ஆணவம் தலைக்கு மேற்பட்டு தலை கீழாக நடப்போரும் எண்ணுக்கணக்கில் அடங்கார்.

ஊரெல்லாம் கொள்ளைகளும், கொலைகளும் அதிகரிக்க குடியும் கூத்தியும், கற்பழிப்பும் கட்டுக்கு மீறி விட்ட நிலையில் இன்று பொது நன்மையின் பொருட்டு சொந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தும் உணர்வும் சகோதரமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றிய சிந்தனையும் தூண்டப்பட வேண்டிய தேவை உளது. குடிமக்கள் பொறுப்புணர்ச்சி உடையவராய் மதிப்பு வாய்ந்தவராய் கடவுளுக்கு பயந்தவராய் வாழ வழி காட்ட வேண்டும்.

கல்வியும் சமயமும் ஒழுக்கமும் பண்பாடு தேவைப்படுவது மனித வாழ்வைப் பயன் உடைய தாக்குவதற்கன்றி, எப்படியும் பணமும் புகழும் பொருளும் சம்பாதிக்கும் தன்னல வேட்கையை நிறை வேற்றுவதற்காக அல்ல என்பதை மனம் கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழருக்கு நான் எழுதிக்கொள்வது!





ரோசமிகு ஈழத்தமிழருக்கு! வீரமிகு இந்தியத் தமிழன் எழுதிக்கொள்வது. முடிஞ்சாப் படிங்க முடியலயா வுட்டுட்டு ஆள் மாறுங்க.

அண்மைக் காலங்களில் ஒருபேப்பரில் வருகிற விடயங்கள் பலவற்றை எடுத்து வாசித்தால் அதில் இந்தியா பற்றி கிண்டலுடனோ அல்லது தரக் குறைவாகவோதான் ஆக்கங்கள் எழுதப்பட்டு வருவதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. அதனால்தான் உங்களுக்கு இந்த மடல்!

இந்தியா பெரும் கண்டம்! இந்தியா வருங்கால வல்லரசு! அது ஒன்றும் உங்க நாடுபோல் குட்டி மாங்கா கிடையாது.

இப்படி இருக்கிறபோது நீங்கள் யாருயா எங்களைப் பற்றி எழுத!? நீங்கள் வெறும் வெளி வேசக்காரர்கள்! வெத்து வேட்டுக்கள்! சும்மா கூச்சல் போடறவன் இல்ல இந்த இந்தியன்! இவன் அடிக்கிக்கிட்டே போவான். முடிஞ்சா துணிஞ்சா வாசிங்ணேய்...

நீங்கள் "கலை" என்று வருகிறபோது யாரை நினைக்கிறீர்கள்? எங்களைத்தான். சின்னத்திரை முதல் சினிமாவரை நாங்கதான் தருபவர்கள் நீங்க பார்வையாளர் அவ்வளவுதான். உங்கள்ள ஒருத்தன் இதை இல்லண்ணா, நான் உங்க மன்னிப்புக் கேட்டு விட்டு ஆள் மார்றேன். யாராலையும் முடியுமா? இன்ன கப்சிப்பா?

அது ...!

உங்கள் ஊடகங்களை பாருங்கள் அது இங்கு இருந்தாலும் சரி அல்லது உங்க நாட்ல இருந்தாலும் சரி, அவுங்களால இந்தியா இல்லாம ஒரு அடி எடுத்து வைக்க முடியுமா? முடியாதில்ல! அதான் இந்தியா!

சும்மா கத்திக்கிட்டு இருக்காம வேலையைப் பாருங்கையா. ஆனால் இதான் உங்களுக்கு வேலைண்ணா நான் ஒண்ணும் பண்ண முடியாது. சரி விசயத்துக்கு வந்திர்றேன்.

1. சின்னத்திரை
2. சினிமா
3. சுற்றுலா
4. பிரதம விருந்தினராக வருகை தருபவர்கள்
5. கலைப் படைப்புக்கள்.

மேலே சொன்ன ஐந்து விடயங்களுக்கும் இந்தியாவின் உதவிதான் ஈழத்தமிழருக்குத் தேவைப்படுகிறது. இந்தியா இல்லண்ணா உங்க கதி, அதோ கதிதான். புரியல்ல?

சொல்றேன்.

அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களில் அதிகமாக இருக்கிறது யார்? நீங்கதானே, அப்பிடின்னா இங்க காட்டப்படும் சின்னத் திரைகள் யாவும் யாருக்குப் காட்டப்படுகின்றன? உங்களுக்குத்தானே,

இந்தியனான நானே வெறுக்கும் இந்தச் சின்னத் திரைகளைத் தலையில வைச்சு ஆடுறது யாரு நீங்கதானே. உங்க குழந்தைகளிடம் எப்படி நாடகங்களை பதிவு செய்வது என்று கேட்டு அறிந்து அதனைப் பதிவு செய்து வைத்துப் பார்த்துப் பார்த்து அழுவதற்கு உதவுவது உங்கள் ஈழத்து விடயங்களா? இல்லையே சின்னத் திரைகள்தானே. அப்புறம் என்ன உங்களுக்கு இந்தியா மீது இளக்காரமான பார்வை? உங்ககிட்ட ஒண்ணுமே இல்ல. வாய் வீச்சத் தவிர!

> *இந்தியா பெரும் கண்டம்! இந்தியா வருங்கால வல்லரசு! அது ஒன்றும் உங்க நாடுபோல் குட்டி மாங்கா கிடையாது.*

சினிமா என்று ஒரு பொழுதுபோக்கு இல்லேண்ணா இன்றைக்கு பலர் உயிர் வாழ மாட்டாங்க. இந்தச் சினிமாவை நீங்க யாரிடம் இருந்து பெறுகிறீர்கள். நம்மகிட்ட இருந்துதானே. எத்தனை ஈழத் தமிழர்கள் ரஜினிக்குப் பின்னாலும் விஜய்க்குப் பின்னாலும் அலைந்து கொண்டு திரிகிறார்கள். உங்க ஊரில உங்களுக்கு ஒரு தலைவர் இருக்கார்னு தெரியும். ஆனால் இங்க உங்க பசங்களுக்குத் 'தலை'ன்னா அஜித் 'தலைவா'ன்னா விஜய் 'தலைவர்' என்னா ரஜினி தெரியுமில்ல உங்களுக்கு!

அது எப்டி நீங்க ஒரே நேரத்தில நாலைஞ்சு தலைவர் வைச்சுக்கிட்டு இருக்கீங்க? நம்மளால இப்டி எல்லாம் செய்ய முடியாது. மனசு ஏத்துக்காது. ஆனா நீங்க பயங்கரக் கில்லாடிங்க. உங்களுக்கு வேணுமின்னா எத்தனை தலைவரையும் வைச்சிருப்பீங்க. நாளைக்கு உங்க ஊர்ல ரஜினியோ விஜயோ தேர்தல்ல நின்னா வெல்லப்போறது உங்க ஊர்க்காரன் கிடையாது நம்மாளுகதான். சினிமாதான் எல்லாவற்றையும் தீர்மானிக்குது.

> *கலை அது இதுன்னு ஈழத்தமிழர் என்றபடி இந்தியாவில பலரைப் பார்க்கக்கூடிய நிலை வந்துள்ளது. இந்நிலையால் வருங்காலத்தில் இந்தியாவில் ஈழத்தமிழர் அங்குள்ள நாய்களை விடக் கூடி விடுவார்கள்.*

சரி சினிமாவ கொஞ்சம் வுட்டுட்டு சுற்றுலாப் பக்கம் வாங்க. உங்க ஈழத்தமிழர் ஒருவரிடம் வாங்க ஒரு மாதம் இந்தியா போய் வருவோம் என்னா அப்பிடியே வழியும் பாருங்க மூஞ்சில... யப்பா. . . . !

அதவுடுங்க நான் ஒரு இந்தியன் நானே அந்த கள்ளச் சாமிய மெனக்கெட்டுப் போய்ப் பார்த்ததில்லை. ஆனால் உங்க ஊர்க்காரனுவ எல்லாரும் புறப்பட்டாங்க இங்க இருந்து. அன்னிக்கு ஒரு நடன குழு ஒண்ணு புறப்பட்டுப் போய்க்கிட்டு இருக்கிது. எங்க போறாய்ங்கன்னு போய்ப் பாத்தா இந்தியாவில சாமிக்கு முன்னாடி ஆடிக் காட்டப் போறாங்களாம். அந்த மனிசனுக்கேவா என்னு சிரிப்புத்தான் வந்திச்சு, தெரியாமத்தான் கேட்கிறேன். உங்களுக்கு என்ன அப்படி ஒரு "ஈ...ர்ப்பு" அந்தச் சாமியிடம்?.

இந்தியாவில கோயில் பாக்க வாறீங்க! குளம் பாக்க வாறீங்க! சரி நான் ஒரு கேள்வி கேட்கிறேனே. உங்க நாட்டில உள்ள சகல கோயில்களுக்கும் போய் இருக்கிறீர்களா? இல்லைண்ணு எனக்குத் தெரியும். முதல்ல அதைப் பாருங்க. அப்புறம் நம்ம பக்கம் வரலாமில்ல ஆனால் தொடர்ந்து வாறீங்க. ஏன்னா எல்லோருக்கும் எங்கள் நாட்டைப் பார்க்க வேண்டும் என்று ஆசை!

சரி இந்தியாவுக்கு நீங்கள் வரும் கதையினை விடுங்க. இங்க ஒரு அரங்கேற்றம் நடக்கிண்ணு வைங்க அதாவது நடனம், பாடல், அல்லது ஏதாவது இசைக்கருவி இப்படியான ஒரு அரங்கேற்றத்திற்கு யாரு பிரதம விருந்தினரா வாறாங் கண்ணு பாருங்க. இலங்கையரா இல்லையே நம்ம இந்தியாக்காரர் தான். ஏன்? அதான்யா இந்தியாக்காரன். உங்க ஆட்கள் இவ்வளவு பெரிய பொறுப்பான விடயங்களை உங்கள் பக்கத்து வீட்டுக்காரரே அழைக்கமாட்டார். உங்களுக்கு பந்தா பண்றதுக்கு இந்தியா வேணுமய்யா!

இப்போது கலை அது இதுன்னு ஈழத்தமிழர் என்று சொல்லியபடி இந்தியாவில பலரைப் பார்க்கக் கூடிய அளவுக்கு நிலை வந்துள்ளது. இந்த நிலை தொடருமாயின் வருங்காலத்தில் இந்தியாவில் ஈழத்தமிழர் நடமாட்ட எண்ணிக்கை அங்குள்ள நாய்களை விடக் கூடிவிடும் என்று என் நண்பன் சொன்னான். ஏனைய்யா உங்களுக்கு இப்படி ஒரு நிலை. நினைக்கவே வேதனையா இருக்கிறது. ஆனால் என்ன சொல்ல இந்தியாவைத்தான் நம்பி வாழ்வது ஆனால் அவர்களுக்கு எதிராக எழுதித் தள்ளுவது. என்ன விதமான மனிதர்கள் நீங்கள்.

சரி, நமக்குள்ள ஒரு அக்றிமண்டு போட்டுகிறது நல்லது என்னுதான் படுது. அதாவது நீங்க எதுவானாலும் எழுதுங்க, செய்யுங்க. ஆனால் இந்தியா பற்றி எழுதாதீங்க. ஏன் தேவை இல்லாம இந்தியாவைத் தொட்டு உங்கள் மரியாதையை கெடுத்துக்கிறீங்க.

இந்தியா பெரும் கண்டம்! இந்தியா வருங்கால வல்லரசு! அது ஒன்றும் உங்க நாடுபோல் குட்டி மரங்கா கிடையாது. உங்ககிட்ட ஒண்ணுமே இல்லாமல் எங்களையே நம்பியபடி இருந்து கொண்டு பிறகேன்யா எங்களோடு உரசல் உங்களுக்கு!

வேணுமுன்னா என் தாய் நாட்டுக்காக மறுபடியும் வருவேன்.

ஜெய் ஹிந்த்!

- *இந்தியன் (தாத்தா இல்ல)*

மண்ணும் ஆட்சியும் கொண்டு வாழ்கிறார் மற்ற மனிதர்கள் தற்பலமாய்! சற்று நீ விழி சாதனை புரி வெற்றி பெற்றிடும் எங்களினம்!

ஒரு பேப்பர் ORU PAPER

சமரசம் இல்லையேல் சாமாதானம் இல்லை

உமா மகாலிங்கம்
(ஒரு பேப்பருக்காக)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் 40 வருடங்களுக்கு மேலான போராட்ட வரலாற்றில், கடந்த ஆவணி மாதம் 15ம் திகதி வரலாற்று பெருமை கொண்ட பொன்னாள். பாலஸ்தீன மக்களின் பூர்வீக பூமியை கவர்ந்து 34 வருடங்களுக்கு பின்னர், ஆக்கிரமித்த இடங்களை விட்டு அகல வேண்டிய நிர்பந்தத்தை இஸ்ரேலியக் குடிமக்கள் அனுபவித்து உணர்ந்த ஒரு நன்னாள். எந்த ஒரு அரசு, இம்மக்களை பலவந்தமாக குடியேற்றி, அம்மக்களின் பாதுகாப்புக் கருதி, நிராயுத பாணிகளான பாலஸ்தீன அப்பாவி மக்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்து, உலகநாடுகளின் ஒருங்கிணைந்த வேண்டுதலுக்கு அடிபணியும் காரணியால், அசுரத்தனம் கொண்ட அதேஅரசு, பலத்த எதிர்ப்புக்கள் மத்தியிலும் தான் குடியேற்றிய அதேமக்களை கண்ணீருக்கும் கம்பலைக்குமிடையில் பாலஸ்தீன மக்களுக்கே சொந்தமான காசா பிரதேசத்தில் இருந்து, விலக்கிகொள்ள எடுத்த முடிவு சரித்திர முக்கியம் வாய்ந்தது.

தாய்மண்ணை இழந்த பாலஸ்தீன மக்களால் நவீன ஆயுதங்களையும் அமெரிக்க வல்லரசின் ஆசியையும் ஆதரவையும் அரவணைத்து கொண்ட இஸ்ரேலிய ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ள முடியாமல் கல்லினாலும் பொல்லினாலும் தான் போராட முடிந்தது. முதியோர், இளையவர், ஆண்கள், பெண்கள் என்று அனைவருமே தாமிழந்த தாயக மண்ணை மீட்க தம் உயிர்களை தியாகம் செய்தது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பாதையில் இடப்பட்ட மைல் கற்கள். அவர்களது போராட்ட முனையில் மனித வெடி குண்டுகளின் தாக்கம் இஸ்ரேலிய மக்களின் அமைதியை வெகுவாகப் பாதித்தது மறுக்க முடியாத உண்மை. இதை நன்றாகவே உணர்ந்த இஸ்ரேலிய அரசு, மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியும், அயல் நாடுகளான இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் சமாதானம் அடைய வேண்டுமானால், ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை விட்டு தாங்கள் அகலத் தான் வேண்டுமென்ற அசைக்க முடியாத ஒரு எதிர் முடிவை, இஸ்ரேலிய அதிபரான ஏரியல் சரோன் தீர்க்க தரிசனத்துடன் எடுத்து கொண்டமை, சமாதானம் விரும்பும் ஒவ்வொரு இன மக்களும் பாராட்டத்தான் வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நியாயபூர்வமான கோரிக்கையை ஆரம்பத்திலேயே ஆதாரித்து, அவர்களை தட்டிக் கொடுக்க முன்வந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆரம்பகாலத்தலைவராக இருந்து, பாலஸ்தீன மக்களின் அதிபராக பதவிவகித்த மறைந்த தலைவர் அரபாத் அவர்களுக்கு செங்கம்பள வரவேற்பளித்த இந்தியா, அயல்நாட்டு மக்களை ஈழத் தமிழர்களின் போராட்டத்தை இழிவு படுத்தி, பயங்கரவாதமென பழி சூட்டியது, இந்தியாவின் இரட்டை வேடத்தை காட்டி நிற்கிறது. பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை விடுதலை இயக்கமாக காட்டிய இந்திய அரசு, ஈழத் தமிழரின் விடுதலைக்காக போராடும், புலிகள் இயக்கத்தை தடை செய்ததோடு மட்டுமில்லாமல், அவர்களை அடியோடு அழித்து விடவும் தயார் நிலையில் உள்ளது.

இஸ்ரேலியர்களின் அசுரத்தனமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்த அமெரிக்கா, அதன் தவறை உணர்ந்துகொண்டு பாலஸ்தீன மக்களுக்கு உதவ வந்துள்ளமை, அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதை உணர்த்தவில்லையா? ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை விட்டு, இஸ்ரேலிய குடியேற்றம் முற்றாக நீங்கும்வரை, பலஸ்தீன மக்கள் அமைதி காப்பது புத்திசாலித்தனம் இஸ்ரேலியர்களின் வெளியேற்றம், உலக அரங்கிலும் குறிப்பாக அமெரிக்காவிலும், நல்லதொரு மதிப்பை இஸ்ரேலிய அரசுக்கு அளித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பின் விளைவை அறியா சில சக்திகள் பாலஸ்தீன விடுதலையை குழப்பி விடவும் கூடும். பலம் பொருந்திய அரசியல் தலைவர்கள் பலஸ்தீனத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவேண்டியது அவசியமாகிறது. புரையோடிப் போன மத்திய கிழக்குப் பிரச்சினையை ஒரு அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்த இஸ்ரேலியதலைவர் சரோன் முன்வந்துள்ளார். மக்களின் மனதில் காயப்பட்ட ரணம் குணமடைய சில காலம் செல்வது தவிர்க்க முடியாது. இக்கால அவசரத்தை பயன்படுத்தி, இருசாராரும் பரஸ்பர நம்பிக்கையை கட்டி எழுப்புவதும் சமாதானத்தை நிரந்தரமாக்குவதும் அவரவர் கடைப்பிடிக்க போகும் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

பிரித்தாளும் கொள்கைக்கு பெயர் போன பிரித்தானியா, வடஅயர்லாந்து பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருமுகமாக, ஐ.சு.யு என அழைக்கப்படும் அயர்லாந்து மக்களின் புரட்சிகர இயக்கத்தை ஒரு காலகட்டத்தில், தடைசெய்ததோடு நில்லாமல் அவர்களின் முக்கிய புள்ளிகளை, தயவு தாட்சண்யமின்றி சிறையில் அடைத்தமை கடந்த கால சரித்திரம் வட அயர்லாந்து மக்களின் அமைதி நிரந்தரமாக்க வேண்டுமாயின் ஐ ஆர் ஏ இயக்கத்துடன் சமரசம் செய்தே ஆகவேண்டிய நிலைமை பெரிய பிரித்தானிய அரசுக்கு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. இவ்வுண்மையை உணர்ந்த பிரித்தானியா அனேக விட்டுக் கொடுப்புக்கள் மத்தியில், விடுதலை இயக்கத்தை வன்செயல்களை களைவதற்கு ஒப்புதல் கண்டுள்ளது, IRA இயக்கம் ஆயுதங்களை களைவதற்கு சம்மதம் தெரிவித்த மறு நாளே, இலங்கையில் உள்ள சிங்களத் தலைவர்களால் ஈழத்திலும் விடுதலைப் புலிகள் அவ்வாறு ஆயுதங்களை களைந்து சமாதானத்துக்கு முன் வர வேண்டுமென விடுத்த அறிக்கைகள் பறந்து வந்ததை காண நேர்ந்தது. IRA இயக்கத்தினருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் கொள்கையில் பல வேறுபாடுகள் உண்டு என்பதை உணரத் தவறி விட்ட சிங்கள தலைவர்கள், பலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கும், விடுதலை புலிகள் இயக்கத்தினருக்கும் இடையேயுள்ள பல ஒற்றுமைகளை காணத்தவறிவிட்டது ஏனோ?

ஆறு நாள் போரில் அபகரிக்கப்பட்ட பலஸ்தீன நிலத்தில் இஸ்ரேலிய மக்களை எவ்வாறு பலவந்தமாக குடியேற்றினர்களோ, அதே போல் தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள குடியேற்றங்களை, பதவிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் மிகச் சாமர்த்தியமாக குடியேற்றியது வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்றப்பட்ட சிங்கள இனத்தவர், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் தொகையில் வளர்ந்து விட்டது வரலாறு. கிழக்கு ஈழத்தில் பறிபோன நிலங்களில் கூடுதலாக வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தமது தனித்துவத்தை வேண்டி நிற்கும் இந்த வேளையில் தமது தலைவர்கள் விட்ட தவறுகளை உணர ஏன் தயங்குகிறார்கள்.

பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகத்தை உணர்ந்து கொண்ட உலக அரங்கம், ஈழத்தமிழர்களுக்கு (தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் உட்பட) நிராகரிக்கப்பட்ட நியாயமான அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பது எப்போது? பாரம்பரியமாக வாழ்ந்த வீடுகளை, வளம் செழிக்க, விவசாயம் செய்த பொன்னான பூமிகளை, உயர் பாதுகாப்பு பிரதேசம் என்ற போர்வையில், பறித்தெடுத்து சிங்கள இராணுவத்தினருக்கு வதிவிடமாக மாற்றியமைத்து காலப் போக்கில் இப்பிரதேசம் சிங்களர் பூமியாக மாறிவிடும் அபாயம் இல்லாமல் இல்லை. நிரந்தர சமாதானம் ஈழத்தில் வேண்டுமாயின் இஸ்ரேலியர்கள் எடுத்த முடிவு போல் தமிழர் தாயகத்தில் அத்துமீறிய சிங்களவர்கள் குடியேற்றம் மீளப் பெறவேண்டும். நடக்குமா?

Activites:
3km sponsored Walkathon
(Please register @
www.sustainweb.org.uk)
Registered Charity No. 1110221

Kids Competition
Bouncy Castle
Face Painting
Sumo Wrestling
Adult Gladiators
Football
Netball and many more

Contact:
079092 119 655
07947 246 704

Free Entry, All Welcome!
Free Car Parking Available
Activities are chargeable

.....Helping communities Sustain themselves.....

Sustain Family Fun Day

Raise money to benefit Tsunami Survivors in NE Sri Lanka

(Current Projects: Boat Manufacturing Factory, Empowerment of Tsunami Widows, Educational and Housing Projects)

.....for a brighter future

Sept 10th 10am-6pm
Burgess Park, Chumleigh Street(off Albany Road) Camberwell SE5 0 RJ
Nearest Tube: Elephant & Castle

கமரா

- கருணா

பாகம் - 7

சென்ற இதழின் தொடர்ச்சி . . .



இங்கே உள்ள புகைப்படத்தில் உள்ள இவரது உடலமைப்பும் சேர்த்து உருவாக்கும் முக்கோணங்களைக் கவனியுங்கள். இவர்கள் இருவரும் நிலையாக நிற்பதை விடவும், இப்போதுள்ள நிலை நிழலுடன் சேர்த்து அழகான ஒரு அமைப்பையும், சமநிலையையும் தருகின்றது.

Balance

புகைபடங்களை அழகாக வடிவமைப்பதில் உள்ள அடுத்த வழிமுறை Balance ஆகும். சிறந்த சமநிலையுள்ள புகைப்படம், வடிவங்களை ஒழுங்கமைப்பது, வடிவ மைப்பது, நிறங்கள், ஒளிவிழும் பகுதிகளைச் சரியான முறையில் பிரிப்பது ஆகியவற்றில் தங்கியுள்ளது.

இங்குள்ள புகைப்படத்தில் உட்கார்ந் திருப்பவர், விழுந்து விடப்போகிறார் போன்ற தோற்றத்தை உருவாக்கின்றது. ஏனெனில் தட்டைத் தாங்கி நிற்பதற்கான ஆதாரம் எதுவுமே புகைப்படத்தில் இல்லை. இப்பொழுது கமராவை சற்றுத் தள்ளி புகைப்படத்தை எடுப்போம். இப்போது படம் சமநிலையில் உள்ளது.





சமநிலையில் உள்ள புகைப்படங்களுக்கான உதாரணங்களாக கீழே உள்ள புகைப் படங்களைப் பார்க்கலாம்.



Framing

இங்கே உள்ள படகு, கடல் என்பவற்றுடன், கமராவிற்கு அண்மையில் உள்ள மரமும் சேர்த்து புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. எமது கருப்பொருள் படகாக இருந்த போதிலும் அண்மையில் உள்ள மரமும் சேர்க்கப்படும் போது புகைப்படம் நிபுணத்து வமானதாக உள்ளது. இங்கே சொல்லப்படும் வழிமுறையானது, முன்னர் சொல்லப்பட்ட Simplicity வழிமுறைக்கு முரணானதாக இருப்பதை நீங்கள் கவனிக்கலாம். புகைப்படம் எடுக்கும் சந்தர்ப்பத்திற்கும், நோக்கத்திற்கும், உங்கள் கற்பனைக்கும் ஏற்றவாறு, நீங்கள் எந்த வழிமுறையை வேண்டுமானாலும் பாவிக்கலாம்.



இங்கே உள்ள புகைப்படத்தில் வொஷிங்டன் நினைவுத் தூபி படமெடுக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

Framing நுட்பத்திற்கு உதாரணமாக, கீழே உள்ள புகைப்படத்தைப் பார்க்கலாம்.

Mergers

சில சமயங்களில் எதிர்பாராத முறையில் பின்னணியில் உள்ள பொருட்கள் கருப் பொருளுடன் சேர்ந்து வேடிக்கையான தோற்ற த்தை உருவாக்கி விடுகின்றன. இவற்றை நாம் தவிர்த்தாக வேண்டும். எப்பொழுதும் புகைப்படம் ஒன்றை எடுக்கும் போது, பின்னணிப் பொருட்கள், கருப்பொருட்களைப் பாதிக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இங்கே உள்ள புகைப்படத்தில், புகைப்படம் எடுப்பவர் இறுதியில் இருந்த நபரைக் கவனிக்க வில்லை, இவருடைய வெட்டுப்பட்ட உருவம் புகைப்படத்தின் அழகைக் கெடுக்கின்றது.

இங்கே சொல்லப்பட்டவை, புகைப்படத் துறையில் பாவிக்கும் சில வழிமுறைகளே. இவை எல்லாமே எப்போதும் பாவிக்கப்பட வேண்டும் என்று ஒரு விதியும் இல்லை. நீங்கள் புகைப்படங்களை எடுக்கும் போது, இவ் வழிமுறைகளில் ஏதாவது அச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக இருப்பின் அவற்றை உபயோகிக்கலாம். சில வேளைகளில் ஒரு சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாக இருக்கும் வழிமுறையானது, இன்னொரு சந்தர்ப்பத்தில் பொருத்தமில்லாத ஒன்றாக இருக்கலாம். எனவே உங்கள் கற்பனைக்கேற்றவாறு வழிமுறைகளைப் பாவியுங்கள்.

தகவல் மூலம், புகைப்படங்கள்
www.kodak.com

There are no rules for good photographs, there are only good photographs.

~ Ansel Adams

(இதுவரை காலமும் உங்களுக்குப் படம் காட்டியவர் . . . உங்கள்
கருணா . . கருணா . . கருணா.)

ஸ்ரீ சிவசங்கர ஜோதிடம் ASTRO - PALMIST

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஸ்ரீ முரளிதர சாஸ்திரி அவர்கள்

உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைப்பார்



கைரேகை, முகநாடி ஆகியவற்றைக் கொண்டு, குறிப்புப் பார்த்தும் உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விவகாரங்கள், தேகசுகம், எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா, பிராத்தனைகளும் கண் திருஸ்டி, தோசம் நிவர்த்தி செய்தும் தரப்படும்.

சாஸ்திரிகளை சந்திக்கும் இடம்
Ganapathy Cash & Carry
44 Ealing Road
Wembley, Middlesex
HA0 4TL

திறந்திருக்கும் நேரம் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

07947 311 880

இலவச கணணி பயிற்சி நெறிகள்

FREE COMPUTER TRANING

(Evening & Weekend Classes)

word

excel

access

power point

outlook

internet

computer fundamentals

CV writing

Microsoft office 2003 Applications
Word, Excel, Access, Powerpoint, Internet & Email)
(ECDL Qualification)

Computer installation & maintainence
(Installing, configuring, upgrading, troubleshooting and repairing computer
hardware and operating system)
(A+ Service Technician)

General Network Training
(Home, Office, Wireless Networking)
(CompTIA Network + Qualification)

Advance Network Training
(Implement, Manage, and Troubleshoot Windows 2000 Server based corporate network)
(Microsoft Certified System Administrator - MCSA Qualification)

Website design
(Dreamweaver, Flash, Fireworks)

Graphic Design
(Photoshop, Illustrator, Indesign, Quark Xpress)

11+

Math

English

Computing

O/L

Math

Science

English

French

A/L

Math

Physics

Chemistry

Biology

Tamil

French

SC science centre

45 B Crusoe Road,
Mitcham CR 4 3LJ

Tel: 020 8715 4775 Fax: 020 8640 6972
www.science-centre.com

Adobe Certified Training Provider

Microsoft Certified Professional

macromedia CERTIFIED PROFESSIONAL

விடுதலை இலட்சியம் வென்றெடுக்க கிளிநொச்சியில் திரண்ட லட்சம் தமிழர்கள்!

தமிழர் தம் அரசியல் விடுதலையை வென்றெடுக்கும் வகையில் தமிழர் கோரும் உரிமைதான் என்ன என்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்த கிளிநொச்சியில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாடு இன்று வியாழக்கிழமை பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

கிளிநொச்சி பொது மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு நிகழ்வு தொடங்கியது. முதன்மைச் சுடரினை மாவீரர் மேஜர் விமலின் துணைவியார் தமிழ்ச்செல்வி சண்முகநாதன், மாவீரர் மேஜர் கமலின் தந்தையார் முத்துச்சாமி அருணாசலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் கப்டன் வண்ணனின் தந்தை முத்துவேல் சீவரத்தினம் ஏற்றிவைத்தார். எழுச்சி சுடர்களை சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களின் தேசிய எழுச்சிப் பேரவைகளின் செயலாளர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து எழுச்சி அரங்கு நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சி செயலணி தலைவர் தி.பிரபாகரன் தலைமையுரையினை திகழ்த்தினார். யாழ்ப்பாண ஆயர் சௌந்தர்நாயகத்தின் ஆசிச் செய்தியினை கிளி, முல்லை குரு முதல்வர் பேனாட் அடிகளார் வாசித்தார்.

யாழ்ப்பாணம் மக்கள் பணிமனை செயலாளர் எஸ்.எம்.சகீல் மௌலவி, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், முன்னாள் யாழ். தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசன், வட்டக்கச்சி முருகன் ஆலய குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்தினர். தமிழீழ அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மேகனதாஸ், கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்களநாதன், ச.கனகரட்ணம், சி.சிவநேசன், சே.ஜெயானந்தமூர்த்தி, க.பத்மநாதன், இரா.சம்மந்தன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி செயலாளர் அ.வேழமாலிகிதன் எழுச்சிப் பிரகடனத்தை வாசித்தார். கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை நன்றியுரையினை நிகழ்த்தினார்.

தேசியத் தலைவருக்கான பிரதி கையளிப்பு தமிழீழத் தேசியத் தலைவருக்கான பிரகடன பிரதியினை தமிழீழ அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை கையளித்தார்.

கடந்த யூலை மாதம் 27 ஆம் நாள் வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய பேராளர் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தி இப் பிரகடன நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா தமிழீழ தேசிய எழுச்சிப் பேராளர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் வெளிப்படுத்த இந்த மாநாடு கூட்டப்பட்டது.

இலட்சத்துக்கு மேல் திரண்ட தமிழ் மக்கள் தமிழீழமே எங்கள் மூச்சு என்ற தமிழ்த் தேசிய எழுச்சி பிரகடனத்தை இன்று நிறைவேற்றினர். வட்டக்கச்சி, பரந்தன், கண்டாவலை, பூநகரி, முழங்காவில், உருத்திராபுரம், அக்கராயன் ஆகிய பிரதேசங்களிலிருந்து நிகழ்ச்சி நடைபெறும் கிளிநொச்சி பொதுமைதானத்தில் பெருந்திரளாக குவிந்தனர். நிகழ்வுக்கான சிறப்பு ஒழுங்குகளை தமிழீழ காவல்துறையினர் ஏற்பாடு செய்தனர்.

- நன்றி புதினம்

இல்லந்தோறும் இனிய வாழ்வு

தம்பதிகளாக வாழ்வது எப்படி?

Dr. பாலேந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

வெளிநாடுகளில் வாழும் தமிழ் சிறுவர்களிடையே தம்பதிகளாக வாழ்வது பற்றி முரண்பாடான விமர்சனம் கிடைக்கின்றது. இதற்கு காரணம் அவர்கள் வாழும் சூழல், தகவல் சாதனங்களின் காணும், கேட்கும் விடயங்கள் பலதரப்பட்ட திரைப்படங்களைப் பார்க்கக் கூடிய வசதி. இக்கட்டுரையில் வெளிநாட்டு தம்பதிகள் வாழும் முறைபற்றியும், உறவுகள் தொடங்கி, வளர்ந்து பின் பூரணத்துவம் பெறும் தன்மை பற்றியும் சில விளக்கங்கள் தரப்படும்.

பெரும்பாலானவர்கள் தனக்கு ஒரு சோடியை தேடிக்கொள்வதற்கு அடிப்படை காரணம் அன்பு! காதல்! கரிசனம் ஆகிய உணவுகளை முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் பரிமாறிக்கொள்வதாகவே மனித சமுதாய ஒருமைக்கும், வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் இவையே அடிப்படையாகும். இவ்வாறு ஆரம்பிக்கும் ஒரு உறவு வெற்றிபெற வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இருவரும் அன்னியோன்னியமாகவும், ஈர்ப்புடனும், சகிப்புத்தன்மையடனும் வாழவேண்டியது அவசியம்.

இந்த இணைப்பு தொடர்ந்து வளர உறவினர் நண்பர்கள் ஆகியோரின் ஆதரவும் அங்கிகாரமும் தேவைப்படுவது யதார்த்தம். உறவுகளை எதிர்த்து ஏற்படும் இணைப்பு வெற்றி பெறுவது இலகு அல்ல.

இருவர் இணைந்து தம்பதிகளாவதற்கு அடிப்படை தேவை ஒருவரின் உடலமைப்பில் மற்றவருக்கு ஏற்படும் ஈர்ப்பு, இந்த உணர்வு ஒவ்வொருவரின் பழக்க வழக்கம், படிப்பு அறிவு, நற்குணம் சமூக அந்தஸ்து ஆகியவற்றால் வலுப்பெறும். இவ்வாறு சேரும் இருவர் முதலில் நல்ல நண்பர்களாக சிலகாலம் பழகுவர். நட்பு வலுப்பெற்று ஒருவரை ஒருவர் நன்கு அறியும் போது கவர்ச்சி, ஈர்ப்பு, உரிமை பாராட்டுவது, பிரிவு ஆற்றாமை ஆகிய உணர்வுகள் வலுப்பெறும்.

அடுத்த கட்டமாக இருவரும் சேர்ந்து சிந்திப்பது, முடிவகளை, விட்டுக் கொடுத்து நடப்பது, குறைகளை சகித்து கொள்வது போன்ற உணர்வுகளை வளர்த்து கொள்வார்கள். இது வெற்றிகரமாக அமையுமானால் அடுத்த கட்டமாக முக்கிய முடிவுகளை இணைத்து எடுப்பார்கள். திருமணம் செய்வது, வீடு வாங்குவது குழந்தை பெற்று கொள்வது முக்கிய முடிவுகளாகும்.

குழந்தைகளை பெற்று வளர்த்து தமது கடமைகளை முடித்த பின் நடுத்தர வயதை அடைகிறார்கள். இவ்வயதில் உடல் நோய்கள் சில ஆரம்பிக்கின்றன. பொருளாதார நிறைவு அல்லது தாழ்வு ஏற்பட இடமுண்டு. இவ்வயதில் சோடிகளுக்கு இடையே மனரீதியான பிணைப்பு அதிகரிக்கும். சில சமயம் உடல் ரீதியான ஈர்ப்பு குறைவடையலாம். இவ்வாறான நிலைமைகளில் தனது சோடியை தவிர மற்றவர்களுடன் உடற்பசி, கவர்ச்சி ஏற்பட ஏதுவாகும். மனஉளைச்சல், ஆற்றாமை போன்ற உணர்வுகளாலும் பாதிக்கப்படலாம். இதனை MIDDLE LIFE CRISIS எனப்படும்.

இன்னமும் சிறிது முதுமை அடையும் போது பாலியல் ஈர்ப்பு முழுமையாக குறைவடைந்து விடும். அப்போது மணமுதிர்வு, தெய்வப்பக்தியும், தனது சோடியின் மேல் அன்பு, மரியாதை ஆகிய உணர்வுகள் ஏற்படும். ஒருவரில் மற்றவர் தங்கியிருக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

குடும்பத்தில் இவர்களை முதியவர்களாக மதிப்புடன் தனிமைப்படுத்த படும் போது இவர்களுக்கு தனிமையில் வாழும் சந்தர்ப்பம் ஏற்படும். சாதாரணமாக முதுமையில் உடல் தளர்வு அடையும் போது மனதில் சாந்தம், அன்பு, பணிவு, தியாகம், பொறுமை, நம்பிக்கை போன்ற தெய்வீக் குணங்கள் வலுப்பெறும்.

இதனால் தம்பதிகள் தாங்கள் இளமையில் இருந்ததை விட அதிக அன்புடனும் பாசத்துடனும் வாழ முடிகிறது. இவ்வாறு வாழும் தமது சந்ததியினர்க்கு வாழ்க்கை நெறிமுறைகளை காட்டும் கலங்கரை விளக்காக இருப்பார்கள்.

Quotation / cover provided over the phone
No more proposal forms to complete
No more immediate payment
No more Direct Debit Mandate to complete
No more claim form to fill - All the details are taken over the phone.
But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover
Please ring us for a friendly service **020 8763 2221**
P.SRINIVASAN 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

Home Insurance
Building and Contents Insurance including Let Properties
Term Assurance / Critical Illness
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
Retailer , Shopkeepers & Liabilities
All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.
Mortgages / Re-Mortgages -
Decision in Principle/Virtual offer over the phone
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered
ARM Associates FSA Financial Services Authority
Authorised and Regulated by the Financial Services Authority

KIDS பக்கம்

Too proud of his riches!

Kubera was the richest man in the world. He was very proud of his wealth and thought he was greater then anyone else in the world.

He liked the people to come begging for help. Kings, nobles and all-important people went to him at one time or another seeking his help and he always helped them.

He built big temples and huge palaces. He held festivals. He arranged feasts and gave rich gifts to rajas and noblemen. He gave help to the poor but with all his spending, his wealth only increased, and he had to find new ways of spending it. He thought long about this and decided to invite the gods themselves to a big feast. Lord Shiva was his favorite god. It was owing to Shiva's blessings that he had become so rich. So Kubera wanted to invite Shiva and his family to a feast.

Kubera went to Kailash, offered his prayers to Shiva and said, "O Lord, I am grateful to you for all your blessings. I am the richest man in the world. I have helped the rich and the poor alike. Now everybody sings my praises. My Lord," he continued, "I have come here to invite you and your family and friends to feast at my house. I shall call all the important people in the world. They all want to meet you to pay their respects to you."

Shiva said: "I don't think my wife would like to go out without me, and the children will not go without their mother."

Kubera, disappointed fell at Shiva's feet and said: "My Lord, I told everyone that I was coming here to invite you. They all think that you never refuse anything I ask you."

Shiva said: "I think I can help you. I shall ask my Ganapathi, my son, to attend a feast in your home." Kubera agreed. Kubera made arrangements to hold the biggest feast ever held in the world.

Ganapathi arrived at the appointed time. Kubera received him with respect and courtesy. Ganapathi said that he was very hungry and wanted his food first. Kubera took Ganapathi to the dining hall, which was beautifully decorated. He was very hungry and quickly ate up all the food that had been served. The plates were refilled and Ganapathi gobbled up all the food. More and yet more food was brought and it was eaten as soon as it was served. Soon he had eaten all the food prepared for thousands of people, and he was still asking for more.

Kubera ordered more food to be cooked. But Ganapathi stood up and said that he was so hungry he could not wait. He turned to Kubera and said, "You wanted me to eat here. Give me some food or I shall have to eat you." Kubera took fright and started running. Ganapathi ran after him. Kubera ran faster and Ganapathi was just behind. They ran for a long time until they reached Kailash. Kubera cried aloud to Shiva. Shiva came out and Kubera fell at his feet.

"What is all this?" asked Shiva.

Ganapathi said, "Kubera didn't give me enough to eat and I am still hungry."

"You go in and asked your mother to give you something," said Shiva, and Ganapathi left.

Shiva looked kindly at Kubera. Kubera prayed to Shiva and begged to be forgiven for being too proud of his riches.





Colouring

Why not enter our colouring competition? Simply colour me in and send it to ***ORU PAPER*** and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's runners up -
-Mithra.B (age 9), from Surbiton.
-Vinaja (age 5) from Eastham

The teaching of the Buddha were chanted as oral recitations for over two centuries before they were recorded in writing mostly in South India and Sri Lanka.

The three greatest Pali scholar of this period- the grand masters of Theravada Buddhism- all hail from the Tamil Country.

The three great masters (1) Acharya Buddhaghosa (2) Acharya Buddhadatta and (3) Acharya Dhammapla wrote treatises and commentaies on Tripitaka; explaind and expounded the philosophies of Buddhism and the doctrine of Buddha and paved the way for the spread of this philosophy to countries like Lanka, Burma,Tibet, Cambodia, China, Japan, Korea, Sumatra, Java, Siam and others. Their joint output of Buddhist religious literature is turly mind- boggling.

The fact that these three scholars were all Tamils who learnt Pali, became proficient in that language, mastered the teachings of Buddha and became the torch bearers of Tripitaka is something the quasi-historians of today do not know about! This, deserves to be shouted out!

Acharya Buddhaghosa

Towards the early part of fifth century BC, during the reign of the Kalabhra King Kumaragupta 1, Acharya Buddhaghosa was the maha thera or chieft priest of the Buddha Maha Vihara at Kanchi. *(Acharya -great teacher)*

A Tamil Buddhist from the Pallava country Buddhaghosa became proficient in Pali at a young age and has mastered the Philosophy and teachings of Buddha. An exponent of the Tripitaka, he wrote commentaries and treatises for the whole of Vinaya Pitaka, Abhidhamma Pitaka and for about 60 percent of the Sutta Pitaka as well.

His classical works 'Samantha Pasathika' (*Vinaya-pitaka*), 'Panchapakarana Attakatha' (*Abhidhamma-pitaka*), 'Sumangala Vilasini' (*Digha-nikaya*),'Sumangala Vilasiri' (*Digha-nikaya*), 'Bubhanja Soodani' (*Majjhima-nikaya*) and 'Manoratta Bhoorani'(*Anguttara-nikaya*) remains the core of Buddhist philosophy.

Buddhaghosa came to Sri Lanka during the reign of Mahanama (409-430AD) and strayed at the Mahavihara, Anuradhapura for 3 years. In the introduction to 'Samantha Pasathika', Buddhaghosa states that he had started this book on the 20th year of Mahanama's reign and completed it in an years time. In the introduction to another work 'Dhammapathatta Katha' he states that he wrote it while staying at the Buddhist Vihara at Aluvihara. During his stay in Sri Lanka he also wrote another Pali work 'Visutthi Margha'.

While residing at the Mahavihara at Anuradhpura Buddhaghosa was involved in discourses on the tripitaka and Buddhist philosophy with his contemporary Buddhadatta, another giant of Theravada Buddhism from the Tamil country.

After his return to Tamil Nadu Buddhaghosa spent his last days at Mayurarupa-pattana which is indentified as Mylapore. Buddhaghosa's legacy to Buddhist literature will live for ever.

(to be Continued in future issues)

The Torch Bearers of Tripitaka

TRIPIT	COMMENTARY	AUTHOR
VINAYA PITAKA		
i. Vinaya Pitaka	Samantha-pasathika	Buddhaghosa
ii. Bhati Moka	Ganga-Vitharaini	Buddhaghosa
Vinaya pitaka	Vinya viniccaya	Buddhaghosa
ABHIDHAMMA PITAKA		
i. Dhamma- sangani	Attha Salini	Buddhaghosa
ii. Vibhanga-sangani	Sammoha Vinodhani	Buddhaghosa
iii. Kathavatthu		
iv. Bhukkala-panjjathi		
v. Yagama	Panchapakarana-	
vi. Thathu katha	Attakatha	Buddhaghosa
vii. Pattana		
Abhidhamma Pitaka	**Abhidhammavatara**	**Buddhadatta**
SUTTAQ PITAKA		
i. Digha-nikaya	Sumangala-vilasini	Buddhaghosa
ii. Majjhima- nikaya	Babhanja-soodani	Buddhaghosa
iii. Samyukta-nikaya	Saratta-bhaghasini	Buddhaghosa
iv. Aunguttara-nikaya	Manoratta-bhoorani	Buddhaghosa
v. **Kuddaka-nikaya**		
1. Kudda-patha	Paramatta-jhotika	Buddhaghosa
2. Dhamma-patha	Dhammapatha katha	Buddhaghosa
3. Uthana		
4. Ivutthuka		
5. Vimana-vatthu	Paramatta-dipani	Dhammapala
6. Petha-vatthu		
7. Thera katha		
8. Theri katha		
9. Sutta-nipatha	Paramatta-jhotika	Buddhaghosa
10. Jataka	Jataka Katha	Buddhaghosa
11. Nittthesa	Satthamma-pajjhotika	Upasena
12. Padhisambitta-makka	Satthamma-paksini	Mahanama
13. Abhadana	Visuthajana-vilasini	Buddhadatta
14. Buddha-vamsa	Madhurattha-vilasini	Buddhadatta
15. Sariya-pitaka	Paramatta-dipani	Dhammapala

(Compiled by S.Thiagarajah)

Student Visa from Sri Lanka and India

Education Advisor for University and Private College in the UK for the last 20 Years and obtained visas for more than 400 students with the expert advice and guidance

Expert advice and guidance will be given to obtain the visa

Full-time Courses for Overseas Students at:

LACE(London Academy of Computing & Electronics)

58a, Upper Tooting Road, London SW17 7PB

Accountancy CAT(ACCA), Computer and Business Studies

Any one Enrol before end of July will be given a discount their First Year Fee

Call R Mahalingam on 020 8767 4698 or 07956 309 426

ஜனநாயகமும் சன் டிவி குழுமமும்!

ஒலி, ஒளிபரப்பு, அச்சு மற்றும் அரசியல் என அனைத்து துறைகளிலும் சன் டிவி குழுமத்தின் அதிகாரப்போக்கை இந்திய அச்சுப்பதிப்பு உலகில் முதன் முறையாக கொஞ்சம் காட்டமாகவே கண்டித்துள்ளது காலச்சுவடு. இந்தமாத காலச்சுவடின் தலையங்கப் (பக்கத்திற்கு பக்கத்துப்) பக்கத்தில் 'சூரியன் விழுங்கும் நாடு' என்று தலைப்பிட்டு விளக்க மாகவும் காரமாகவும் எழுதியுள்ளார் காலச் சுவடு கண்ணன்.

உண்மையில் அக்கட்டுரையின் தன்மை 100% ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே! முரசொலி மாறனின் இந்திய நற்பணிகளில் ஆரம்பித்து அவருக்காக அல்லது அவருடைய லாபத்திற்காக, தி.மு.கவின் கொள்கைகளை 'சங் பரிவாரோடு' பறக்கவிட்டு, 'கமலாலயம்' பக்கத்தில் படுத்து கைகோர்த்துக்கொண்டது வரை அரசியல் சார்ந்தும், ஒரு ஒளிபரப்பு ஊடகமாக அப்போது அப்பாவின் தயவால் ஆரம்பிக்கப்பட்டு, இப்போது ஒளிபரப்பு ஊடகங்களாக விரவிக்கிடப்பதும் ஒலிபரப்புத் துறையில் விரிந்து போய்க்கொண்டிருப்பதும் அத்துடன் விட்டுவைக்காது 'பராசக்தி' கொண்ட 'குங்கும'த்தைக் கவர்ந்து தனது எல்லாக் கரங்கள் கொண்டும் அதை விற்று வருவது வரையென நீளும் அதன் போக்கு எல்லோரையுமே உள்ளுக்குள் அசைத்துப் பார்க்க ஆரம்பித்து விட்டது.

அடுத்த முறை 'வணக்கம் தமிழகத்திற்கு' தங்களை அழைத்தாலும் அழைப்பார்கள் எதற்கு இப்போது ஏதாவது சொல்லி அதில் கொள்ளிவைத்துக்கொள்ளவேண்டுமென்றோ இல்லை 'விளம்பரமோ தொடர்நாடகமோ பட விமர்சனமோ' போட்டு நாலு காசு பார்க்கலாம் அதையேன் கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றோ இல்லை உலகத் தமிழர்களிடையே உறவை இணைக்கும் பாலமாக இருக்கிற ஒன்றில்(!?) இடறுகள் செய்து தமிழ்த் தாயின் குரல்வளையைப் பிடித்து ஏன் நெறிக்க வேண்டும் என்றோ அமைதியாய் இருந்துவிட்டார்கள் தமிழர்களில் பலர். இன்னும் சிலர், 'சன்' யானைக்காலில் மிதிபட்டு 'வைகோ' போன்ற 'புலி'களெல்லாம் காணாமல் போய்விட்டார்கள், எங்களைப் போன்ற எலிகளெல்லாம் எம்மாத்திரம் அவர்களுக்கு என்று அமைதியாய் இருந்து விட, இந்தப் பூனைக்கு மணிகட்ட ஏன் இவ்வளவு தயக்கம் என்று தயங்காமல் முன் வந்து மணியையும் கட்டி விட்டிருக்கிறது 'எஸ். ஆர். எஸ்' (கண்ணன்) என்ற எலி.

உண்மைதான், அண்மையில் படித்தேன். பினாமி மற்றும் போலிப் பெயரில் கடன் கொடுத்து ஊழல் செய்து விட்ட கூட்டுறவு சங்க அலுவலர்களை காவல்துறை கைது செய்ய, அதை, 'விவசாயிகள் கைது' என்று சன் டிவி அரசுக்கு எதிராக முழக்கமிட்டதாம். இதைப்பற்றி ஜூ.வி யிலோ துக்ளக்கிலோ படித்ததாக ஞாபகம். இதுமட்டுமா? ஒரு பேச்சுக்குச் சொல்லவில்லை, இன்று இரவு சன் செய்தியைப் பாருங்கள்! எத்தனை போராட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணா விரதங்கள், கருப்புக் கொடி காட்டுதல், பேருந்தை வழிமறித்தல் மற்றும் அரசு அலுவலர்களை 'கேரோ' செய்த காட்சி (என்று நால்வர் நின்று பேசிக் கொண்டிருப் பதைக் காண்பிப்பார்கள்.) என்று தமிழ் நாட்டில் ஏதாவது 'முக்கு முடுக்கில்' நடக்கும் அரசுக்கெதிரான மாபெரும் (!?) போராட்டங்களைக் காட்டுவார்கள், எண்ணிக்கையில் இவற்றை வைத்துக் கொள்ளுங்கள்! எலக்ஷன் நெருங்கும்போது இது இரண்டு, நான்கு அல்லது பதினாறு மடங்காகலாம்!

> *'சன்' யானைக்காலில் மிதிபட்டு 'வைகோ' போன்ற 'புலி'களெல்லாம் காணாமல் போய்விட்டார்கள், எங்களைப் போன்ற எலிகளெல்லாம் எம்மாத்திரம்*

அடுத்து தினகரன் வந்துவிட்டது. இனி நாளுக்கு 24X60/10 தடவை, வாங்கி விட்டீர்களா தினகரன்? மும்தாஜ் கர்ப்பமா, திரிஷா தமிழ்ப் பெயரில்லையா? சிவகாசி ஜெயலட்சுமியின் உண்மைக் கதையை அவரே எழுதுகிறார்! பக்கத்திற்குப் பக்கம் இலவச இணைப்பு! என்று விளம்பரங்கள் வரலாம். (இனாமாய் தரப்படும் பொருட்களின்) விற்பனையில் தினகரன் டாப்புக்கு வரலாம். தினகரன் வசந்தத்தில் வரும் கேள்விக்கு பதில் சொல்லி இமயமலைக்கு ரஜினியுடன் சென்றுவிட்டு வரலாம்! இன்னும் என்னென்ன இருக்கிறதோ?

குங்குமத்தை என் வாழ்க்கையில் நான் காசு கொடுத்து வாங்கியதே கிடையாது, அப்படிப் பட்ட என்னையே 'ரஜினியின் அடுத்தபடம் ஆதிசேஷா, கௌதமி பற்றி கமல் பதில்' என்ற இரண்டு வாக்கியங்களைச் சொல்லி வாங்க வைத்து விட்டார்கள். (கடைசியில் இரண்டும் ஒருவரிச் செய்திகள் உள்ளே! இந்தப் பாவம் அவர்களைச் சும்மா விடாது!)

அரசியல் துறையில், தி.மு.கவின் எதிர்காலம் இருக்கட்டும். தளபதி ஸ்டாலினின் எதிர்காலம் முழுவதும் சன் டிவியின் செய்திகளுக்குப் பின்னே தான் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் நிலையிலும், குறைந்தது இன்னும் நாற்பது ஆண்டுகளுக்கு அதாவது தயாநிதி மாறன் வாய்குழறி நடை பிறழும் வரை டெல்லி அதிகாரத்தில் எப்பாடுபட்டாவது (எவர் கொள்கையை பட்டத்தில் விட்டு அல்லது ஏதாவது மாலையை எவர் படத்தில் மாட்டிவிட்டாவது) இருப்பார் என்ற நிலையிலும் சன் டி வி குழுமத்தின் அதிகாரம் இப்போது முடிவுக்கு வருவது அல்லது நேர்கோட்டுக்கு வருவது அசாத்தியம் என்பதும் எல்லோரும் அறிந்திருக்கும் விஷயம்.!

இந்நிலையில் அச்சு ஊடகமும் முழுவதும் அவர்களால் வளைக்கப்பட்டு விட்ட (இப்போது கால்கட்டை விரல் மாட்டிவிட்டது!) சூழ்நிலை வருமாயின் அது தமிழக அரசியலுக்கு மட்டு மின்றி இந்திய அரசியல் மற்றும் இந்திய ஜனநாயகத்திற்கும் கூட ஆபத்தாய் இருக்க லாம் என்பதும் அப்போது இருட்டை மட்டுமே கக்கும் சூரியனாய் கூட அது மாறிவிடலாம் என்பதும் காலச்சுவடு மட்டுமல்ல நாம் எல்லோரும் கூட அறிந்து கொள்ள உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்!

- எம்.கே.குமார்

Kerala Ayurvedic Health Clinic

Free Consultation
Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians
Affordable Prices

Call 020 8902 1104 or 020 8902 1707

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



- Massage therapies by experienced and highly skilled therapists
- Treatment is designed around your individual health needs
- Only natural herbal medicines are used
- No side effects at all
- Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholesterol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditons

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis



Male & Female therapists availble
We Can also speak in Hindi, Tamil and Malayalam

Open 7 days a week

1 Odeon Parade, Sudbury Heights Avenue,
Greenford, Middlesex UB6 0NA
www.kahc.co.uk

ஜொள்ளித் திரிந்ததொரு காலம்...

கிட்டப்பா...சற்றே குள்ளம். சற்று சிவப்பான தேகம். ஒல்லியுமில்லாமல் குண்டுமில்லாமல் உடல்வாகு. குரல் தான் கொஞ்சம் உடைந்து பெண்மை கலந்திருக்கும். காலேஜில் முதன் முதலில் அவனைப் பார்த்த போது பரம சாது என்று தான் தோன்றியது. ஆனால் கொஞ்சம் பிடிவாதம். எல்லோருக்கும் தான் பிடித்த முயலுக்கு மூனு கால் என்றால் இவனுக்குத் தான் பிடித்த முயலுக்கு மட்டும் தான் நாலு கால். சில சமயம் அவன் வாதம் செய்ய ஆரம்பித்தாலே போதும் பையன்கள் பிடித்து அமுக்கி உட்கார வைத்து விடுவார்கள். ஆனாலும் ஆபத்தானவன் அல்ல. 'ஜீன்ஸ்' படத்தில் ப்ரஷாந்த் ரோலில் நடிப்பதை விட லெக்ஷ்மீ காரெக்டரில் நடித்தால் ஐஷ்வர்யாராயுடன் இன்னும் கொஞ்சம் அன்யோன்யமாக நடிக்கலாமே என்று நினைக்கும் அல்ப சந்தோஷி.

இங்கே எங்கள் கல்லூரியைப் பற்றி சொல்லிவிட வேண்டும். ஆரம்பித்த காலத்திலிருந்து பெண்கள் வாடையே மருந்துக்குக் கூடப் படாத பாரம்பரியம் வாய்ந்த பிரம்மச்சாரி ஆண்கள் கல்லூரி. எனக்குப் பெண்கள் வாடையே பிடிக்காதென்று (?!) எப்பிடியோ தெரிந்து கொண்டு நாங்கள் சேர்ந்த வருஷத்திலிருந்து பெண்களையும் சேர்த்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். இரண்டாம் வருடம் மூன்றாவது வருடமெல்லாம் ஆண்கள் மட்டும் தான் . எங்கள் க்ளாஸில் மட்டும் பெண்கள். சீனியர்கள் எல்லாரும் உரிமையோடு க்ளாசுக்கு வந்து அக்கறையாகப் பேசுவார்கள்.

யாராவது ஒருத்தருக்கு சேவை செஞ்சா பரவால்ல கண்டுபிடிச்சுடலாம் ஆனா இவன் எல்லாரையும் மேய்கிறானே... அடிக்கடி டைம் கேட்பானே அவளா இருக்குமோ?

'டேய் ஒழுங்கா படிக்கனும். அப்போ தான் முன்னேற முடியும் என்ன டவுட் இருந்தாலும் வந்து கேளு. நோட்ஸ் குடுக்கறேன்...பார்த்துப் படிச்சுக்கோ என்ன...ஆமா அந்த பச்சை கலர் பேர் என்ன..?

கிட்டப்பாவும் ஒழுங்காய் தான் இருந்தான் எங்களை மாதிரி முதல் கொஞ்ச நாள். பெண்கள் பக்கமே திரும்ப மாட்டான். அப்புறம் மெதுவாக தலையெடுக்க ஆரம்பித்தான். க்ளாசுக்கு ப்ரொபசர் வருவதற்கு லேட்டானால் சும்மா இருக்கமாட்டான். குடுகுடுவென ஓடிப்போய் என்ன ஏதென்று விபரம் கேட்டு வருவான். பொறுப்பாக காத்திருக்கும் ஜிகிடிகளுக்குப் பொறுமையாக விளக்கம் சொல்லுவான். முதலில் சமூக சேவைதான் செய்கிறான் என்று நினைத்தோம். ஆனால் நாளுக்கு நாள் சேவைகள் அதிகமாகி பாரத ரத்னா வாங்குமளவுக்கு முன்னேறியது. ஒழுங்காக நோட்ஸ் எடுத்து, அவதிப் படும் அம்மணிகளுக்கு குடுத்து உதவுவது, ஜெராக்ஸ் காப்பி எடுப்பது...ப்ரொபஸர் வராவிட்டாலும் வேறுயாரையாவது கூட்டி வந்து க்ளாஸ் எடுக்கச் சொல்லி நல்ல பிள்ளையாக நடிப்பது இன்ன பிற என்று நடமாடும் சேவா சங்கமாக மாறினான். கேட்டால் 'சின்னத் தம்பி' பிரபு மாதிரி ஒன்னுமே தெரியாத மாதிரி முழிப்பான். வட்டாரத்தில் ஜிகிடி வாடை அடித்தால் போதும்...உடைந்த குரலில் அட்வைஸ் பண்ண ஆரம்பித்துவிடுவான்.

அப்புறம் பையன்கள் வேறுமாதிரி விளையாட ஆரம்பித்தார்கள்.

"என்ன கிட்டப்பா..இன்னிக்கு உங்காளு பயங்கர இம்ப்ரெஸ் போல அசத்திட்ட போ!' - சும்மா தூண்டில் போட்டா விக்கோ வஜ்ரதந்தி க்ரீம் மண்ப்பெண் போல் ரொம்பவும் வெட்கப்படுவான். பையன்களுக்கு சந்தேகம் வலுத்தது.

'பையன் ப்ளாட்டுடா... ஆனா யாருன்னு தான் தெரியல யாராவது ஒருத்தருக்கு சேவை செஞ்சா பரவால்ல கண்டுபிடிச்சுடலாம் ஆனா இவன் எல்லாரையும் மேய்கிறானே...அடிக்கடி டைம் கேட்பானே அவளா இருக்குமோ' - பையன்கள் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். கிட்டப்பா திறமையாக விளையாடினான். கண்டுபிடிக்க முடியவிலை.

அப்போது தான் கல்லூரியில் எலெக்க்ஷன் வந்தது. சேர்மன், செகரட்டரி, கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுப்பதற்கான எலெக்ஷன். இது போக யாரையாவது க்ளாஸ் ரெப்பாக போடுவார்கள். பொதுவாக ஹாஸ்டல் பையன் யாரவது தான் பெயர் கொடுப்பார்கள். எங்கள் வகுப்பிலும் ஒரு நண்பனின் பெயரைக் குடுத்திருந்தார்கள். ஆனால் மரத்தடி மீட்டிங்கில் சதித்திட்டம் தீட்டி கிட்டப்பாவையும் கோதாவில் இறக்கத் தீர்மானித்தார்கள். இதற்காக ஸ்பெஷல் ஸ்டியரிங் கமிட்டி வேறு உருவானது.

'கிட்டப்பா...நீ நில்லுடா..உன்ன அடிச்சுக்க ஆளே இல்ல...நீ தான்டா இதுக்கு சரியான ஆள்..'

'டேய் கேர்ல்ஸ் சப்போர்ட் புல்லா உனக்குத் தான்...நீ தான் எலெக்க்ஷனில் நிக்கனும்டா...உனக்காக உயிரையே குடுப்பேன்டா'

'டேய் நீ எலக்ஷன்ல நிக்கலயேன்னு உங்காளுக்கு வருத்தம்டா...அவ கண்னுல சோகம் தெரியுதுடா.. இதுக்காவாவது நீ நிக்கனும்டா...'

ம்ஹ?ம்....கிட்டப்பா மசியவே இல்லை. அடுத்த நாள் பிவோட் "பார்' என்று அவன் பெயரை எல்லா ஜிகிடிகளின் டெஸ்கிலும் எழுதி வைத்தார்கள்...

'கிட்டப்பா நீங்க எலெக்ஷனில் நிக்கீறீங்களா..?' - ஒரு ஜிகிடி வாய்விட்டு வாஞ்சையோடு கேட்டுவிட்டது.

அவ்வளவு தான் கிட்டப்பாவிற்குள் தூங்கிக் கொண்டிருந்த மிருகம் முழித்துக் கொண்டுவிட்டது. அரைகுறையாக முழித்துக் கொண்டிருந்தவனை ஸ்டியரிங் கமிட்டி வேப்பிலை அடித்து ஒரு வழியாக சம்மதிக்க வைத்தது. கெடு நேரத்துக்கு முன்னாடி நல்லவர்கள் படை சூழ சென்று பெயரையும் குடுத்தான்.

இரண்டு பேர் க்ளாஸ் ரெப்புக்கு பெயர் குடுத்திருந்ததால் அதற்கும் எலெக்ஷன் என்று ஆபிஸில் முடிவு செய்தார்கள்.

'டேய் ஏண்டா இப்பிடி காலெஜ் மானத்த வாங்குறீங்க? க்ளாஸ் ரெப் போஸ்டெயெல்லாம் ஏன்டா எலெக்ஷன் வரைக்கும் கொண்டு வர்றீங்க வெட்கமாயில்ல உங்களுக்கு? தூ...' சீனியர்களெல்லாம் தேடி வந்து வாழ்த்திவிட்டு போனார்கள். கெடு முடிந்துவிட்டதால் யாரும் வாபஸ் பெற முடியாத நிலை.

மொத்த காலேஜும் வாயையும் அதையும் பொத்திக் கொண்டு சிரித்தது. ஆனாலும் நாங்கள் அடங்கவில்லை. கிட்டப்பாவின் தேர்தல் விளம்பரங்களுக்கு ஸ்டியரிங் கமிட்டி பொறுப்பெடுத்துக் கொண்டு வேலை செய்தது.

க்ளாஸ் இரண்டாக பிரிந்தது. கிட்டப்பாவிற்கு ஓட்டு கேட்பதாக சொல்லிக் கொண்டு கடலை போட்ட பார்டிகளில் அடியேனும் உண்டு. கிட்டப்பாவின் தேர்தல் விளம்பரங்கள் சேர்மன் போஸ்ட் விளம்பரங்களைத் தூக்கி சாப்பிட்டது.

'டேய் உங்க கொசுக்கடி தாங்க முடியலைடா..க்ளாஸ் ரெப் போஸ்டுக்கெல்லாம் ஒரு எலெக்ஷன் இந்த அலம்பல் ..இதெல்லாம் ரொம்ப ஓவர்டா' - சீனியர்கள் புலம்ப ஆரம்பித்தார்கள்.

கிட்டப்பாவின் சேவைகள் பாரத ரத்னாவிலிருந்து நோபல் லெவலுக்கு தாவின. யாருமில்லா சமயம், சட்டையில் எலியைப் பிடித்து விட்ட மாதிரி நெளிந்து கொண்டே ஜிகிடிகளிடம் கடலை போடுவான்.

'டேய் இது உனக்கே நியாயமாக இருக்கா? யாருன்னு சொன்னா...அண்ணிய தெரிஞ்சுப்போம்ல்..'

ம்ஹும்...'பாட்டு கேட்டேன் ஓட்டு கேட்டேன்னு' ரெடியா பதில் வைத்திருப்பான். ஆனால் கடலை மட்டும் வழக்கம் போல மானாவாரியாக சாகுபடி ஆகிக்கொண்டே இருக்கும்.

தேர்தல் நெருங்க நெருங்க எல்லாரும் நமுட்டுச் சிரிப்பு சிரிக்க ஆரம்பித்தார்கள். தேர்தல் நடந்து முடிவும் வெளியானது....நல்லவர்கள் புத்தியை காட்டி இருந்தார்கள். கிட்டப்பாவிற்கு மொத்தம் ஏழு வோட்டுக்கள் தான். பெரும் தோல்வி.

கணக்கெடுத்ததில் ஏழுமே ஆண்கள் பக்கத்திலிருந்து என்னையும் சேர்த்து. கிட்டப்பாவிடம் ஆறுக்கு மட்டும் கணக்கு சொன்னோம். மீதி ஒன்று அவன் ஆளாகத் தான் இருக்குமென்று ஐய்யோ பாவம் நம்பினான். அவனுக்கு அது மட்டுமே ஆறுதலாக இருந்தது. அந்த நம்பிக்கையிலேயே மீதி வருடங்களிலும் கிட்டப்பா சேவா சமாஜ் தனது சேவைகளைத் தொடர்ந்தது.

– இன்னும் ஜொள்ளுவேன்

- தமிழ் டுபுக்கு

நீங்கள் அழகாயிருக்க 10 எளிய வழிகள்

1. கவலைகளை சுமக்காதீர்கள்

சிலர் வாயை திறந்தாலே பிரச்சனைகள் தான் வரும். கவலைகள் இல்லாதவர்கள் உலகத்திலே இல்லை. ஆனா, அதை 24 மணி நேரமும் சுமக்க வேண்டுமா? அவைகளை இறக்கி வையுங்கள். எப்போதும் உங்களை கலகலப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

2. கொண்டாடுங்கள்

சின்ன சின்ன சந்தோசங்களையும். வெற்றிகளையும் பெரிதாக கொண்டாடுங்கள். கொண்டாடும் போது மனதில் உற்சாகம் பிறக்கிறது. தன்னம்பிக்கையை கொடுக்கிறது

3. அடிமையாகாதீர்கள்

எந்த பழக்கத்திற்கும் அடிமை ஆகாதீர்கள். பழக்கங்களில் உள்ள சிக்கல் என்னவென்றால் அந்தப் பழக்கத்துக்கு சிறு தடை வந்தால் கூட மனதைச் சோர்வடையச் செய்து விடும். மாற்றங்கள் வரும் போது அவற்றை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்

4. ஆர்வம் கொள்ளுங்கள்

சிலருக்கு எந்த விசயத்திலுமே ஆர்வம் இருக்காது. வாழ்க்கையிலும் ஆர்வம் இருக்காது. ஆர்வங்கள் தான் உற்சாகம் கொடுக்கும். வாழ்க்கையின் மீது பிடிப்பு ஏற்படுத்தும்

5. கோவம் கூடாது

கோவப்பட்டு நீங்கள் சாதித்த விடயம் எதுவுமே கிடையாது.கோவம் ஒன்றுக்கும் உதவாத ஒரு உணர்வு. அதை வைத்திருந்தென்ன பயன்? உண்மையை சொல்லப் போனால் கெட்ட விசயங்கள் தான் நடக்கும்.

6. குடும்பத்துடன் இருங்கள்

எல்லோரும் குடும்பத்துடன் கலகலப்பாய், ஜாலியாய் பேசிக்கொண்டு இருந்தால் தான் மனசு மகிழ்சியாய் இருக்கும்.

7. மற்றவர்களை மதியுங்கள்

இது முக்கியமான விசயம். மற்றவர்களை மதிக்க முட்யதவர்களால் தங்களை மதிக்க முடியாது. மற்றவர்களை மதிப்பதால். ஒன்று உங்களை அவருக்குப் பிடித்துப் போகிறது. இரண்டு உங்களுக்கு இன்னொரு நட்பு கிடைக்கிறது

8. கொஞ்சம் பொழுது போக்குங்கள்

வேலை,வீடு,நண்பர்கள் என்று இருக்காமல் சில பொழுது போக்குகளை உங்களுக்கென்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் மனசுக்கு சந்தோசம் கிடைக்கும்.

9. கற்பனை செய்யுங்கள்

உலகிலேயே அதிக சந்தோசம் கொடுக்கும் விசயம் - கற்பனைகளில் ராஜாவாகவோ ராணியாகவோ வாழ்வது தான். எப்போதும் நல்ல விசயங்களை கற்பனை செய்து கொள்ளுங்கள். ஏனென்றால் கற்பனைகள் பல நிசமாகி விடுமாம்.

10. அமைதி கொள்ளுங்கள்

வாரம் ஒரு முறையாவது எந்த சத்தமும் இல்லாத இடத்தில் அரை மணி நேரம் அமைதியாய் இருங்கள். அந்த வாரம் நடந்த நல்லவைகளை நினைத்துக்கொள்ளுங்கள். கெட்டவற்றை தூரப் போடுங்கள்.' இதனால் மனது சுத்தமாகும்.

மனதை அழகு படுத்தும் இந்த வழிகளை பழக்கப்படுத்திக் கொண்டால் எப்போதும் நீங்கள் உற்சாகமாகவும் அழகாகவும் இருப்பீர்கள். இது நான் புத்தகம் ஒன்றில் படித்தேன். உங்களுக்கும் தெரியப்படுத்தலாம் என்று நினைத்தேன்.

பிரியமுடன் - பிரியசகி

இணையத்தில் அழகுக் கிளி அசின்

இணையத்தில் அழகுக் கிளி அசின் என்ற தலைப்பை விகடன்.காம் இல் பார்த்தவுடன் பரவசமாகிவிட்டேன், பரபரப்பாக இருந்தது, சரியென்று அந்த சுட்டியை சொடுக்கினால் சந்தா கட்டணம் கேட்கிறது விகடன், அட நம் தங்கத் தலைவி அசினைவிட பணம் பெரியதா என உடனே பணத்தை கட்டி உள்ளே சென்று பார்த்தேன் ஆகா என்னே நான் செய்த பாக்கியம் என்னே நான் செய்த பாக்கியம், என் தங்கத் தலைவி புரட்சித் தலைவி, சூப்பர்த் தலைவி தனக்கென தனி வெப்-சைட் ஆரம்பிக்கின்ற செய்தியை போட்டிருந்தனர்,

இதுவா நமக்கு முக்கியம், நான் தேடியது தங்கத் தலைவி அசினின் இணைய தள முகவரி, ஆனால் அந்த நாசமா போன விகடன் பேட்டியில் இணைய தள முகவரியை போடவில்லை.

அய்யோ நானூனூனூனூத்தி அம்பது ரூபாய் வீணாப் போச்சே வீணாப் போச்சே, என நினைத்தபோது கூகுள் ஆண்டவர் நினைவுக்கு வந்தார், கூகுள் ஆண்டவரிடம் முறையிட்ட போது மிகச் சரியாக தலைவி அசினின் இணைய தள முகவரியை தந்தார், அடடா இதை முன்பே செய்திருந்தால் நானூத்திஅம்பதுரூபாய்மிச்சமாகியிருக்குமே என்று நொந்து கொண்டேன்.

எங்கே தலைவி அசினின் படத்தை பார்த்தவுடன் மூளை வேலை செய்ய மாட்டேங்குதே.

அந்த இணைய தளத்திற்கு போன போது அடா அடா உலகத்தின் அதிசயமே அங்கேதான் இருக்கிறது, எத்தனை எத்தனை உலக முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள், அவருடைய முந்தைய திரைப் படங்கள் நடித்துக் கொண்டிருக்கும் அடுத்த திரைப்படங்கள் என்றும் அவருடைய ஃபேவரிட்ஸ் என்றும் எத்தனை அதிமுக்கிய புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன, தலைவி அசின் அவர்கள் ஆசியாவில் ஜாக்கிசானின் சாதனையை முறியடித்து தற்போது புருஸ் வில்லீஸ், அர்னால்டு சிவனேசன் போன் றோரை நெருங்கிக் கொண்டிருக்கின்றார்.

நான் அசின் ரசிகனாக இருப்பதற்கு முக்கிய காரணம் அசினின் அழகை விட, அவரின் நடிப்பை விட அவருடைய தங்கமான குணம் தான், அது எப்படி உனக்கு அசினின் குணம் தெரியும் என கேட்கக் கூடாது அக்காங்...

தலைவி அசினை தமிழகத்தின் முதல்வர் பதவியில் அமர்த்தாமல் ஓயமாட்டோம், தலைவி அசினுக்கு கோவில் கட்டாமல் ஓயமாட்டோம்என்று அகில உலக அசின் ரசிகர் மன்றத்தின் (இன்னும் மன்றம் ஆரம்பிக்க வில்லை) ஒரே தலைவன் என்ற முறையில் சபதமெடுக்கின்றோம்.

அடுத்ததாக விரைவில் எதிர்பாருங்கள் அசின்-31 என்ற ஒரு பதிவு, 31 அவரின் வயசல்ல, அவர் சமீபத்தில் தும்மிய தும்மல்களின் எண்ணிக்கை.

- குழலி

பெனாத்தல் சுரேஷ் - ஒரு தியாகி

நாலு பேர் நன்றாக இருப்பதற்காக ஒருவர் கஷ்டம் அனுபவித்தால் தப்பில்லை - என்று ஒரு புருடா புராணம் கூறுகிறது.. அந்த ஒருவராகத் தானே இருக்க முன்வந்த தன்னலமில்லாத் தொண்டன், தியாக சொரூபம் பினாத்தல் சுரேஷின் தியாகத் திருவரலாறுதான் என்ன?

சுனாமி எச்சரிக்கையை பலநாள் கழித்துச் சொன்னால் என்ன பயன்?

உடனே சொன்னால்தானே மக்கள் தகுந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முடியும்?

சரி பில்ட்-அப் எல்லாம் போதும், விஷயத்துக்கே வந்து விடுகிறேன்.

'இங்கிலீஷ்காரன்' என்ற படத்தைப் பார்த்துத் தொலைத்து விட்டேன். எனக்கு ஏற்பட்ட கதி, என் நண்பர்கள், விரோதிகள் யாருக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இதை அவசர அவசரமாகப் பதிகிறேன்!

கதையைச் சொன்னால் -'அட நல்லாத்தானே இருக்கு'என்று சொல்வீர்கள்!

சில காட்சிகளை டிவியில் பார்த்தாலும், நல்ல காமெடியா இருக்கும் போல இருக்கே என்றும் எண்ணக் கூடும். (அப்படித்தான் நினைத்து நானும் பார்த்தேன்)

ஆனால், திரைக்கதை என்ற ஒரு ஜந்து இருப்பதாகவே இந்த இயக்குநர் அறிந்திருக்கவில்லை.

படம் நெடுக பழைய படங்களில் வந்த வெவ்வேறு காட்சிகளை சத்யராஜ் மறுபடி நடித்துக் காண்பித்திருக்கிறார். காட்சிகளை கொஞ்சம் மாற்றி இருந்தாலோ, ஒரிஜினலில் உள்ள அபத்தங்களை கோடிட்டு இருந்தாலோ அது கிண்டல், நகைச்சுவை. அதே காட்சியை அப்படியே நடிகர்களை மட்டும் மாற்றி எடுத்ததினால், ஆரம்பத்தில் சில நேரங்களில் வரும் சிரிப்பையும் காணாமல் போக அடித்து விடுகிறது.

படம் முடியப்போகும் நேரத்தில் அவசரமாக மெஸேஜ் சொல்ல வேண்டிய கட்டாயத்தால் 'பெற்றோர் குழந்தைகளை அவர்கள் ஆசைப்படி வர விட வேண்டும்' என்பதை அதீதமான உதாரணங்களோடு கூறி முடிக் கிறார்கள்.

உல்டாக் காட்சிகள், சத்யராஜின் குரல் மாடு லேஷன் மட்டுமே நகைச்சுவை ஆகிவிடாது என்பதற்கு ஒரு சரியான உதாரணம் இந்த இங்கிலீஷ்காரன்.

இங்கிலீஷ்காரன் - Accent சரியில்லை!

- சுரேஸ்

OVERSEAS LANKA SHIPPING

ஓவர்சீஸ் லங்கா கப்பல் சேவை

ஆகாயமார்க்கம், கடல்மார்க்கம், தரைமார்க்கமாக பொருட்களை சென்று கொடுக்கும் சேவை

- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- விவசாய இயந்திரங்கள்
- வியாபார அல்லது தனிப்பட்ட
- சாதாரண அல்லது கனரக வாகனங்கள்

Cheap Air fare to colombo from £310

Air, Sea and Land Frieght
Collection & Deliveries (Door to Door/Port)
Free estimate / Courier & Facilities for Ticketing
One of the most Trusted Organisations
Poineer in Freight Forwarding

In Sri Lanka we deliver goods to Jaffna, Trincomalee, Batticaloa



உங்கள் பொருட்களைப் பொறுப்பெடுத்து வீட்டுக்கு வீடு விநியோகிக்கும் நம்பிக்கையான சேவை
நம்பிக்கையின் உறைவிடம் அனுபவத்தின் உயரிடம் நமது சேவை

We do Shipping India, Srilanka and Worldwide

Tel: 020 8459 0001 / 020 8459 6633

430, High Road, Willesden Green, London.NW10 2HA(OPST: HOMEBASE)

காச்சுனின் கோலங்கள்

- ஓம்பது

ஒற்றைப் பனைமரம்

ஒரு இரவுக்குள் ஆயிரமாயிரமாய் மக்கள் கூடி பொங்கிச் செல்லும் திருவிழா அது. ஆண்டுக்கொரு தடவை வந்து போகும் அதி உச்ச அழகு இத் திருவிழா.

வண்ண வண்ண விளக்குகளால் அழகேற்றிக் கொண்ட அந்த வயல் வெளியில் கம்பீரமாய் நின்றிருந்தது பின்னாளில் எனக்கு நெருக்கமான அந்த ஒற்றைப் பனைமரம்.

திருவிழாக் கூட்டத்தில் சிறு பிள்ளைகள் காணாமல் போவதும், கண்டெடுக்கப் படுவதும் வழமையானவை. ஆண்டுதோறும் என் குடும்பத்திலும் யாராவது ஒருவர் தொலைந்து போவதும் கண்டெடுக்கப்படுவதுவும் வழமையாகவே இருந்தது.

இந்தத் தடவை 'எனக்கான முறை' என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

வழக்கம் போல் பெருங்கூட்டம். அங்கே ஓர் இடத்தைப் பிடித்து பாய் விரித்து இருப்பது என்பது எளிதானதல்ல. பாயும் கையுமாய் கோவிலை பல தடவை வலம் வந்தபின்தான் ஏதாவது இடம் ஆலயத்துக்கு அருகில் கிடைக்கும்.

எல்லோரும் அமர்ந்து கொண்டோம். இவ்வேளைகளில் தந்தையார் எம் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையை அடிக்கடி சரி பார்த்துக் கொள்வார். அப்போதும் பார்த்தார். எண்ணிக்கை சரியாகவே இருந்தது.

அம்மா எழுந்தார். என் பால் காவடிக்கான நேரம் அது. ஆலய வழிபாடுகளில் அதிக ஈடுபாடில்லாத என் தந்தையார் இக் காவடி எடுப்பில் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை.. அம்மாவும் சில அயலவர்களுமே இதில் ஈடுபடுவார்கள்.

இந்தக் காவடிக் காலம் எனக்குக் கர்ண கொடூரமாய் இருக்கும். என் குழாமை விட்டு தனியாக அழைத்துச் செல்லப்படும் என்னைப் பலிக்கடாவைப் பார்ப்பதைப் போல் என் குழாம் பார்க்கும். இக் காவடி எடுப்பு சிலவேளை இரண்டு மணி நேரத்திற்கு மேலும் நீடிக்கும். இதற்கிடையே என் குழாம் ஒரு சுற்றுச் சுற்றி கொண்டு வந்த பணத்தில் பாதியைச் செலவு செய்திருக்கும்.

காவடி முடித்துக் களைத்துப் போய், நான் பாய் விரித்த இடம் போக, தாம் வாங்கிய பொருட்களை குழாம் எனக்குக் காட்டும். காவடி மீதும் கடவுள் மீதும் அவ்வேளை ஏற்படும் வெறுப்புக்கு ஈடு இணை இருக்காது.

காவடியை வாடகைக்கு விடுவோருடன் பேரம் பேசி, பின் வாடகைக் காவடியில் பால் செம்பு கட்டி, அதில் கொண்டு வந்த பாலை நிரப்பி, காவடியை என் தலையில் வைப்பார்கள். பால் சிந்தாமல் காவடியைச் சுமந்து கோவிலைச் சுற்றி வர வேண்டும் நான். கூடவே ஆட்டங்களுடன் பல காவடிகள் வரும். அரோகரா என்ற ஒலி எழுப்பியபடி சூழப் பெருங்கூட்டம் கூடி வரும்.

அன்றைய நாள் காவடி முடிந்த அந்தப் பொழுது, என் வாழ்நாளில் மறக்க முடியாத பொழுது.

வாடகைக்குப் பெற்ற காவடியை திரும்பக் கொடுப்பதில் அம்மாவும் அயவலரும் மும்முரமாயிருக்க, வந்த ஒரு அரோகராக் கூட்டம் என்னை அடித்துப் போனது. அதிக அசதியில் இருந்த எனக்கு இடம் வலம் எதுவும் புரியவில்லை. அம்மாவைத் தேடும் முயற்சியில் இன்னும் அதிகமாய்த் தொலைந்து போனேன்.

சில மணி நேரங்கள் கடந்திருக்க வேண்டும். அதுவரை என்னை யாரும் கண்டெடுக்கவில்லை. என்னாலும் யாரையும் கண்டு பிடிக்க முடியவில்லை. பசியோடு, துயரமும் தொண்டையை அடைத்தது. அழுகின்ற வயதைக் கடந்து விட்ட பருவம். அழ முடியவில்லை. காற்சட்டைக்கு மேற் கட்டியிருந்த சால்வை வேறு அடிக்கடி அவிழ்ந்து தொந்தரவு செய்தது.

உடல் சோர்ந்து கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. கீழே இருக்க வேண்டும் போல் இருந்தது. அருகே தெரிந்த பனைமரத்தின் அடியோடு சாய்ந்தேன். சாய்ந்தது மட்டும் எனக்கு ஞாபகம் இருந்தது.

விழித்தெழுந்த போது உழவு இயந்திரத்தின் பெட்டியில் நான் இருந்தேன். சுற்றி வர அம்மா அப்பா உட்பட எல்லோரும் கலக்கத்தோடு நின்றிருந்தனர். அதற்குள்ளும் யாரோ 'பொறுப்பில்லாத பொடியன்' என என்னைத் திட்டுவது காதில் விழுந்தது. அம்மா சாப்பிட ஏதோ தந்தார்.

தம்பி சொன்னான். 'அந்தா.. அந்தப் பனை மரத்துக்குக் கீழ இருந்துதான் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்தனாங்கள்.' நிமிர்ந்து பார்த்தேன்.

அந்த இருளிலும் பனையின் கிளைக் கைகள் என்னைப் பார்த்து அசைவதைப் போலிருந்தது.

அதற்குப் பின்னான பல திருவிழாக்களில் பல முக்கிய சந்திப்புகளை இப் பனையின் கீழ்தான் நிகழ்த்தியிருக்கின்றேன்.

என் காதல் சந்திப்பு உட்பட.

- கரிச்சான் குஞ்சன்

கண்ணகி தீவிரவாதியா?

நம்ம பக்கத்துவீட்டுக் காரர் நம்மகிட்ட வந்து நான் சொல்லுகின்ற ஆள் கூடத்தான் நீ பேசவேண்டும், நான் சொல்லுகின்ற கடையில் தான் பொருள் வாங்கவேண்டும், நான் சொல்லுகின்ற போதுதான் நீ தூங்க வேண்டும், என்னுடய அனுமதி இன்றி அல்லது உத்தரவின்றி எதுவும் செய்யக்கூடாது, என்று சொன்னால் நாம் கேட்போமா, அப்படி அவர் சொல்லுகிறபடி நடந்தால் நாம் வீரமுள்ள அல்லது தன்மானமுள்ள சுயமரியாதை உள்ள ஆண் என்று நம்மை யாரும் சொல்லுவார்களா?. பக்கத்து வீட்டுக்காரன் என்ன நம்ம அப்பா,அம்மா அல்லது அண்ணன் சொன்னாலே கேட்கமாட்டோம்.

ஆனால் அமெரிக்கா, பிரிட்டிஷ் போன்ற நாடுகள் சொல்லுவதற்கெல்லாம் உலக நாடுகள் தலையாட்டுகின்றன.நான் எதை வேண்டுமென்றாலும் செய்வேன் யாரும் எதும் செய்யக்கூடாது ஏன் என்று கேட்கவும் கூடாது, நான் எதை வேண்டுமென்றாலும் வச்சிருப்பேன் நீங்க ஒன்னும் வச்சிக்கக் கூடாது என்னை ஏன்வச்சிருக்க என்று கேட்கவும் கூடாது அப்படின்னு சொல்லிகிட்டு, இருக்கிறவன் கண்ணுல ஒருத்தன் விரலவுட்டு ஆட்டுறான் பாரு அது ரெம்ப புடிச்சிருக்கு!.

உலகத்துக்கே நான்தான் நாட்டாமை என்று கட்டப் பஞ்சாயத்து பண்ணிக்கிட்டு அராஜகம் பண்ணிக்கிட்டு அட்டகாசம் பண்ணிக்கிட்டு இருக்கின்றான்,ஐ.நா. சபையை மதிக்காமல் ஈராக் மீது போர் நடத்துகிறான், ஐ.நாவில் இவன் சொல்லுரபடிதான் பேசவேண்டும். நம்மசட்டசபையை விட ஐ.நா மோசமான நிலையில் உள்ளது, அதன் தலைவரை பார்க்கும் போது நம்ம காளிமுத்து எவ்வளவோ தேவலாம். இப்படி அராஜகம் பண்ணுகிறவனை தட்டிகேட்க திரானி இல்லாமல் உலக நாடுகள் எல்லாம் ஒன்றாக இவன்களுக்கு ஜல்லி அடிக்கும்போது உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்களை எதிர்த்து போராடுகிறார்களே கில்லி அடிக்கிறார்களே அவர்கள் வீரர்களய்யா.

இவர்கள் ஏன் இப்படி உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள் என்று நாம் சிந்தித்து பார்த்து இருப்போமா?. சொத்து தகராறா அல்லது அமெரிக்கா, பிரிட்டிஷ் அதிபர் பதவிக்காகவா. நீதி என்ற பெயரில் இவர்கள் செய்கின்ற அநீதியை எதிர்த்து போராடுகிறார்களே. இவர்கள் தானய்யா வீரமுள்ள அல்லது தன்மானமுள்ள சுயமரியாதை உள்ள ஆண். அவனுக்குப் பெயர்தான் தீவிரவாதியா?

ஈராக் நாட்டின் வளங்களை கொள்ளை அடிப்பதற்கு பல கற்பனை கதைகளை சொல்லி அந்த நாட்டின் மீது போர் நடத்திபச்சிளம் குழந்தைகள் முதல் முதியவர் வரை பலகொலைகளை நடத்திய தோடல்லாமல் அதை எதிர்த்து போரடும் அந்நாட்டு மக்களை சிறைச்சாலைகளில் சித்திரவதை செய்பவர்கள் அகிம்சாவாதிகள்,உரிமைக்காக சுதந்திரத்திற்காக போராடு பவர்கள் தீவிரவாதிகள்.ஆனால் ஈராக்கில் இறந்து போகின்ற அமெரிக்க கூட்டனியின் ஆக்கிரமிப்புபடை வீரர்களின் உறவினர்கள் அமெரிக்க அதிபர் புஷ்சை திவரவாதி என்கிறார்கள்!.அநீதியை தட்டிக் கேட்க உலக நாடுகளுக்கு திரானிதான் இல்லை.இதை கண்டிக்க மனசாட்சியுமா இல்லை.உலக நடுகள் நடத்துவது தீவிரவாதத்திற்கு எதிரான போரட்ட மில்லை, அமெரிக்கவை, அநீதியை செய்பவனை, அக்கிரமக்காரனை எதிர்ப்பவர்களை எதிர்த்து போராடுகிறார்கள்.

எல்லா தீவிரவாதத்தின் பின்னாலும் ஒரு அநீதி இருக்கும் அல்லது ஒரு அடக்குமுறை இருக்கும் அல்லது பாதிப்பு இருக்கும் இதை ஏன் நாம் சிந்திக்க மறுக்கின்றோம்.. பாண்டிய மன்னன் செய்த தவறுக்கு மதுரையை எரித்த கண்ணகியை தீவிரவாதி என்று நாம் இதுவரை சொன்னதில்லியே! பாண்டிய மன்னன் செய்தது தவறு என்று ஜல்லிதானே அடித்து இருக்கின்றோம்.

பாண்டிய மன்னன் செய்த தவறுக்கு மதுரையையும், மதுரை மக்களையும் கண்ணகி ஏன் எரித்தாள் என்று யாரவது கில்லி அடித்து இருப்பார்களா?

இன்றைய தீவிரவாதம் என்பது, அக்கிரமம், அநீதி செய்கின்றவர்கள் அல்லது அமெரிக்கா, பிரிட்டிஷ் என்ற ஆலமரத்தின் விழுதுகள் அந்த விழுதுகள் தரையை தொடுவதற்கு முன் அக்கிரமம் அநீதி என்கின்ற ஆலமரத்தை வெட்டுவதே சாலச்சிறந்தது.

அடிக்காதீங்க ஜல்லி
அடிப்போமே கில்லி கில்லி . . .

- அரசு

LINGA & CO Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?
உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர். Linga & Co வணிக ஆலோசனைகளையும், book Keeping சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது.

46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BY
GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)
EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530
உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

புலம்பெயர்ந்த சூழலில் தமிழர்கள் தகுந்த வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். வாழ்க்கைத் துணையைத் தேடும் தமிழர்கள் பயன்பெறும் பொருட்டு இவ் விடயம் சம்பந்தமான விளம்பரங்களை இலவசமாகப் பிரசுரிக்கின்றது ஒரு பேப்பர். உங்கள் தேவைகளை ஒரு பேப்பர் பணிமனைக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வையுங்கள்.

மதம், சாதி, நிறம் மற்றும் சோதிட, ஜாதகப் புரட்டுகள் இடம்பெறாது. என்பதை அறியத் தருகிறோம்.

தொலைபேசி (Tel): (020) 8286 9327, தொலைப்படி (Fax): (020) 8640 6972
மின் அஞ்சல்: info@orupaper.com

மணமகள் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொரண்ட தற்போது லண்டனில் 8 வருடங்களாக தங்காலிக வதிவுரிமை யுள்ள 32வயது 5'8" உயரமுள்ள IT பட்டதாரி மணமகனுக்கு லண்டனில் இருக்கும் பெற்றோர் தகுந்த மண மகளைத் தேடுகிறார்கள். Ref:- 577

2. Parants looking for their son 31 years old, 5'8" tall, a graduate, well employed in London a suitable bride with traditional values. Ref.-575

3. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட UK பிரஜா உரிமையுள்ள விஞ்ஞானத்துறை பெற்ற 39 வயது மண மகனுக்கு தகுந்த மணமகளை சகோதரர்கள் தேடுகிறார்கள். Ref:- 576

4. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 29வயது, 5'7"உயரமுள்ள 7வருடங்களாக லண்டனில் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் வசிக்கும் குடும்பத்தினர் U.K இல் அல்லது மற்றைய EU நாடுகளில் தகுந்த மண மகளை தேடுகின்றனர். Ref:- 569

5. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது லண்டனில் வசிக்கும் 28 வயது, 5'11"உயரமுள்ள B.Eng in computing படித்து வேலை பார்க்கும் மணமகனுக்கு U.K இல் அல்லது மற்றைய EU நாடுகளில் வதிவிட உரிமையுள்ள மணமகளை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref.- 570

6. திருக்கோணமலையை பிறப்பிட மாக கொண்ட, 29 வருடங்களாக லண்டனில் வசிக்கும் 39 வயது 5'3"உயரமுடைய Electronic Engineering படித்து Broadcasting Technician ஆக வேலை புரியும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:- 571

7. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட, தற்போது பிரான்ஸில் குடி யுரிமை பெற்ற 35 வயது 6'2" உயரமுள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:- 572

8. Parents looking for their son, U.K citizen, 27years, 5'11" tall, with provisinal qualification, suitable bride. Ref:- 573

9. South Indian Tamil 38 years old, an Engineer presently employed in Doha, Qutar looking for a suitable bride. Ref: 574

10. UKல் பிரஜா உரிமையுள்ள 32 வயது 5' 7½" உயரமுள்ள மகனுக்கு பெற்றோர், படித்த UKல் வசிக்கும் ஆங்கிலம் தெரிந்த மணமகளை தேடுகிறார். Ref:- 564

11. Jaffna parent looking for a suitable bride for her son, 39 years old, 5'4" tall, an accountant, permanent resident of Australia, willing to reside in either country. Ref :- 565

12. Jaffna partent looking for a suitable bride, preferably from Sri Lanka, for her son, 31 years old, 5' 10" tall, a permanent resident of UK, an accountant student. Ref: 566

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்டு, லண்டனில் பிரஜா உரிமை யுள்ள, 30 வயது 5' 4" உயரமுள்ள மணமகன் தகுந்த துணைவியை தேடுகின்றார். Ref: 567

14. Jaffna parent looking for her son, an old boy of St. Thomas College, 33 years old, 5'9" tall, permanent UK resident and working as an accountant, a suitable bride. Ref :- 568

15. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது U.K பிரஜா உரிமையுள்ள 41 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை ஜேர்மனியில் உள்ள சகோதரி தேடுகின்றார். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 562

16. Malaysian Tamil, 38 yrs. 5'11", has been in the UK for the last 15 years, well- employed and settled, seeks a suitable bride. REF 556

17. Jaffna parents seeking for their son, born in the UK, in 1974, 5'6" tall, M.Sc qualified, and employed as a Senior Analyst, a permanent civil servant, a suitable bride. REF 551

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட தற்போது அவுஸ் ரேலிய பிரஜா உரிமையுடன் வேலை புரியும் பட்டதாரி 5'5" உயரமுள்ள 32வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் இருக்கும் சகோதரி தேடுகின்றார். REF: 541

19. Jaffna born, 31 years 5'5" tall. 10 years in UK completed BEng (Hons) working for BT bridegroom, looking for suitable bride. REF 531

20. யாழ்ப்பாணத்தை சேர்ந்த தற்போது லண்டனில் பிரிட்டிஷ் பிரஜா வுரிமையுடன் வாழும் 37 வயதான மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். REF 526

21. இலங்கையை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா நாட்டுரிமை பெற்ற கணக்கியல் பட்டதாரியும், தற்போது UKயில் கணக்காளராக பணிபுரியும் 28 வயது மகனுக்கு பெற்றோர் மணமக ளைத் தேடுகிறார்கள். REF 516

மணமகன் தேவை

1. சாவகச்சேரியை சொந்த இடமாக கொண்ட, A/L படித்த 24வயது, 5'4" உயரமுடைய மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref:- 694

2. திருகோணமலையைப் பிறப்பிட மாக கொண்ட 37 வயது, 5'5" உயரமான Vetninary Doctor ஆக அங்கேயே தொழில் புரியும் மணப் பெண்ணுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் UK, Srilanka மற்றும் ஏனைய நாடுகளில் தகுந்த மண மகனைத் தேடுகின்றார். Ref:- 695

3. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட, 30 வயது 5;'2" உயர முள்ள, படித்து, யாழ்பாணத்தில் தொழில் புரியும், மணப்பெண்ணுக்கு லண்டனில் இருக்கும் உறவினர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref:- 696

4. Sister living in England looking for her younger sister, 30 years old, 5'2" tall, CIMA qualified accountant, working on work permit visa until 2009 , a sutable groom of age 33-36. Ref:697

5. Jaffna Tamil father looking for his only daughter born in 1978, 5'4" born and grew up in Germany, a graduate, preasently a teacher in England, looking for a sutable groom. Ref: 698

6. யாழ்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது, 5'4" உயரமுள்ள CIMA Final stage படித்துக்கொண்டு, கொழும்பில் வேலை பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் பெற்றோர் இலங்கை அல்லது லண்டனில், தேடுகின்றனர். Ref : 699

7. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட 34 வயது 5' உயரமுள்ள மணப்பெண்ணுக்கு லண்ட னில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref: 700

8. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது கொழும்பில் வேலை பார்க்கும் ICMA படிக்கும் 28 வயது, 5'4"உயரமான மணப்பெண் ணுக்கு லண்டனில் வசிக்கும் பெற்றோர் கள் தகுந்த மணமகனைத் தேடுகின்ற னர். Ref:- 688

9. Jaffna Tamil parants residing permanently in the U K seek a professional groom for the daughter ,U K born,30 years, 5'4" holding a good position. Ref:689

10. Brothers in England looking for their sister, living in Jaffna, 45 years, 5'6" tall, professionally qualified and holding a top postion in the govt. service, a sutable groom. Ref: 690

11. யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாக கொண்ட, 38 வயது 5'2"உயரமுள்ள, கணவனையிழந்த, Franceசில் வதி விடமுள்ள, மணப்பெண்ணுக்கு சகோதரர் தகுந்த மணமகனைத் தேடு கின்றார். தாரமிழந்தவரும் விண்ணப்பிக் கலாம். Ref:- 691

12. Father looking for his daughter, UK citizen, 37 years old, 5'3" tall, a graduate and holding a managerial position ,a sutable groom. Ref :-692

13. சாவகச்சேரி சொந்த இடமாக கொண்ட, A/L படித்த 25வயது, 5'2" உயரமுடைய மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:- 693

14. வடமராட்சியை பிறப்பிடமாக கொண்ட தற்போது கொழும்பில் CIMA Final படித்துக் கொண்டு அதே துறையில் வேலை பார்க்கும், 27 வயது, 5'3"உயரமான மணப்பெண்ணுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref:- 685

15. பருத்தித்துறையை பிறப்பிடமாக் கொண்ட, தற்சமயம் இந்தியாவில் அழகியற்கலை, சமையற்கலை ஆகிய வற்றில் தேர்ச்சி பெற்ற 27வயது, 5' உயரமுள்ள படித்த மகளுக்கு லண்டனில் வசிக்கும் தகப்பனார் தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடு கின்றார். Ref:- 686

16. கிழக்கு மாகாணத்தை சொந்த இடமாக கொண்ட, A/L படித்த 18 வயது, 5'4" உயரமுடைய மணமகளு க்கு லண்டனில் வசிக்கும் குடும்ப நண்பன் தகுந்த மணமகனை தேடுகின் றார். Ref:- 687

17. Jaffna parents, living in Colombo, are seeking a suitable groom for their 32 years old daughter, an accountant (B.Sc, ACCA, ACMA) working in Colombo. Ref: 682

18. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 35 வயது 5'3" உயரமுள்ள, கொழும்பில் நல்ல நிலையில் உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனை தேடுகிறார். எந்த நாட்டில் இருந்தும். Ref: 684

19. Mother seeking for daughter, 32 years, born and brought- up in the U.K, system engineer, a suitable bride groom. Ref: 677

20. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது சென்னையில் பெற்றோருடன் வசித்து வரும் 5'2" உயரமும் 1977ம் ஆண்டு பிறந்த B.Sc, Bio Chemistry பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையிலோ அல்லது வெளி நாட்டிலோ தேடுகின்றனர். Ref. 678

21. Singapore Tamil parent looking for his daughter 35 years, 5'6" height, professional, British citizen, a suitable groom. Ref: 679

22. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது கொழும்பில் வேலை புரியும் 75ம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு லண்டனில் PR உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref. 680

23. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 33வயது 5'2"உயரமுடைய MBBS(Jaffna) படித்து தற்போது இலங்கையில் டாக்டராக வேலை புரியும் சகோதரிக்கு தகுதியுள்ள படித்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரர்கள் தேடுகின்றனர். Ref: 672

24. திருகோணமலையை வதிவிட மாக கொண்ட 25வயது 5'5" உயர முடைய, தற்போது இலங்கையில் வேலை புரியும் IT பட்டதாரி மகளுக்கு லண்டனில் அல்லது மற்றைய EU நாடுகளில், Canadaவில் மணமகனை தகப்பனார் தேடுகின்றார். Ref: 673

25. Parents from Jaffna, living in the UK, looking for a professional groom for their daughter born in this country, 32 years, 5'3" tall and an IT professional. REF 668

26. Jaffna parents living in Germany, looking for a suitable groom in UK, USA, Canada, or other EU countries with PR, for their daughter, 26 yrs, 5' 5" tall, grew up in Colombo, a graduate. REF 670

27. Jaffna parents residing in the UK seeking for their daughter, grew up in UK,33 years, 5'4" tall, employed in managerial post, a suitable groom. REF 663

28. Mother seeks suitable groom for her daughter born in 1976, 5'4"tall, LLB Qualified. Prospective groom to have minimum graduate level education, modern, kind and caring. REF 664

29. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொணடு தற்போது லண்டனில் வேலைபார்க்கும் 40வயது விஞ்ஞான (கணினி பட்டதாரி) மணமகளுக்கு திருமணமாகி 2 வருடங்களில் விபத்தில் கணவனை இழந்தவர். (பிள்ளைகள் இல்லை) தாய்ார் சைவ போசனத்தை உடைய மணமகனை தேடுகிறார். REF 665

30. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்டு தற்போது கொழும்பில் வசிக்கும் பெற்றோரை இழந்த 36 வயது 5' 4" உயரமுடைய படித்த மணமகளுக்கு சகோதரி தகுந்த மணமகனை தேடுகிறார். REF 667

31. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டு 27 வயதுடைய 5' 4" அங்குல உயரமுடைய, இந்திய BSc பட்டதாரியும், தற்போது UK யில் தொழில் புரியும் மணமகளுக்கு, UK யில் வாழும் பெற்றோர் தகுந்த மணமகனை தேடுகிறார்கள். Ref:- 661

32. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட 37 வயது 5' 3" உயரம் உடைய U.K.இல் பிரஜா உரிமையு டன் அரசாங்க சேவையில் தொழில் புரியும் மணமகளுக்குப் பெற்றோர்கள் படித்த நல்ல தொழில் புரியும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref: 655

32. Jaffna Tamil parents residing Permantly in U.K. seek a professional marriage partner for their daughter, British Citizen, B.Sc (Hon), 24 years old 5' 4" tall well Employed in London. Ref: 658

33. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது லண்டனில் பிரஜா உரிமையுடன் வசிக்கும் 38 வயது மணமகளுக்கு பெற்றோர்கள் படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகிறார்கள். REF:652

34. லண்டனில் பிறந்து வளர்ந்த 32 வயதுடைய 5'8" உயரமுள்ள solicitor ஆக பணிபுரியும் மணமகளு க்கு தகுந்த மணமகனைத் பெற்றோர் தேடுகின்றனர். REF 634

35. Jaffna parents seek for their daughter, 27 years, Britsh Passport holder, engineering graduate, civil service managerial grade, suitable groom with traditional Tamil values. REF 614

கவிதை

அம்மா மன்னியுங்கோ, ஐயோ மன்னியுங்கோ!!!

ரெட்டை ஜடை கட்டி.
குட்டை பாவாடையுடன்
வெள்ளைச் சட்டை போட்டு. . .
காலுக்கு சொக்ஸ்சை – கால்
முட்டுவரை போட்டு. . .
வெண்கட்டி கொண்டு
சப்பாத்தைப் பூசி. . .
பளிச் சென்ற சிரிப்புடன்
பள்ளிக்கூடம் போனவள். . .
கொள்ளிப் பேயாய் போனாலே
கொலன்ட் வந்து சேர்ந்ததால்!!!

கிணற்றடியின் கட்டு மேலே,
மட்டு மட்டாய் அமர்ந்து கொண்டு
கப்பியிலே தண்ணீர் இழுத்து. . .
வீட்டில் உள்ள உடுப்பையெல்லாம்
கும்மி கும்மி துவைத்தவள். . .
பழசையெல்லாம் மறந்துவிட்டு
குளிர் படர்ந்த நாட்டில்
பிறந்து வளர்ந்த மாதிரி
கதையளந்து போகிறாளே
கனடா வந்து சேர்ந்ததால்..!!!

புடவையதை கட்டிக் கொண்டு
பூவையும்
தலையில் வைச்சுக் கொண்டு
சீதேவியாலே
சிரிப்புடன் சிலோனில் திரிந்தவள். . .

வகை வகையாய் முடியை
வெட்டிக் கொண்டு – இரு கையால்
அதை கிண்டிவிட்டு. . .
திரிந்தாலும் பரவாயில்லை. . .

தலை சீவும் சீப்பு அதை
வைக்க இடம் எதுவுமின்றி. . .
தைத்திரியம் பிடித்தவள் போல்
தலையிலே அதை மாட்டிக்கொண்டு
பின்ன – இவரும் திரியிறாலே. . .
பிரான்ஸ் வந்து சேர்ந்ததினாலே...!!

இஞ்சாருங்கோ.. இஞ்சாருங்கோ. . .
என்று அன்பாய் கூப்பிட்டவள்,
இடியப்பம் போட்டுத் தந்து
இடித்த சம்பல் அதையும் போட்டு
இனிக்க இனிக்க பேசியவள். . .
பெயரைச் சொல்லிக் கூப்பிடுறாள்
சோறைப் போடச் சொல்லுகிறாள்..
நோகாமல் இருந்து கொண்டு – பிறர்
நோகும் படி பேசுகிறாள்
நோர்வே வந்து சேர்ந்ததினால்..!!!

ஐயகோ.. ஒன்றும் புரியவில்லை..
என்ன செய்ய தெரியவில்லை..
எங்கட சனங்களின்ட
நடத்தையும் தான் சரியுமில்ல. . .
அழகாக நாட்டிலே
அன்போடு தானே இருந்தனாங்க..
அழகென்று கூறிக் கூறி – நாம்
அசிங்கமாய்ப் போனோமே
அகதியாய் வந்து
சேர்ந்ததினால்..!!!

– அசிங்கமாய் நிற்கும்
நவசக்திராஜன்
Mitcham, London

கவிஞன்

கருத்தாழமிக்க கவிதை எழுதும்
தனித்துவமான மனிதன் கவிஞன்
இளமையையும் காதலையும்
இனிய கவிதையில் இயம்பிடும்
புதுமை விரும்பி கவிஞன்
கவிதையால் தமிழுயர்வை காத்திடும்
பண்பாட்டுக் காவலன்

- கனக ஈஸ்வரகுமார்

ஏக்கம்

அவளைப்போலவே....
அலைக்களும்.....
நான் கொடுத்த பூக்களை
வீசியெறிந்துவிட்டது!

தினமும் வந்து வந்து பார்க்கிறேன் – அவள்
திரும்பி எடுத்திருப்பாளோ என்று...

- ரசிகவ் ஞானியார்

புரியாத மனம்

புரியாத மனம்
அன்பினால் ஆசையால் செய்வதெல்லாம்
புரிந்துகொள்ளாத இதயத்திற்கு
என்ன செய்வது
அடக்கு முறைக்கும்
அடிபணியாமல்
அன்பிற்குள் ளும் அடங்கிக்கொள்ளாமல்
சிறகடிக்க நினைக்கின்றது
சிறகடிப்பதனால்
எந்த சிரமமும் இல்லை
இறக்கை முளைக்க முதலே
எட்ட எட்ட பறக்க நினைக்கின்றதே
விட்டுவிடுவோம்
பறக்கும் தூரம் வரைக்கும் பறந்து
அடிபட்டு வரும் வரைக்கும்
என் கண்பார்வைக்குள்ளேயே
பறந்து கொண்டிருக்கட்டும்.

- பரணி

old is gold

பட்டினத்தடிகள்

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? – மெள்ள
முகம்மேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு?

(கி.பி.15ஆம் நூற்றாண்டு)

பாரதியார்

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணி இருப்பார்
பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரையாம் என்று இங்கு ஓதிடுவர் சங்கம்

(கி.பி.20ஆம் நூற்றாண்டு)

புதிய கவிதை

கவிதை பாட கவலை தீரும்
காதலை அள்ளித்தரும்–புல
காவியங்கள் சொல்லித்தரும்–தமிழ்
கவிதைகள் காலையரின் சொத்து–அது
பெண்மையின் பெருமைகளை சொல்லும்
இன்பத்திலும் துன்பத்திலும்
இதயத்தின் மொழி பேசும் –இனிய
கவிதைகள் கவிஞரின் மொழி–ஆனால்
புது கவிதையோ காதல் மொழி.

- கனக ஈஸ்வரகுமார்

பார்த்துப் போ வெண்புறாவே...!

சோர்ந்த நம் சகோதரர்களுக்கு
என்ன கொண்டு போகிறாய் வெண்புறாவே...
காத்திருக்கிறோம்.

உன் வரவுக்கு வாழ்த்துக்கள்...
கவனம் ...!
சிபி வேடமிட்ட சில நரிகள்.
சதி வலையோடு
காத்திருப்பதாய் கேள்வி
துணைவர முடியவில்லை
பார்த்துப் போ...!

- ஞானக்குமாரன்

தினமும் நீந்துங்கள்
உடல் பருமன் குறையும்
என்றார் மருத்துவர்.
பாத்ததே இல்லை
போலும் அவர்
திமிங்கலங்களை .!!!

Nike Shoe அணிந்து
Reebok சட்டை மாட்டி
Rayban கண்ணாடி அணிந்து
Swiss மலை அடிவாரத்தில்
Bikini போட்ட மங்கையர் சூழ
சினிமா ஹீரோ பாடினார்
இந்தியனாய் இரு.!!!

பவுர்ணமி பாண்டியன் கவிதைகள்

ஒரே மாதிரி உடை
ஒரே மாதிரி தலை தொப்பி
2000 மாணவர்கள்
பட்டமளிப்பு விழாவில்
பேசினார் தலைவர்.
தனித்துவமே உனது வெற்றி!!!

கொலம்பஸ்க்கு நன்றி
நீங்கள் மட்டும்
இல்லாவிட்டால்
Ohio வின் தலைநகருக்கு
என்ன பெயர் வைப்பது?

மேற்கு லண்டனில் ஒரு சுவையுணவு 'சிவமணி'

திருமணவிழாவா, பிறந்தநாள் வைபவமா அல்லது வேறுவகையான கொண்டாட்டங்களா?
தரமான சுத்தமாக, வீட்டில் தயாரிக்கப்படும் சைவ, அசைவ உணவுகள் அனைத்தும்
பெற்றுக் கொள்ளாம்.





குளாப் புட்டு, உப்புமா, நூடில்ஸ், கீரைப்புட்டு, கூழ், கொத்து ரொட்டி,
இட்லி போன்ற தாயக உணவுவகைகள். முறுக்கு, பகோடா, ரோல்ஸ், கட்லட்,
கேக்வகைகள், பருத்தித்துறை வடை, லட்டு, பூந்திலட்டு போன்ற சிற்றுண்டி
வகைகளும் மலிவாக ஒடர் செய்து கொடுக்கப்படும்.

100 இடியாப்பம்,
சொதி சம்பலுடன் £10
பிரியாணி £2.50
சைவ உணவு
(10 வகை மதுரச்சுத்தங்களுடன்) £2.00

தொடர்புகளுக்கு
07908 392 545

தமிழ் கத்தோலிக்கரும் தாலி, குங்குமம் இன்ன பிறவும்.. தமிழ் சினிமாவும்

கொஞ்ச நாட்களுக்கு முன் என்னுடைய திருமண புகைப்படத்தை தற்செயலாகப் பார்த்ததும் என் நண்பர் கேட்ட கேள்வி என்ன.. உங்கட Wife கல்யாணத்துக்கு பட்டுப்புடவை கட்டியிருக்கிறா? அவர் தமிழ் சினிமா பார்த்து எல்லாத்தயும் நம்புறவர் என்று நல்லாப் புரிந்தது. எனக்கு தெரிஞ்சு தமிழ் கத்தோலிக்கர் யாரும் இவர் நினைக்குற மாதிரி, சினிமாவில காட்டுற மாதிரி வெள்ளை கலர்ல பாரதிராஜா தேவதை உடை போட்டு கல்யாணம் பண்ணி நான் பார்த்ததில்லை. கேள்விப்பட்டதும் இல்லை. எல்லோரும் பட்டுப் புடவை தான் கட்டிக்குறாங்கள். அதோடு தலையில ஒரு Net வச்சு கிரீடம் மாதிரி அலங்காரம் பண்ணிறது, கையில ஒரு பூச்செண்டு இவ்வளவு தான் வித்தியாசம்.

ஒரு நாள் நண்பர் குடும்பத்தோடு சினிமாக்கு போகும் போது, நண்பருடைய மனைவி என் மனைவியை பார்த்ததும் புருவம் உயர்த்தினா. நீங்கள் குங்குமமெல்லாம் வைப்பீங்களா? அட! அதற்கும் விளக்கம் சொல்லியாகிவிட்டது.

இன்னொரு நாள் ஒரு சீன நண்பரோடும், தமிழ் நண்பரோடும் உணவருந்தி கொண்டிருந்த போது, சீன நண்பர் எங்கே உங்கள் கல்யாண மோதிரம்? என்றார். நான் கல்யாண மோதிரம் கண்டிப்பல்ல. இந்திய வழக்கம் போல தாலி தான் அணிவிக்கிறோம். மோதிரம் இரண்டாம் பட்சம் தான். அவர் சமாதானமாகி விட்டார். தமிழ் நண்பர் புருவம் உயர்த்தி விட்டார். என்னடாப்பா? நீங்களும் தாலியா கட்டுறீங்க?

ம்! மோதிரம் மாற்றிக்கொள்வதும் உண்டு ஆனால் தாலி தான் பிரதானம். ஒரே வித்தியாசம். மஞ்சள் தாலி அல்ல. தங்கத் தாலி. மூன்று முடிச்செல்லாம் இல்லை. தாலியை கோர்த்து விடுவது. அவ்வளவு தான். இன்னும் சொல்லப் போனால் எங்கள் ஊரில் கத்தோலிக்கர்கள் திருமணத்தையே 'தாலிக்கட்டு' என்று தான் சொல்லுவார்கள்.

என்ன! பொட்டு வைக்காத, தாலி அணியாத தமிழ் கிறிஸ்தவர்கள் இல்லை என்கிறீர்களா? என்று உங்களில் பலர் கேட்கலாம். இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமிழ் கிறிஸ்தவர்களில் சிறுபான்மையினர். தமிழ் கிறிஸ்தவர்களில் கத்தோலிக்கர்களும், தென்னிந்திய திருச்சபையினர் (CSI) என்றழைக்கப்படும் protestants இவர்கள் இருவரும் தான் பெரும்பான்மை. மற்றசபையினர் மிகமிகசிறுபான்மை (மொட்டை மாடியில் மைக் கட்டிக் கொண்டு ஊரிலுள்ளவர்களை எல்லாம் பாவிகள் என்று சொல்லுவது).

CSI கிறிஸ்தவர்களின் வழக்கங்களை முழுமையாக அறுதியிட்டு என்னால் கூற முடியாதெனினும், கத்தோலிக்க தமிழர்களை பற்றி கண்டிப்பாக என்னால் கூற முடியும். கத்தோலிக்க தமிழர்கள் திருமணத்தில் பட்டுப் புடவை அணிந்து தங்கத்தாலி கட்டுகிறார்கள். பொட்டு, குங்குமம் வைக்கிறார்கள்.

தமிழ் சினிமாவில் பெரும்பாலும் கிறிஸ்தவ கோவில் என்றால் அது 'மாதா கோவில்' தான். மாதா கோவில் என்றால் அது கத்தோலிக்க கோவிலாகத்தான் இருக்க முடியும். ஆனால் அங்கு நடைபெறும் (தமிழர்) திருமணக்காட்சியில் மட்டும் எல்லாம் தலை கீழாக காட்டப்படும். மணப்பெண் பாரதிராஜா படத்து தேவதை மாதிரி உடை அணிந்திருப்பார். மோதிரம் மட்டும் மாற்றிக்கொள்வார்கள். தாலி கட்டுவது கிடையாது. மணப்பெண் பொட்டு வைத்திருக்க மாட்டார். இப்படி எந்த கத்தோலிக்க கோவிலில் நடக்கிறது என்று எனக்கு புரியவில்லை.

நான் பார்த்தவரைக்கும், கத்தோலிக்கர்கள் மதத்தையும் கலாச்சாரத்தையும் போட்டு குழப்புவதில்லை. என்னுடைய மூதாதையர்கள், ஏன் எங்கள் ஒட்டு மொத்த ஊர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த community யே கத்தோலிக்கர்களாக மாறி 400 வருடங்கள் கழிந்து விட்டன. மதம் மாறியிருக்கிறதே தவிர மற்ற வழக்கங்கள் (சாதி உட்பட என்பது வருத்ததுக்குரிய விஷயம்) பெரிதாக மாறவில்லை. எது நம்முடைய கலாச்சாரம் சம்மந்தப்பட்டது, எது நம்முடைய மதம் சம்மந்தப்பட்டது என்பதில் மக்கள் தெளிவாகவே இருக்கிறார்கள் (தமிழ் சினிமா தவிர).

திருச்சியில் புனித ஜோசப் கல்லூரியில் படிக்கும் போது (ஒரு நிமிஷம் பொறுங்க!. அப்துல் கலாம், சுஜாதா படித்த அதே வகுப்பறையில் நானும் இயற்பியல் படித்தேன் என்று கொலரை தூக்கி விட்டுக்கொள்கிறேன்) நண்பர்களோடு பலமுறை மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவிலுக்கு சென்ற துண்டு. ஒரு முறை நண்பர்களோடு நேராக உச்சிப்பிள்ளையார் சன்னிதிக்கு சென்றேன். நண்பர் ஒருவர் அங்கிருந்த அர்ச்சகரிடம் எங்கள் பெயரையெல்லாம் சொல்லி அர்ச்சனை செய்யச் சொன்னார். ஜோ நமஹா.. என்று அவர் சொன்னது மட்டும் புரிந்தது. முடித்து விட்டு விபூதி கொடுத்தார். வாங்கிக் கொண்டேன். விபூதிப் புதனன்று கோவிலில் பாதிரியார் மனிதனே! நீ மண்ணாக இருக்கின்றாய். மண்ணுக்கே திரும்புவாய். மறவாதே என்றும் என்று நெற்றியில் இட்டு விடுகிற சாம்பல் நினைவுக்கு வந்தது. நான் வணங்கும் தெய்வத்தை நினைத்துக்கொண்டு விபூதியை பூசிக்கொண்டேன்.

வேலை தேடி சென்னையில் எங்கள் ஊர் நண்பர்களோடு தங்கியிருந்தேன். சொந்தமாக சிறு தொழில் செய்து வந்த நண்பர் எனக்கும், அவரோடு வேலை செய்த சகோதரருக்கும், இன்னொரு நண்பருக்கும் அடைக்கலம் தந்திருந்தார். வீடு என்பதை விட அறை என்று சொல்லலாம். வீட்டு சொந்தக்காரர் பக்கத்தில் தான் இருந்தார். அவருக்கு ரெண்டு குடும்பம். நல்ல நாட்களில் மட்டுமே அவரை இங்கு பார்க்க முடியும். மற்ற அனைவரும் எங்கள் எல்லோரோடும் நன்கு பழகுவார்கள். அன்பானவர்கள். அன்றைக்கு பொங்கல் தினம். எல்லோரையும் போல, பசங்கள் என்பதால் கொஞ்சம் விமர்சையாகவே நாங்களும் காலையில் பொங்கல் பொங்கினோம். முதல் காரியமாக கொஞ்சம் பொங்கல் எடுத்து வீட்டுக்காரர் குடும்பத்துக்கு கொடுக்க நான் எடுத்துச் சென்றேன். எதிர்பார்த்த மாதிரி வீட்டுக்காரர் இருந்தார். "பொங்கல் பொங்கினோம் வாங்குங்க!"

"என்ன தம்பி! நாங்க தானே உங்களுக்கு தரோணும் நீங்க எப்படி பொங்கல் போட்டீங்க?" கொஞ்ச நேரம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன்? "இல்ல நீங்கள் கிறீஸ்தவர்கள் அல்லவா" "அதுக்கு! பொங்கல் இந்து பண்டிகை என்று உங்களுக்கு யார் சொன்னது? பொங்கல். உழவர் திருநாள் அது மட்டுமல்ல தமிழர் திருநாள் உங்களை பற்றித் தெரியாது. நாங்கள் எல்லாரும் தமிழர்கள்" கொஞ்சம் வியப்பாக பார்த்தார். அவரிடம் அதிகம் பேசாத என்னிடம் அவர் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார்.

"ஓ! எதுவாக இருந்தாலும் எங்களுக்கு முன் நீங்க பொங்கல் கொண்டு வந்தது சந்தோஷம்" வீட்டுக்கார அம்மா புன்சிரிபோடு "குடுங்கோ தம்பி" என்று வாங்கிக் கொண்டார்.

என் நினைவு எங்கள் ஊருக்கு சென்றது. வருஷம் முழுவதும் காசு சேர்த்து வைத்து வகுப்புப் தோழர்களெல்லாம் பொங்கலன்று தென்னந் தோப்புக்கு சென்று பொங்கல் பொங்கும் நினைவுகள் வந்தது. பொங்கல் அன்று எங்கள் தேவாலயத்தின் பலிபீடம் கரும்பினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கோவில் சார்பாக பொங்கல் செய்து, திருப்பலியின் நடுவே, எல்லோரும் வரிசையாக சென்று பாதிரியாரிடமிருந்து ஒரு கரண்டி சர்க்கரைப் பொங்கலை கைகளில் பிரசாதம் போல் வாங்கி உண்டது மனக்கண்முன் நின்றது.

எங்கள் ஊர் கன்னியர் மடத்திலுள்ள கன்னியர்கள் செய்த அந்த சர்க்கரைப் பொங்கல் சுவை இன்னும் இனிக்கிறது.

- கணியம் ஜோ

SHREE THIRUTHANIGAI VELL MURUGAN AZHAYAM

255 BURLINGTON ROAD, NEW MALDON
SURREY KT3 4NE



0208 942 4475, 0208 641 7835
0794 475 1805

Nearest Train Station :-
Mostur Park
Bus Route: No 152 & 131

திருத்தணிகை வேல் முருகன் ஆலயம்

மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

09.09.05 வெள்ளிக்கிழமை

05.09.05 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சிரிகை ஆரம்பமாகி 09.09.05 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியில் இருந்து 7.00 மணிக்குள் முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்று மகா அபிஷேகமும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

எண்ணெய்க் காப்பு

07-09-05 புதன்கிழமை மாலை 3 மணியில் இருந்து 10.00 மணி வரை
08-09-05 வியாழக்கிழமை காலை 8 மணியில் இருந்து இரவு 8.00 மணி வரை
அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தலாம்

முருகன் அடியார்கள் அனைவரும் இக்காலங்களில் கலந்து கொண்டு முருகனின் அருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தொடர்ந்து 12 நாட்கள் மட்டுமே மண்டலாபிஷேகம் நடைபெற இருப்பதால் உபயம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்கிறது... தொடர்கிறது...

விசிலடிச்சான் குஞ்சுகள்

கே. எஸ். பாலச்சந்திரன்
(கனடாவிலிருந்து)

கனடாவுக்கு வந்தவர்கள் எங்கள் பாரம்பரியக் கலைவடிவங்களை, பண்பாட்டுக் கோலங்களை கொண்டு வந்தார்களோ இல்லையோ இடியப்ப உரல், புட்டுக்குழல், அம்மி குழவி என்றெல்லாம் கொண்டு வந்து குவித்து விட்டார்கள். இதற்கு போட்டியாக ஊரில் மிக்ஷி, கிரைண்டர் என்றெல்லாம் பாவிக்கத் தொடங்கி விட்டார்கள் என்று கேள்வி.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இங்கு கலை நிகழ்ச்சிகளில், எங்களுக்கே உரித்தான ஒரு கலை வடிவம்.. மேடையில் அல்ல.. சபையில் இருந்து வரும் போது மெய்சிலிர்த்து புளகாங்கிதம் அடைகின்றேன். விசில் சத்தங்களைத்தான் சொல்கிறேன். அதைக் கேட்கும் போது, என் இளமைக்காலத்திற்கு time machine ல் பயணம் செய்து மீள்வது போன்ற ஒரு உணர்வு?.

விசில் அடிப்பதென்பது தனிக் கலை. ஆயகலைகள் அறுபத்திநான்கில் இதுவும் அடங்கியுள்ளதா? என்று தேடிக் களைத்து விட்டு விட்டேன். பாரதி சொன்ன 'ஆன்ற தமிழ்ப் புலவீர்காள்...' யாரவது கண்டு பிடித்தால் சொல்லுங்கள்.

என்னவோ தெரியாது.. விசிலுக்கும் எங்கள் பெற்றாருக்கும் ஜென்மப் பகை. தப்பித் தவறி, ஏதோ ஒரு சந்தோசத்தின் வெளிப்பாடாக-

பரீட்சையின்போது சேர்ட்டின் முழங்கை மடிப்புக்குள் மறைத்து வைத்திருந்த குறிப்புகளை Examiner க்கு தெரியாமல் எடுத்துப்பார்த்து எழுதியபின் வெளியில் வரும் போதுள்ள சந்தோசம் மாதிரி -

இரட்டைப் பின்னல் புஷ்பா தண்ணீர் அள்ளிக் கொண்டு வரும் மத்தியானப் பொழுதில் காத்திருந்து நெஞ்சு படபடக்க கடிதத்தை (அந்தக் கடிதந்தான்) கொடுத்து விட்டு சைக்கிளை உழக்கிக் கொண்டு வரும் போது தோன்றும் சந்தோசம் மாதிரி.

ஏதோ ஒரு சந்தோஷ காலத்தில் விசில் அடிக்கிறேன் என்ற வைத்துக் கொள்ளுங்கள். அது நரகத்திற்கு போகும் அளவிற்கு உரிய பாவச் செயலாக எங்கள் ஊரில் கருதப்படும்.

'அதுவும் அதின்ரை விசிலும். உது உருப் படாது' என்று அ'ழிணைப் பொருட்களோடு எங்களைச் சேர்த்து விடுவார்கள்.

விசில் அடிப்பதற்காக குவித்த உதடுகள் பிரிவதற்கிடையில் விசிலடித்த கதை வீடு போய்ச் சேர்ந்து விடும். வீட்டு வாசலில் அப்பா கோபமாக நிற்பார்.

'விளாத்தி.. (இது ஒரு சாதி மரம்.. என்னைத்தான் குறிப்பிடுகிறார்) ஏதாவது படிக்கச் சொன்னால் விக்கி விக்கிக் கொண்டு நிற்கும். சந்தியிலை நின்று விசில் அடிக்கிறாராம் விசில். இதிலை நிண்டியோ விசிக்கி விட்டிடுவன்.. விளாசிப் போடுவன்' . . .

என்று பி.எச்.அப்துல் ஹமீட்டின் 'பாட்டுக்கு பாட்டு' நிகழ்ச்சியில் வருவது போல 'வீ' என்ற எழுத்திலேயே நிற்பார்.

இந்தத் தொல்லைகளை தவிர்த்து நிம்மதியாக விசில் அடிக்க வேண்டுமென்றால், எங்கள் ஊரின் எல்லையைத் தாண்டி வரும் வயல்வெளி, உப்புத் தரவைகளில்தான் அது சாத்தியமாகும். இரவு வேளைகளில் ஆங்கிலப் படங்கள் இரண்டாம் காட்சி பார்த்து விட்டு வருவோம். அதில் வந்த 'டிராகுலாக்கள்' பின்தொடர்வது போன்ற பயம் பின் பிடரிப்பாகத்தை சிலிர்க்க வைக்கும். இந்த நேரத்தில் விசில் அடிப்பது தான் பயத்தைத் தவிர்க்கும் அருமருந்தாகச் செயல்படும். சூழ மரங்களும், பற்றைகளும் மூடியிருக்க கும்மிருட்டில் இருக்கும் வைரவ கோயிலை தாண்டும்போது, எங்கள் விசில் உச்சஸ்தாயியில் ஒலிக்கும். ஊர்மனைகள் வந்து விட்டாலும் அந்த விசிலடி நிற்காது. கோடையின் வெப்பம் காரணமாக, வீட்டுக்குள் படுக்க முடியாமல், விற நாந்தையில் பாய் விரித்து, நிம்மதியாக படுத்திருக்கும் யாரோ ஒரு முதியவர் திடுக்கிட்டு எழுந்து -

'யாரடா உவன். இந்த அர்த்த சாமத்திலை உப்பிடி விசில் அடிக்கிறவன்' என்று 'மயான காண்டம்' வி.வி.வைரமுத்துவைப் போல உரத்துக் கேட்கவும் எங்கள் விசில் ஒலிகள் தேய்ந்து மௌன ஊர்வலம் நடக்கும். அடுத்த ஒழுங்கையில் மீண்டும் ஆரம்பித்து அவரவர் வீட்டடி வரை தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து நின்று விடும்.

அந்தக் காலத்தில் தமிழ்ப்படங்கள் பார்க்கப் போனவர்களுக்கு, கதாநாயகன் வாள்ச் சண்டையில் வில்லனை துரத்தி துரத்தி வாள் வீசும்போது கலரிப் பகுதியிலிருந்து 'ஊய்.. ஊய்' என்று வரும் விசில் சத்தம் ஞாபகமிருக்கும். 100, 150 விசில்களின் கூட்டோசை காதை அடைக்கச் செய்து, தொடர்ந்து வரும் காட்சிகளை மௌனப் படம் போல பார்க்க வைக்கும்.

இந்தியாவில் கே. சிவப்பிரசாத் என்ற கலைஞர் விசில் அடித்தே கர்நாடகக் கச்சேரி செய்கிறார். 'வாதாபி கணபதீம்', 'நகுமோமு' என்றெல்லாம் விசில் அடித்து, பக்க வாத்தியங்களுடன் அமர்க்களப் படுத்துகிறார். இதை வாத்திய இசையில் சேர்ப்பதா, வாய்ப் பாட்டில் சேர்ப்பதா என்று சங்கீதக்காரர்கள் அல்லல் படுகிறார்கள் என்பது தனிக்கதை.

எனக்கு உள்ள கவலை என்னவென்றால், எங்கள் பெற்றோர்கள், ஊரவர்கள் மாத்திரம் தடை போடாமல் இருந்திருந்தால், நானும் என்னுடைய நண்பர்களும் விசில் அடித்து, அடித்து தினமும் சாதகம் பண்ணி, இன்றைக்கு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் என்று எங்கள் தமிழர் வாழும் இடமெல்லாம், விசிலில் கர்நாடகக் கச்சேரி, விசிலில் மெல்லிசைக் கச்சேரி, விசிலில் திரையிசை, விசிலில் Reggae Music என்று கொடி கட்டிப் பறந்திருப்போம். விதி யாரை விட்டது. எங்கள் விசிலை விடுவதற்கு.

கனடாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் மாதம் தவறாமல், சில காலங்களில் நாள் தவறாமல் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி கலை வளர்க்கும் பெருமக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்.

மேடையில் ஆற்றப்படும் அல்லது ஏற்றப் படும் பரதம், சங்கீதம் போன்ற இத்தியாதி கலை வடிவங்களோடு நம்மவர் அவையில் தவறாமல் வழங்கும் விசில் கலையையும் அரங்கேற்றுவதோடு, வருடாந்தம் உலக ளாவிய ரீதியில் 'விசில் போட்டி' நடாத்தி, முதல் பரிசாக 'தங்க விசில்' (உதை பந்தாட்டத்தில நடுவர் வைத்திருப்பது போன்ற) பரிசாக வழங்க வேண்டும். இத்துறையில் சாதனை படைப்பவர்களுக்கு 'விசில் வித்தகன்' 'விசில் சக்கரவர்த்தி', 'விசில் மன்னன்' என்றெல்லாம் விருதுகள் வழங்க வேண்டும். இதையெல்லாம் பார்த்து மற்ற சமூகத்தவர் விக்கித்துப் போய் விரலை வாயில் வைக்க வேண்டும். இதுவே என் தாளாத ஆசை.

நிறைவேற்றுவீர்களா?

சுய முன்னேற்ற நூல்களின் சாராம்சம்..

நாம் படிக்கும் பெரும்பாலான சுய முன்னேற்றம் சம்பந்தமான புத்தகங்களில் கொடுத்திருப்பவற்றின் சாராம்சத்தை வகைப்படுத்தி பட்டியலிடலாம் என்று நினைத்தேன்.

சுயம் சம்பந்தப்பட்டவை:

1) தன்னம்பிக்கை
2) முடிவெடுக்கும் திறமை.
3) தெளிவான சிந்தனை.
4) வாழ்க்கையில் குறிக்கோள்.
5) திட்டமிடல்.
6) மனோதைரியம்.
7) ஆக்கபூர்வமான சிந்தனை.
8) Assertiveness (மன உறுதி)
9) வருமுன் காத்தல்.
10) பொறுப்பேற்றுக் கொள்ளுதல்.
11) ஆரோக்கியமான உடல்
12) ஒழுக்கம்.
13) கடுமையான உழைப்பு

சமூகம் சார்ந்தவை:

1) இனிமையான பேச்சு
2) வாக்குத் தவறாமை.
3) நம்பகத்தன்மை.
4) பிறர் சொல்லுவதை கேட்கும் தன்மை.
5) உதவும் தன்மை.
6) Leadership skills.
7) நேர்மை.
8) நேரந்தவறாமை
9) அடுத்தவரின் சுதந்திரத்தை மதித்தல்.
10) நகைச்சுவை உணர்ச்சி
11) பிறருக்கு உண்மையாக இருத்தல்.
12) கடமை உணர்ச்சி

உத்திகள் (techniques):

1) தியானம்
2) யோகா
3) உடற்பயிற்சி
4) நம்மை நாமே motivate பண்ணிக்கொள்ள உதவும் auto suggestion techniques.
5) பேச்சுத் திறமையை வளர்த்துக்கொள்ள உதவும் உத்திகள்.
6) நேரத்தை நிர்வாகித்தல் தொடர்பான உத்திகள்.
7) Prayer (இது ஒருவிதமான goal setting technique)

கேள்விகள்:

மேலே கொடுத்திருப்பவற்றில் நமக்கு எதைப் பற்றி தெரியாது? சொல்லுங்கள். நமக்கு எல்லாவற்றைப் பற்றியும் தெரியும். ஆனால் நம்மால் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்திவிட முடிவதில்லையே ஏன்? நடைமுறைப்படுத்த ஆசை ஆனால் எது முக்கியம் என்று தெரியவில்லையே ஏன்?...

சிலவற்றையாவது நடைமுறைப்படுத்த சுத்தமாக நேரமே கிடைப்பதில்லையே ஏன்? சிலவற்றை சிலநாட்களுக்கு நடைமுறைப்படுத்தினாலும் அவற்றை தொடர்ந்து செய்ய முடிவதில்லையே ஏன்? எல்லாவற்றையும் நாம் நடைமுறைப்படுத்துவதாக நினைத்தாலும் சுற்றியிருப்பவர்கள் சரியில்லாததால் எல்லாம் வீணென்று நாம் நினைப்பது ஏன்?

So.. பிரச்சினை இருப்பது இனிமையான வாழ்க்கை எப்படி வாழ்வது என்பது தெரியாமல் இருப்பதல்ல!!!. அவற்றை நடைமுறைப்படுத்தமுடியாமையில் நாம் காரணம் கற்பித்தலில் இருக்கிறது. சரி எப்படி நடைமுறைப்படுத்துவது என்று கேட்கிறீர்களா? கணினி மற்றும் தொலைக்காட்சி இல்லாத தனிமையில் அமருவோம், சிந்திப்போம்.

(தொடரும் . . .)

- சுரேஸ் செல்வா (தேம்ஸ் நதிக்கரையில்)

69, Headstone Gardens
Tel / Fax: 020 8424 9911
Avis Property Agents
email: info@avis4u.co.uk
www.avis4u.co.uk
Sales, Lettings and Management

- Commercial Sales
- Shops, Take-aways & Off Licenses
- We need shops to Sell & Buy
- We have prospective buyers waiting
- We have competitive rate of comm.
- Residential Sales
- Residential Lettings
- All Properties Extensively marketed
- Progress Reports

We will beat any written quotations. Please contact us

020 8424 9911

- வியாபார நிலையங்கள்
- வீடுகள்
- வாங்க.... விற்க
- மற்றும் வாடகைக்கு
- நம்பிக்கைக்கும், நாணயத்திற்க்கும் நாட வேண்டிய இடம்...

வணிக ஸ்தாபனங்களும் வீடுகளும் விற்பனைக்கும், வாடகைக்கும் தேவைப்படுகிறது
வாடிக்கையாளர்கள் காத்திருக்கிறார்கள்!

அறுவைப் பக்கம்

இவையின்றி தமிழ் சினிமா இல்லை



தமிழ் சினிமா தொழில் நுட்பத்தில் உலகத்தரத்துடன் போட்டி போட்டு தயாரிக்கப்படுகின்றன. ஆனாலும் சுத்த தமிழ் சினிமாவாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமெனில், சில காட்சிகள் கட்டாயம் இருக்க வேண்டும். அவை:

1. வில்லனை கைது செய்து போலீஸ் ஜீப்பில் ஏற்றும் போது, ஜீப் பின்புறமிருந்து வில்லன் தலையை வெளியில் நீட்டிக் கொண்டே . . .

'என்னை போலீஸ்ல மாட்டி விட்டுட்டோமுன்னு சந்தோசப் படாதே! கூடிய சீக்கிரம் வெளியில் வந்து உன்னையும் உன் குடும்பத்தையும் என்ன செய்றேன்னு பார்!

2. அடிபட்டவரை அல்லது நோயாளியை அவசர வார்டில் சேர்த்து, வெளியில் ஒருவர் குறுக்கும் நெடுக்குமாக கையைப் பிசைந்து கொண்டே நடந்து கொண்டிருப்பார். அவரிடம் டாக்டர் ஸ்டெத்தாஸ் கோப்பை தோலில் போட்டுக்கொண்டே:

நல்ல வேளை! பேஷண்டை சரியான நேரத்தில் கொண்டு வந்தீர்கள். இல்லாவிட்டால் சொல்றதுக்கே கஷ்டமா இருக்குது!

3. ஹீரோ அப்பதான் டூயட் பாடிவிட்டு சந்தோசமாக வீட்டுக்குள் இருப்பார். அப்போது சில போலீஸ்காரர்கள் பரபரப்பாக வீட்டுக்குள் வருவார்கள்

இன்ஸ்பெக்டர்: ராமநாதனை கொலை செஞ்சதுக்காக உன்னை கைது பண்றோம்.

ஹீரோ : சார்! நான் எதுவுமே செய்யலை! எனக்கு ஒன்னும் தெரியாது!! நான் அப்பாவி!!!

கன்ச்டபில்: (விலங்கை கையில் மாட்டிக் கொண்டே) எல்லாத்தையும் ஸ்டேசன்ல வந்து பேசிக்கோ. நட!

4. பீச்சில் காத்துக் கொண்டிருக்கும் ஹீரோயினிடம், தாமதமாக வரும் போது

ஹீரோ: என்ன மாலா, லேட்டா வந்தேன்னு கோபமா!

ஹீரோயின்: ஹீம். என்னோட பேசாதீங்க!

ஹீரோ: ஸாரி டியர். வர்ர வழில ஒரு சின்ன வேலை!

ஹீரோயின்: இதைவிட வேறு என்ன முக்கியமான வேலை?

5. ஹீரோ தீவிரமாக வில்லன்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பார். அப்போது காமெடியன் ஒரு மரப் பெட்டியை இப்படியும் அப்படியும் ஆட்டி காமெடி வில்லனை ஏமாற்றி முதுகில் ஒரு குத்து விடுவார்.

6. குழந்தையை தூக்கிக் கொண்டு வில்லன்கள் காரில் வேகமாக போகும்போது, ஹீரோ சில மீட்டர் தூரம் விரட்டிக் கொண்டே வருவார். எனினும் வில்லன்கள் வேகமாக காரில் சென்று விடுவார்கள். அப்போது ஒரு பைக் ரோட்டில் கிடக்கும், உடனே ஹீரோ அதை நிமிர்த்தி ஏறி உட்கார்ந்து கொண்டு அதோடு ஒரு காலை ஊன்றியபடியே சாய்வாக ஒரு ரவுண்ட் அடித்து விட்டு வில்லன்களை 10 நிமிசம் விரட்டுவார். விரட்டி வரும் ஹீரோவை வில்லன் ஜன்னல் வழியாக துப்பாக்கியில் சுடவேண்டும். ஆனால் ஹீரோ லாவகமாக பைக்கை ஓட்டி காரின் ஜன்னல் வழியாக வில்லனை அடித்து குழந்தையை காப்பாற்றுவார்.

7. செய்யாத குற்றத்திற்காக தேடப்பட்டு வரும் ஹீரோ ரொம்ப நாள் கழித்து வீட்டிற்கு வருவார். அப்போது அவரின் அம்மா ஆனந்தக் கண்ணீருடன் மகனை அணைத்துக் கொண்டு மகனே எப்படிப்பா இருக்கே? என்பார். உடனே மகன், அம்மா, நான் நிரபராதின்னு நிரூபிச்சுட்டு அந்த ராமலிங்கத்தை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுப்பேன். அதுவரை இப்படிதாம்மா போலீசுக்கு ஒழிந்து வாழ வேண்டும் என்பார். மகனே உனக்கு என் கையால ஒரு வாய் சோறு ஊட்டி விடுறேன்பா. உனக்குப் பிடித்த மீன் குழம்பும் சோறும் இருக்கு என்று நடு ராத்திரியில் ஒரு தட்டில் சாதத்தை பிசைந்து ஆசையுடன் ஊட்டி விடுவார்.

8. வில்லன்கள் ஹீரோவை ஹைவேயில் விரட்டி வருவார்கள். அப்போது இரண்டு ரோடுகள் பிரியும். ஒரு ரோட்டின் ஓரமாக சின்ன டீ கடை இருக்கும். அதில் ஒரு சிறுவன் (ஹாஜா சரீப்) இருப்பார். மூச்சிறைக்க வந்த வில்லன்களில் ஒருவன், தம்பீ, இந்த பக்கம் சிகப்பு சட்டையுடன் ஒரு ஆள் வந்தானா? என்பார். உடனே அந்த சிறுவன் ஆமாண்ணே, இதோ அந்த ரோட்டில்தான் போனதை நான் பார்த்தேன் என்பான். வில்லன்களும் அச்சிறுவன் காட்டும் ரோட்டில் ஓடுவார்கள். ஆனால் ஹீரோ அதற்கு மறுபுறம் உள்ள ரோட்டிலிருந்து திரும்பி வந்து, சிறுவனைத் தட்டி கொடுப்பார்.

9. வாழ்க்கை வெறுத்து கதாநாயகன் கவலையுடன் வீட்டில் இருப்பார். தற்கொலை செய்ய முடிவெடுத்து தன் கட்டில் அருகே இருக்கும் ஒரு பாட்டிலை எடுத்து மூடியை திறந்து 'மடக், மடக்' என குடித்துவிட்டு, மயங்கி விழுவார். பாட்டில் அவர் கையிலிருந்து நழுவி விழும். அதில் சிகப்பு எழுத்தில் விஷம் என்று எழுதி இருக்கும்.

இவையல்லாமல் சில முக்கியமான அம்சங்களும் உண்டு.

நாற்பது வயது ஹீரோ கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பார். அவர் 18 வயது ஹீரோயினுக்காக உருகி உருகி காதலிப்பார்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, கருப்பு கூலிங் கிளாசுடன் சிகரெட்டை வாயில் வைத்துக் கொண்டே இருட்டில் வில்லன் விகாரமாக சிரித்துக் கொண்டே திரும்ப வேண்டும்.

ஹீரோவை முதன் முதலில் காட்டும் போது இரண்டு நிமிடத்திற்கு அவரின் சூவை மட்டும் காட்ட வேண்டும்.

டைட்டிலில் பெயர் போடும்போது 'மார்க்கெட்' இல்லாத நடிகரின் பெயரப் போடும்போது நட்புக்காக என்று கொட்டை எழுத்தில் போட வேண்டும்.

முதன் முதலாக சென்னைக்கு வந்து விட்டதை காட்ட சென்னை சென்ரல் ஸ்டேசனையும், வெளிநாட்டுக்குப் போய் விட்டதாக சொல்ல ஒரு பறக்கும் பிளைட்டையும் காட்ட வேண்டும். மக்கள் புரிந்து கொள்வார்கள்.

ஹீரோக்களுக்கு புரட்சி மலையாளி, தன்மான கன்னடன், இளைய சிப்பாய் என்ற பட்டங்களையும் மறக்காமல் போட வேண்டும்.

- எழுதியவர் பெயரை தவற விட்டு விட்டோம். மன்னிக்கவும்.

எஸ்.ஏ.ராஜ்குமார் தினமுடி நிருபர் சந்திப்பு

நிருபர்: எவ்வளவோ இசையமைப்பாளர் இருக்காங்க... ஆனா உங்க தனித்தன்மை என்ன சார்.

எஸ்.ஏ: ஸ்வரங்களை சேமிக்கிறது... என்ன அதிர்ச்சி லுக் விடறீங்க.. இப்ப பாத்தீங்கன்னா, ஏழே ஸ்வரங்கள்தான் இருக்கு. இவ்ளோ குறைச்சலா இருக்குற ஸ்வரங்கள நாம பாட்டுக்கு கன்னா பின்னான்னு வேஸ்ட் பண்ணிட்டா அடுத்த தலைமுறைக்கு ஸ்வரங்கள் இல்லாம போயிடும் இல்லையா, அதனால ஒரு படத்துக்கு ஒரு மெட்டு மட்டும்தான்னு சிக்கனமா பாட்டு போடறேன்.

ஆனாலும் ஒரு படத்துக்கு கொறஞ்சது 5 பாட்டுங்கற தமிழ் சினிமா இலக்கணத்த மீற்றதில்லை நான். என் படத்துலதான் ஒரே மெட்டு பலவித பாட்டா ஆகும்... முதல்ல ஒரு பாட்ட ஹீரோ ஜாலியா பாடற மாதிரி போடுவோம். அப்புறம் அதையே ஹீரோயின் ஜாலியா பாடுவாங்க. அப்புறம் ரெண்டு பேரும் சேந்து ஜாலியா பாடுவாங்க. அப்புறம் ஹீரோ அதே பாட்ட சோகமா பாடுவாரு. அப்புறம் ஹீரோயின் சோகமா பாடுவாங்க. அதுக்கப்புறம் ரெண்டு பேரும் சேந்து... நடு நடுல கொஞ்சம் கோரஸ் தூவுவோம்.. இதுவே குடும்ப கதைன்னு பாத்தா முதல்ல அப்பா, அப்புறம் அம்மா, அப்புறம் அவங்க வீட்டு டாமி, அப்புறம்....

நிருபர்: போதும் சார், புரிஞ்சி போச்சி.. விக்ரமன் படத்துல மட்டும்தான் நீங்க இசையமைக்கிறீங்க.. அது உங்க கொள்கையா சார்.

எஸ்.ஏ: மண்ணாங்கட்டி. வேற எவன் கூப்பிடறான்.. ஸ்வர சேமிப்பு மாதிரி உயர்ந்த விஷயத்த பண்றவனுக்கு இந்த தமிழகம் கொடுக்கற கௌரவம் இதுதான் தம்பி... ஆனா விக்ரமன் அப்படி இல்ல. விக்ரமன் ஒரு சிறந்த லோ பட்ஜெட் இயக்குனர். இன்ஃபாக்ட் அவரு வீட்டுல மளிகை சாமான் வாங்குற ப்போ போடற பட்ஜெட்டுல விழற துண்டுலதான் அவரு படமே எடுக்குறாரு..... என்னோட ஸ்வர சிக்கன கொள்கையால ஒரு மெட்டுக்கான சம்பளம்தான் வாங்குவேன்... அதான் எங்க வெற்றிக்கூட்டணியோட ரகசியம்.

நிருபர்: ஏதோ ஒரு படத்துல நடிச்சீங்க போலருக்கு

எஸ்.ஏ: ஆமாம்பா, நம்ம விஜயும் ரம்பாவும் நடிச்ச படம். பேர் ஞாபகம் இல்ல. ஒரு வடக்கத்தி இசையமைப்பாளர்தான் இசை. நான் ஒரு விழாவுல பாட்டு பாடறவனா நடிச்சேன். நான் பாட ஆரம்பிச்சதும் மக்கள் எல்லாம் ஒரு ரிலாக்ஸேசன் மூடுக்கு வந்து அல்லாரும் தம்மடிக்க வெளில போயி சந்தோசமா இருந்தாங்கன்னு பத்திரிக்கைகாரங்க எல்லாம் புகழ்ந்து கூட எழுதுனாங்களே ஆனா படம் ஊத்திகிச்சி. ராசியில்லாத பாடக நடிகர்னு முத்திரை குத்திட்டாங்க...

அதுல இன்னொரு சோகம், படத்துக்கு நாந்தான் இசையமைப்பாளர்னு தப்பா நினைச்சி நிறைய பேரு பாட்டு கேட்டு வந்திட்டாங்க. அதனால அந்த படத்தோட பாட்ட போட்டு காமிச்சேன். பாட்டெல்லாம் நல்லா இருக்கவும், அது என் இசை இல்லன்னு தெளிஞ்சி அவங்களா போயிட்டாங்க...

நிருபர்: கொஞ்ச நாளா உங்க இசையில படமே வரலையே அது ஏன் சார்.

எஸ்.ஏ: அது ஒரு சோகமான காரணம்பா. ஒரு வங்காளி தயாரிப்பாளர் படத்துக்கு இசை அமைக்க கூப்பிட்டாரு. மெட்டு ரெடி. பாட்டு போட உக்காந்தா வாத்தியக்காரங்கல்லாம் இருக்காங்க, நம்ம கோரஸ் ஆர்டிஸ்ட் மாத்திரம் வரல. கோரஸ் இல்லையின்னா இந்த எஸ்.ஏ...? இருந்தாலும் சமாளிச்சி என் வாழ்க்கைல முத தடவ கோரஸ் இல்லாம பாட்ட போட்டு முடிச்சேன்...

அப்புறம் வந்திச்சிப்பா சோதனை, பிண்ணனி இசைங்கற பேர்ல.. பிண்ணனி இசைன்னா என்ன... படத்தோட மெயின் தீமுக்கான மெட்ட 10 பொண்ணுங்க சேந்து லல்லல்லல்லான்னு வாயாலயே மியூசிக் கொடுக்கணும்... கடைசி வரைக்கும் பிண்ணனி இசை போட முடியல. இந்த சம்பவத்தால நான் மனதளவில ரொம்ப நொந்து போனேன். நான் இல்லாம விக்ரமனும் படம் எடுக்கறத நிறுத்திட்டாரு. ஆனா இப்ப 5 மெட்டு போட்டு வச்சிருக்கேன். மொத்தம் 5 X 5 = 25 பாட்டாச்சி. எல்லா கோரஸ் ஆர்டிஸ்டுங்க மட்டும் திரும்பி வரட்டும், அப்புறம் தமிழ்நாடு எங்கும் நம்ம இசைதான்.

- முகடோடி

தொலைபேசியால்

அப்பொழுதுதான் யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசி அறிமுகமாகி இளைஞர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது அக்காலத்தில்தான் துரோகி கருணா விடுதலை புலிகளால் வெளியேற்றப்பட்டிருந்தார். எனது நண்பன் சில நாட்களுக்கு முன்தான் கையடக்கத் தொலைபேசியை வாங்கியிருந்தான் அன்று முதல் அவன் கையடக்கத் தொலைபேசியையே சில நாட்களாக காதலித்தான்.

ஒருநாள் பதட்டத்துடன் என்னை நோக்கி ஓடிவந்து டோய் கோபி கருணாவை பஸ்சுக்குள் வைத்து பிடித்து விட்டார்கள் என்றான். நானும் ஆவலுடன் யார்? எப்போது? எங்கே பிடித்தார்கள்?. எதிலிருந்து அறிந்து கொண்டாய் என கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றேன் அவன் இடைமறித்து எனது தொலைபேசியில்தான் சொல்கிறது என்றான்

நானும் என்னடா இப்பொழுது தொலைபேசியிலுமா செய்திகள் சொல்லத் தொடங்கி விட்டார்கள் என்ற கேள்விகளோடு தொலைபேசியை வாங்கி ஓர் எண்ணுக்கு டயல் செய்தேன் அப்பொழுது அது "கருணாகர பஸ்வ நமத்தன்ன" எனக் கூறியது இதைக் கேட்டு விட்டுத்தான் கருணாவை பஸ்சுக்குள் அமத்தி விட்டார்கள் என நினைத்து என்னிடம் கூறியிருக்கிறான் நண்பன். உண்மையில் இதன் அர்த்தம் தாமதம் செய்து அழைப்பை சற்று தாமதித்து மேற்கொள்ளவும் என்பதுதான்.

- தமிழ்ப்பித்தன்

சினிமா

சினித்துளி

திருத்தமுடியா !

கலைவாணரின் மினியேச்சர், தாடியில்லாத பெரியார் என்றெல்லாம் முலாம் பூசப்பட்ட நடிகர் விவேக், சமீபத்தில் கோவை போய் ஜாதி சம்பந்தப்பட்ட கூட்டங்களில் கலந்து தமிழ் நாட்டில் மூன்றரை கோடி நமது தேவர் இனம். நாம் நினைத்தால் அரசியலில் எதையும் செய்ய முடியும் என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்! சினிமாவில் மற்ற சாதியை சேர்ந்தவர்களும் இருப்பதால் வேறு சாதியை சேர்ந்தவனாகவும் நடிக்க வேண்டியிருக்கிறது என்று விளக்கமும் கொடுத்தார் விவேக். 100 பெரியார் வந்தாலும் உங்களை திருத்த முடியாதுடா... என்று திரு நெல்வேலி படத்தில் விவேக் பேசிய வசனம்தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

எடை குறைப்பு !

14 கிலோ எடையை குறைத்திருக்கிறார் அஜீத். அதுவும் ஒரே மாதத்தில்! எப்படி? துருவினோம். தூண்டிலில் சிக்கியது ரகசியம்! அடையாறு அருகில் உள்ள ஒரு மைதானத்தில் தினமும் மூன்று மணி நேரம் வேர்க்க விறுவிறுக்க டென்னிஸ். உடல் எடையை குறைப்பதற்காகவே நிபுணத்துவம் பெற்ற யோகா மாஸ்டர் ஒருவரின் உதவியோடு தினமும் இரண்டு மணி நேரம் போகா. அரிசி சோறுக்கு தடா! போதாதா? கல்லூரி காளை போல் துள்ளாட்டம் போடுகிறார் அஜீத். இளவட்டமாகி போன அஜீத்தின் திட்டம் அதிரடியாக இருக்கும் போல் தெரிகிறது. சம்பள விஷயத்திலும் கறாராக இருந்தவர், பல லகரங்கள் குறைத்துக் கொள்ள முடிவெடுத்திருக்கிறார்.

ஏ.வி.எம். சிவாஜி !

ரஜினி ஏவி.எம். நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தில் நடிக்கிறார். இதற்கு சிவாஜி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த படத்தை ஷங்கர் இயக்குகிறார். வழக்கமாக ஏவி.எம். நிறுவனம் தயாரிக்கும் படங்கள் வர்த்தக ரீதியாக வெற்றி பெறும் வகையில் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக இருக்கும். ஷங்கர் இயக்கும் படங்களில் படம் பார்ப்பவர்களுக்கு ஏதாவது ஒரு கருத்தை சொல்லுவார். இந்தியன், முதல்வன், அந்நியன் படங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துக்கள் கூறப்பட்டன. சிவாஜி படத்திலும் மக்கள் தங்கள் கடமைகளை செய்ய வேண்டும். தவறினால் என்ன என்ன பாதிப்பு ஏற்படும் என்பது ரஜினி பாணியில் சொல்லப் படுகிறது.

நெளியவேணும் !

விஜய் - திரிஷா ஜோடியாக நடிக்கும் புதிய படம் "ஆதி". இந்த படத்தை சூரியன் ஆர்ட்ஸ் சார்பில் 60 படங்களை இயக்கியவரும், 30 படங்களை தயாரித்தவருமான எஸ்.ஏ. சந்திரசேகரன் தயாரிக்கிறார். இவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு விஜய்யை வைத்து தயாரிக்கும் "ஆதி" படத்தை ரமணா இயக்குகிறார். அதிரடி ஆக்ஷன், குடும்ப சென்டிமென்ட், நகைச்சுவை உள்பட அனைத்து அம்சங்களும் கலந்து இந்த படம் தயார் ஆகுகிறது. அனல் பறக்கும் வேகமிக்க இளைஞனாக விஜய் நடிக்கிறார். உயர் தொழில் நுட்பங்களுடன் இதை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிடித்தான் சொல்லுவாங்கள். பேய்ப்பாத்தா! இப்ப நான் மச்சங் காட்டவா அப்புறமா மிச்சங் காட்டவா எண்டு படிப்பாங்கள் நாங்கள் நெளியவேண்டிக் கிடக்கும்.

சிறுதுளி !

மஜா படத்தில் சிந்து துலானி ஒரு பாடலுக்கு நடனம் ஆடுகிறார். ஜெமினி மாதிரி முழு பொழுது போக்கு படம் இது என்கிறார் விக்ரம்

❖ ❖ ❖

ஆறு படத்தில் சூர்யாவின் பெயர் ஆறு முகமாம். பம்பரக்கண்ணாலே படத்திலும் ஸ்ரீகாந்தின் பெயர் ஆறுமுகம். இரு படத்திலும் இருவரும் பேசுவது லோக் கலான லாங்குவேஜ்!

❖ ❖ ❖

நடிப்பை தவிர ஓட்டல் பிசினசில் இறங்கும் ஐடியாவில் இருக்கிறார் தனுஷ். இது மாமனார் தந்த அட்வைஸ் என் கிறார்கள்.

❖ ❖ ❖

என் முழு பிறவியையும் சினிமாவில் கழிக்கும் முட்டாள் நான் இல்லை. இப்படி சொல்லி இருப்பவர் தங்கர்பச்சான்!

❖ ❖ ❖

ரஜினி நடிக்கும் சிவாஜி படத்தின் திரைக்கதையை ஒரே மூச்சில் எழுதி முடிக்கும் தீவிரத்தில் இருக்கிறார் ஷங்கர். இதற்காக செல்போன் உள்ளிட்ட அத்தனை தொடர்புகளையும் அடைத்து வைத்து விட்டதாம் இந்த குழு

❖ ❖ ❖

சூர்யா - அசின் நடித்துள்ள 'கஜினி' படம் திரையிட தயாராக உள்ளது. இந்த படம் வினியோகஸ் தர்களுக்கு திருப்தியை ஏற்படுத்தியிருப்பதால், 180 தியேட்டர்களில் திரையிட ஆங்கில பட பாணியில் ஹூடிரைலர்'கள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

விக்ரம்- அசின் நடித்து வரும் 'மஜா' மின்னல் வேகத்தில் வளர்ந்து வருகிறது. ஒரே கட்டமாக படப்பிடிப்பை நடத்தி தீபாவளிக்கு படத்தை ரிலீஸ் செய்ய தயாரிப்பாளர் ராக்லைன் வெங்கடேஷ் திட்டமிட்டுள்ளார். இந்த முயற்சியில் டைரக்டர் ஷாஜி தீவிரமாக இருக்கிறார்.

❖ ❖ ❖

சினிமாவில் அடக்க ஒடுக்கமாக வந்து போகும் லைலா இப்போது பொது நிகழ்ச்சிகளுக்கு கவர்ச்சி உடையில் வருகிறார். ஆனாலும் படம் இல்லாததால் அடுத்த படத்துக்கு மார்க்கெட் பிடிக்க வந்திருக்கிறார் என்று பேசிக்கொள் கிறார்கள்.

❖ ❖ ❖

சந்திரமுகி வெற்றியால் அதிக வாய்ப்புகள் வந்ததை அடுத்து ஜோதிகா தனது சம்பளத்தை ரூ. 40 லட்சமாக உயர்த்தி இருக்கிறார்.



விக்ரம் பதில் !

மஜா எப்படி வந்துகிட்டு இருக்கு?

ரொம்ப சூப்பரா போகுது. ஷூட்டிங் ஸ்பாட்லகூட சிரித்து சிரித்து வயிறு புண்ணாயிடுதுன்னா ஸ்கிரிப்ட் எப்படி இருக்கும்னு பார்த்துக்குங்க. அந்நியனில் சீரியஸ் கேரக்டர் பண்ணிட்டு கிட்டதட்ட ஒரு ரோபோ மாதிரி இருந்த நான் மஜாவில் சூப்பரா ரிலாக்ஸ் ஆகிவிட்டேன். டைரக்டர் ஷாபி ஒவ்வொரு சீனையும் அழகாக படமெடுக்கும் விதமே தனிதான். பிரேம் பை பிரேம் மஜா ஜாலி பட்டாசுதான்.

அந்நியன் படத்தோட ரிசல்ட் உங்களை பாதித்துள்ளதா?

வெற்றி தோல்வி ரெண்டையுமே தாங்கிக்கொள்ள வேண்டிய பக்குவம் என்னிடம் இருக்கு.

உங்களை அடுத்த கமல் என்று பலர் சொல்கிறார்கள்?

கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா, அந்த அளவிற்கு தகுதியானவன்தானா என்று என்னை நானே சுய பரிசோதனை செய்து கொள்கிறேன்.

விஜய் உங்களுக்கு நெருக்கமான நண்பாராகிவிட்டார் போல...

யெஸ். எங்களுக்குள் எவ்வித பொறாமையும் தலைதூக்கியதில்லை. சினிமாவை சினிமாவாகவும் வாழ்க்கையை வாழ்க்கையாகவும் பார்ப்பதுதான் இதற்கு காரணம். இப்படி எல்லா நடிகர்களிடமும் ஆரோக்கியமான நட்பு வளர வேண்டும்.

கதைகளை எப்படி தேர்வு செய்றீங்க?

ஒரு கதையோட ஒன்லைன் கேட்டாலே போதும் அதில் சரக்கு இருக்கா இல்லையான்னு தெரிஞ்சிடும். அப்படி அந்த ஒன்லைன் எனக்கு பிடித்துவிட்டால் சுபம் போடும் வரை காட்சிகளை கேட்பேன். பிறகு இயக்குனரின் திறமையை எடைபோடுவேன். எல்லாம் ஒத்து வரும் பட்சத்தில் தான் ஓ.கே. சொல்கிறேன்.

இப்போது களமிறங்கியிருக்கும் இளம் நடிகர்கள் பற்றி..

ஹேய்.. நானும் இளம் நடிகர்தான் பிரதர்...என்று சிரித்தவர். எல்லாருமே கலக்கிட்டுதான் இருக்காங்க. ஆனால் அவசியம் இல்லாத விரோதம் இல்லாமல் ஆரோக்கியமான போட்டி இருந்தால் அவர்களுடைய வளர்ச்சிக்கும் இன்டஸ்டிரீயோட வளர்ச்சிக்கும் நல்லா இருக்கும்.

குடும்பம் பற்றி?

சிறு குடும்பம் சீரான வாழ்வுன்னு family life ரொம்ப ஸ்மூத்தா போகுது. ஷூட்டிங் முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தா மனைவி பிள்ளைகளோட நேரம் போகும்போது தியானம் பண்றமாதிரி திருப்தியா இருக்கும் அப்படியே கண்ணை மூடி ரசிக்கிறார் சீயான்.

- அமலன்

ஆதிபராசக்தி ஜோதிடாலயம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சித்தையா சாஸ்திரி அவர்கள் ஆதிபராசக்தி அருள்கொண்டு கைரேகை, முகநாடி முலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை கூறுவார்.

* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* கைரேகை, திருமணயோகம், வாஸ்த்து சாஸ்திரம்
* நாட்டின் விசா மற்றும் பிரச்சனைகள்
* தொழில், வியாபார, லட்சுமிகரம்
* கண்திருஷ்டி – கோர்ட் – வழக்குகள்
* வாகனப் பொருத்தம்
* பிறந்த பிள்ளைகளின் ஜாதகம்

கணித்து எழுதிக் கொடுக்கப்படும்.

Mob: 07957 455 371

NEW SHANKER SUPERSTORES
231 -233 Northolt Road
South Harrow HA2 8HN

சினிமா

மனதைத் தொட்ட காட்சிகள்

ஒரு சில திரைப்படக் காட்சிகளை பார்க்கும் போது, என்னையுமறியாமல் நான் அழுதிருக் கிறேன். ஒரு வேளை அழாவிட்டாலும், துக்கமாவது தொண்டையை அடைத்திருக்கும்! என் நெஞ்சைத் தொட்ட காட்சிகள் (சட்டென்று வருவதை) சிலவற்றை பகிர்கிறேன்.

(1) கர்ணன் - சிவாஜியின் மார்பில் அம்புகள் குத்திக் குதறியிருக்க, என்.டி.ராமாராவ் உள்ளத் தில் நல்ல உள்ளம் பாடிக் கொண்டே வருவார். அப்போது நன்றாக அழுதது நினைவுக்கு வருகிறது.

(2) படிக்காத மேதையில் சிவாஜியை வீட்டை விட்டுப் போ என்று ரங்காராவ் சொன்னதும், துக்கம் தொண்டையை அடைத்தது. என் பக்கத் திலிருந்த யாரோ ஒரு பாட்டி, பயங்கரமாய் அழுதாள்.

(3) கௌரவம் படத்தில் கண்ணனை ஆத்தை விட்டே போய்டு என்று பாரிஸ்டர் ரஜினிகாந்த் சொன்னதும், பெரியம்மாவிடம் போணும்னு தோன்றது.. ஆனா எங்கே போணும்னு தோணலியே என்ற பதில் நெஞ்சைப் பிசையும்.

(4) வியட்நாம் வீடு படத்தில் உன்னைக் கரம் பிடித்தேன்.. வாழ்க்கை ஒளிமயமானதடி! என்று சிவாஜியும், பத்மினியும் பாடும் உன் கண்ணில் நீர் வழிந்தால்,

(5) நாயகன் படத்தில் பேரனைப் பார்க்கத் துடிக்கும் வேலுநாயக்கர், சைகையாலே மகளிடம் அனுமதி கோரும் காட்சி.

(6) மூன்றாம் பிறை விஜி.. சீனு விஜி.. சீனு என்று கதறும் போது, தயிர் சாதப் பொட்டலம் வீசப்படும் காட்சி.

(7) மகாநதியில் சோனாகஞ்சில் மகளைப் பார்த்ததும், ஆதரவாய் கைகளை நீட்டியபடி செல்லும் தந்தை கிருஷ்ணசாமியின் பதைப்பு.

(8) பம்மல் கே சம்பந்தத்தில், தாத்தா இறந்த வுடன் கமல்ஹாசனின் சோகமும், அதை வெளிப்படுத்தும் விதமும்.

(9) தேவர் மகனில் சிவாஜி கமல்ஹாசனிடம் நீங்க ஊரெல்லாம் சுத்திட்டு வரும் போது, அய்யா போயிட்டார்னு சொன்னா என்ன பண்ணுவீக என்று கேட்குமிடத்தில்!

(10) சிப்பிக்குள் முத்தில் ராதிகா இறக்கும் தருவாயில், துளசி மாடம் அருகே கமல் அவரை அழைத்து செல்லும் போது . . .

(11) சலங்கை ஒலி . . .டெல்லி நடன விழா பத்திரிக்கை கையில் கொடுத்து இவரு கூட பெரிய டான்ஸர் தான் என்று ஜெயப்பிரதா சொல்லும் போது.

(12) அபூர்வ சகோதரர்கள் - ரூபிணி அப்புவிட மிருந்து மோதிரத்தை கழட்டியபடி வலிக்குதா என்று கேட்கும் போதும், என் பையனை மாதிரி குள்ளமா இருந்தா பரவாயில்லை என்று ஸ்ரீவித்யா சொல்லும் போது, கமல் பார்த்தபடியே செல்லும் காட்சி.

(13) முதல் மரியாதை படத்தில் மீன் சாப்பிட்டு முடித்ததும், சிவாஜி ஆத்தா ஞாபகம் வருது புள்ளே.. என்று சொல்லுமிடத்தில்.

(14) காதலுக்கு மரியாதை படத்தில், கிளைமாக்ஸ் காட்சியின் போது விஜய்யும், ஷாலினியும் முகம் பார்ப்பதை தவிர்ப்பதும், ஷாலினி புத்தகங்களைப் புரட்டுவதும்.. இளையராஜாவின் அற்புதமான பின்னணி இசையும் மனதைப் பிசையும்.

(15) பாசமலர் படத்தில் சிவாஜியிடம், சாவித்ரி என் புருஷனை அடிக்கக்கூடாது! என்று கட்டளையிடும் இடத்தில்

(16) ராசாவின் மனசிலே படத்தில் ராஜ்கிரண் மீனாவைத் தூக்கியபடி வீதியில் சொல்லும் போது, சோலைப் பசுங்கிளியே என்று இளையரா குரலில் பாடல் ஒலிக்கும் போது!

(17) பொரஸ்ட் கம்ப் படத்தில் கல்லறையில் இருக்கும் காதலியோடு டாம் ஹாங்க்ஸ் பேசும் போது . . .

(18) ஹரிக்கேனில் டென்ஸல் வாஷிங்க்டன் விடுதலையாகி வெளியே வரும் போது . . .

(19) டைட்டானிக்கில் டிகாப்ரியோ, கேட் வின்ஸ்லெட்டிடம் நீ அழகழகாய் குழந்தை களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்! என்று மூழ்குவதற்கு முன்னால் சொல்லும் போது..

(20) E.Tயில் அந்த ஏலியன் கடைசியில் பிரியும் போது...

(21) அஞ்சலி பாப்பா இறக்கும் போது

(22) சேதுவின் எங்கே செல்லும் இந்தப் பாதை.. பாடல், காட்சி இரண்டுமே!

(23) காதல் படத்தில் கூட்டமாய் சேர்ந்து வெறியர்கள் அனைவரும் ஜஸையும், முருகனையும் அடிக்கும் போது!

(24) 7 G ரெயின்போ காலனியில் தனது மகள் பரிசாய் தந்த அத்தனை பொருட்களையும் பட்டியலிட்டுக் கொண்டு வந்து, ஒவ்வொன்றாய் சரி பார்த்து தாயார் வாங்குவதும், அப்போது ரவிகிருஷ்ணா தயங்குவதும் . . .

(25) இது நம்ம பூமியில் கார்த்திக் நான் சின்னப் பையன் என்று சொல்லி, ராதாரவியிடம் தந்தை யின் உடலை எடுத்து செல்ல மண்டியிட்டு அனுமதி கேட்கும் காட்சி

(26) ஆத்தா ஆடு வளத்துச்சு, கோழி வளத்துச்சு...நாயைவளக்கலை..இந்தசப்பாணி யைத் தானே வளத்துச்சு!

- அருண் வைத்யநாதன்

விமர்சனம்

ஒரு நாள் ஒரு கனவு

உறுத்தல் இல்லாத, நாயகன் நாயகியின் உரசல் இல்லாத, அடிதடி ஆக்ஷன் பெயரில் தலையில் இடி இறக்காத, உடன்பிறப்புகள் உறவுகளுடன் ஒன்றாக உட்கார்ந்து நன்றாக ஒரு படம் பார்க்க வேண்டுமா? இப்படி நிறைய எதிர்பார்ப்புகளுடன் படம் பார்க்க நினைப்பவர்களுக்கு பெஸ்ட் சொய்ஸ் 'ஒரு நாள் ஒரு கனவு'

மூன்று தங்கைகளை கரையேற்ற ஓயாமல் உழைக்கும் பொறுப்புள்ள அண்ணன் ஸ்ரீகாந்த். ரோட்டில் வாக்கிங் போகும் கிழடுகளையும் கிறங்கவைத்து கிண்டலடிக்கும் துறுதுறு பெண் சோனியா. ஏஜென்சி வேலை, கார் ஓட்டுவது, டியூசன் சொல்லிக்கொடுப்பது, மருந்து தயாரித்து விற்பது, ஆடுவது பாடுவது என எல்லாம் தெரிந்த ஸ்ரீகாந்துடம் விளையாட்டாக ஒரு பந்தயம் கட்டுகிறார் சோனியா. அந்த விளையாட்டு வினையாக முடிய சோனியா மீது கோபம் கொள்கிறார் ஸ்ரீ.

இதனால் சோனியாவை காதலிப்பது போல் நடித்து பழி வாங்க நினைக்கும் ஸ்ரீ ஒரு கட்டத்தில் நிஜமாகவே சோனியாவிடம் மனசை பறிகொடுக்கிறார். இருவருக்குள்ளும் பரிசுத்தமான காதல் இருந்தாலும் ஒருவருக் கொருவர் அதனை மறைத்து கண்ணா மூச்சி ஆட கடைசியில் இருவரும் எப்படி இணை கிறார்கள் என்பதுதான் கதை.

பாசிலின் அச்சில் தனது நடிப்பை ஊற்றியிருக்கும் ஸ்ரீகாந்த் முதல் முறையாக சரியாக வார்த்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சோனியாவின் அறைக்குள் புகுந்து வேலைக்கான கூலியைகேட்டுதுடுக்குத்தனம் செய்வதாகயிருக்கட்டும். நெஞ்சுக்குள் மறைத்து வைத்த காதல் கண்களில் எட்டிப்பார்த்துவிடாமல் எச்சரிக்கையாக நடந்துக் கொள்ளும் காட்சியாகயிருக்கட்டும் அட ஸ்ரீகாந்தின் விதவிதவிதமான பாவங்கள் இத்தனை நாள் எங்கே ஒளிந்து கிடந்தது? நடனத்திலும் பல ஸ்டெப் முன்னேறி இருக்கிறார் என்பது பாடல் காட்சிகளில் அவர் போடும் ஸ்டெப்களிலிருந்து தெரிகிறது.

டயலாக்கே தேவையில்லை... சோனியா வின் கண்களே காட்சிக்கு ஏற்றபடி பேசி விடுகிறது. செல்லக்கோபம், லேசான சிணுங்கல் என ஸ்ரீகாந்தின் மனசில் குடியேற தவிக்கும்போது சோனியாவுக்கு அப்ளிகேஷன் போட நினைக்கும் இளசுகள் ஏராளம்.

டபுள் மீனிங் காமெடிகளை கேட்டு காது புளித்துப் போயிருக்கும் நிலையில் இளவரசு, சிசர் மனோகர், சுகுமார், சத்யனின் இயல்பான காமெடி நிஜமான சிரிப்பை வர வழைக்கிறது. குடையை அக்குளுக்குள் வைத்துக்கொண்டு அரட்டையடிக்கும் சிசர் மனோகரின் பாடிலாங்வேஜ் பிரமாதம்....

இளையராஜாவின் ஆர்மோனியம், ஆனந்தகுட்டனின் ஒளிப்பதிவு. உபயத்தில் ஸ்ரீகாந்தின் அழகான குடும்பத்தை அறிமுகப்படுத்தும் காட்சியில் அட.. இதாம்ப்பா பாசில் என்று பொய் கலக்காத புகழுரையை தட்டிச் செல்கிறார் இயக்குனர். இப்படி நிறைய காட்சியில் கவிதை வடித்திருக்கும் பாசில், படத்தின் வேகத்திற்கு ஆங்காங்கே ஸ்பீட் பிரேக் போட்டிருப்பதை தவிர்த்திருந்தால் திரைக்கதையின் பயணம் நிறைவாக இருந்திருக்கும்.

சித்தவைத்திய முறையில் ஒரே ஒரு மருந்திற்கான பார்முலா மட்டும்தான் இருப்பதாக கூறும் ஸ்ரீகாந்த், திடீரென்று பல மருந்துக்களுக்கான பார்முலாவை எடுப்பது எப்படி? பாசில்சார் கொஞ்சம் கவனித்திருக்க வேண்டாமா?

இளையராஜாவின் இசையில் 'காற்றில் வரும் கீதமே....' பாடலை கேட்டு முடிக்கும் போது தியானம் செய்த திருப்தி மனசுக்குள் இதமாக இறங்குகிறது.

கோகுல கிருஷ்ணாவின் வசனம் வழக்கத்தைவிட இதில் வீரியம் குறைந்து இருக்கிறது. பல இடங்களில் காட்சியும் வசனமும் வேறு வேறு தண்ட வாளங்களில் நகர்கிறது. பாசில்-இளையராஜா கூட்டணியில் 'ஒரு நாள் ஒரு கனவு' பிரகாசிக்கிறது.

நன்றி சினிசவுத்

LinkAIR Travels Limited

Main agent for Sri Lankan Airlines & Qatar Airways

Anytime, Anywhere - You can get there with Link Air
We can get you the best fare, the others won't compare
Make sure you book with Link Air

IATA

SriLankan

Colombo from £410
India from £360
Hongkong, Bangkok
Singapore
Kuala Lumpur from £360

QATAR AIRWAYS
القطرية

Colombo from £390
India from £295
Dubai from £215
Singapore from £390
Kuala Lumpur from £390
Bangkok from £380

Our Phone lines are
open from 7am to 11pm
7 days a week

Please ring
020 8665 0206

Or bring on-line, take your TIME
and plan your TRAVEL at your LEISURE

www.linkair.co.uk



Linkair Travels Ltd.,
361 London Road,
Croydon CR0 3PB

GIOVANN WINDOWS

73 Allenby Road, Southall, Middx. UB1 2EX

All types of Windows and Doors for Sale!

We Supply windows and doors,
(especially for 3 roomed houses)
Porch Door plus Window for only £790

Package

2x7 sided Bay Windows,
Box Room, Bathroom Windows
Front & Back Doors
all for £2500 onwards.

Double Glazed:

- Porch Door plus windows for £790 onwards
- Also Mahogony & Oak finish
- Anywhere in England

Call Gopal on
020 8578 2294
07796 474 427 / 07903 742 016

GLOBAL Estates

Making your way into property.....

Shop	Place	Rent	Turn over	Available lease	Accomodation	Price
NEWS/CON/TOBC	WEST EALING LONDON, W13	£14, 250 p.a.	T/O £10,000 p.w. + Newsbill £1,600 p.w. + Bus passes £4,500 p.w.+ Nat lottery £4,500 p.w. + Pay point £500 p.w.	25 Yrs lease	N/A	£139 950+ S.A.V
NEWS AGE/OFF LIC	EPSOM SURREY, KT17	£16, 000 p.a.	T/O £6,000 p.w. + Bus passes 100 p.w.+ Newsbill £1000 p.w. + paypoint £1400 p.w.	12 Yrs lease	Flat 2 beds (Rental income £9,000 p.a.)	£65, 000 + S.A.V
NEWS/CON/TOBC	NOTTING HILL LONDON ,W11	£15, 500 p.a.	T/O £3,500 p.w. + Newsbill £750 p.w.	Renewable 6 ½ yrs lease	N/A	£24,995 + S.A.V
NEWS/CON/TOBC	ISLINGTON LONDON ,N1	£2,500 p.a.	T/O £5 000 p.w. + Phone cards £1000 p.w.	New lease available	N/A	£29, 995 + S.A.V
NEWS/CON/TOBC	LONDON ,N3	£ 8000 p.a.	T/O £7,500 p.w. + newsbill £500 p.w. + National lottery £2,000 p.w. + Phone cards £300 p.w. + Bus pass £2,000 p.w. + Paypoint £2,000 p.w.	New 15 yrs lease	Flat (Rental income £250)	£65,000 +S.A.V
NEWS/CON/TOBC	NEW SOUTH GATE, LONDON, N11	£8, 000 p.a.	T/O £7,000 p.w. + Newsbill £250 p.w. + Pay point £3,000 p.w. + Topping up £1,000 p.w. + Phone cards £700p.w.	14 Yrs lease	N/A	£79,000+S.A.V

239 Mitcham Road
Tooting,London
SW17 9JG

Tel: 02086825100
Fax: 02086825110
www.global-estate-agents.co.uk

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

நான்காம் ஆண்டு வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 3 தேர்கள்

11.09.2005 ஞாயிறு காலை 10.00 மணி இரதோற்சவம்

4th Chariot Festival - 2005 (3 Chariots) -11.09.2005 Sunday 10.00am

கடந்த ஆண்டு போல் விநாயகப் பெருமான் புதிய 22 அடி உயர

ஆறித்தேரில் முருகன் வள்ளி தெய்வானை, சுந்தரேஸ்வரர்,

அம்பாள் சகிதம் மூன்று தேர்களில் பவனி வருகிறார்கள்.

முதல் முறையாக இங்கிலாந்தில்

பறவைக்காவடி, பொய்க்கால் குதிரை ஆட்டம் என்பன நடைபெறுகிறது.

திருவிழா காலங்கள் Sep 2nd -Sep 13

இரவு 7.30 மணிக்கு கலைமாமணி நாவேந்தர் நாகை முகுந்தன் அவர்களது

சிறப்பு சொற்பொழிவு (மகாபாரதம் அன்றும், இன்றும், என்றும்)

தினமும் காலை, மாலை சுழற்று நாதஸ்வர வித்வான் பஞ்சமூர்த்தி

குழுவினரின் நாதஸ்வர கச்சேரி நடைபெறும்

முதியோர் முகமிப்பு இல்லம்

எமது ஆலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்க வீடுகளற்று

தவிக்கும் முதியோர்களுக்கு ஆச்சரமத் தேவைகளுடன்

அமைந்த வீடு கட்டும் பணியில் இறங்கி உள்ளது.

இதன் மதிப்பீட்டுத்தொகை கட்டுமானச் செலவு

£27,390

கட்டட முடக்கிலைக்கு கை கொடுக்க எம் தமிழர் எம் முன்வர்.

நிதியளித்து உதவுமாறு தாழ்மையுடன்

Requested by Tamil Support

Foundation UK



Sri Karpaha Vinayagar Temple

2-4, Bedford Road, Walthamstow, London E17 4PX

Tel: 020 8527 3819